# ரஸூலுல்லாஹ்வின் வாழ்க்கையில் அற்புதமும் நிகழ்வும்

மௌலவி
எம்.ஐ.அப்துர்ரஸ்ஸாக் எம்.

யாழ்ப்பாணம்

JPL
C1870

[illegible]
[illegible]
யாழ்ப்பாணம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# வஹியின் ஒளியில்
# அசலும் நகலும்

KOHA JPL
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

**மௌலவி எம். ஐ. அப்துர் ரஸ்ஸாக்**
பீ. ஏ. (சிறப்பு) எம். ஏ. (கார்டும்)
அறபு, இஸ்லாமிய நாகரிக விரிவுரையாளர்,
மொழி, பண்பாட்டுத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

யாழ்ப்பாணம்
85177
1870cc
187oc.c
85177c.c

வெளியீடு :

களுத்துறை ஜமாஅத் சபை
163, ஹில் வீதி,
களுத்துறை தெற்கு.

# WAHIYN NILALIL ASHALUM NAHALUM

*Original and the copy in the light of divine reveaiation*

*Author :*

*Moulavi M. I. Abdur Razzak*
B. A. (Hons.) M. A. (Khartoum)
*Lecturer in Arabic and Islamic civilization*
*Department of Languages and cultural studies,*
*University of Jaffna, Sri Lanka.*

*Published by :*

Kalutara Jama:th Council
163, Hill Street,
Kalutara South,
Sri Lanka.

*Printed by :*

K. V. Printers,
386, Clock Tower Road, Jaffna.

Gift : Rs. 20-00

முதற்பதிப்பு ஜனவரி 1987

மிக விரைவில் வெளிவர இருக்கும்
ஆசிரியரது ஏனைய நூற்கள் :

1. இஸ்லாமிய நாகரிகம் :

க. பொ. த. (உயர்தர) வகுப்புப் பரீட்சைக்கு இஸ்லாமிய நாகரிகத்தை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களின் நன்மை கருதி முழுக்க முழுக்கப் பாடத்திட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட நூல்.

2. நடைமுறைப் பிரச்சினைகளும் தீர்வுகளும் :

இன்றைய இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அரசியல், பொருளாதார, கல்வி மற்றும் சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு அல்-குர்ஆன், ஸுன்னா ஸலபுஸ்ஸாலிஹூன்களான நன்மக்களின் வழிகாட்டுதல்கள்அடிப்படையில் தீர்வுகளைப் பெறும் நோக்கத்தோடு எழுதப்பட்டது.

3. அறுபது மணித்தியாலங்களில் அறபு மொழி :

எல்லா வயதினருக்கும் தரத்தினருக்கும் ஏற்ற வகையில் இலகு மொழியில் தொகுக்கப்பட்ட முப்பது பாடங்களையும் இலகு படுத்தப்பட்ட இலக்கண விளக்கங்களையும் கொண்ட நூல்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

85177

அன்பளிப்பு : ரூபா 20-00

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர்

## சு. வித்தியானந்தன் அவர்கள்

வழங்கிய

# அணிந்துரை

அல்-குர்ஆன் முஸ்லீம்களின் வேதகிரந்தம். முழு மனித சமுதாயத்தையும் ஒழுக்கப் பாதையில் நெறிப்படுத்திச் செல்வதில் அல்-குர்ஆன் அதன் தோற்ற காலந்தொட்டே வெற்றி கண்டு வந்திருக்கின்றது. அரேபிய நாட்டுக்கு வடக்கிலும் தெற்கிலும் உரோம, பாரசீக நாகரிகங்கள் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்திலே தான் அல்-குர்ஆனின் தோற்றம் ஏற்பட்டது. அவ்வாறிருந்தும் அன்றைய அரேபிய சந்ததியினர் அல்-குர் ஆனில் மாத்திரம் நம்பிக்கை கொள்ளக் காரணமாக அமைந்தது அதன் விழுமிய நாகரிக அமைப் பென்றால் மிகையாகாது. அல்-குர்ஆன் இறைவனால் வஹிமூலம் அருளப்பட்ட ஒன்று என்பதும் மனித சக்திகளுக்கு அப்பாற்பட்ட புதுமையான ஒரு படைப்பு என்பதுமே இதற்குகாரணம்.

இவ்வுயரிய பொக்கிஷத்தில் விரவிக் கிடக்கும் முத்தான போதனைகளில் சிலவற்றை நயமான தமிழில் தமிழ் பேசும் நல்லுலகுக்கு அறிமுகப்படுத்தும் பணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரபு, இஸ்லாமிய நாகரிக விரிவுரையாளர் மௌலவி எம்.ஐ.அப்துர் ரஸ்ஸாக் அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது.

அர்-குர்ஆன் பார்வையில் இம்மை நிலையற்றது. மறுமை வாழ்வு தான் நிலையானதும், இன்பத்தையோ துன்பத்தையோ முழுமையாக அனுபவிக்கக் கூடியதுமாகும். இவ்வுண்மையைத் தெரியவைத்து மனிதனை வழி நடாத்துவதற்காக, அவன் அன்றாடம் ஒட்டியுறவாடும் பல பொருள்களோடு மறுமையின் பேறுகள் ஒப்பிடப்பட்டு ஆராயப்பட்டுள்ளன. முன்னையதை நகல் எனவும் பின்னையதை அசல் எனவும் குறிப்பிடும் நூலாசிரியரின் ஒப்பீட்டு நோக்கு சிறப்பாக அமைந்திருக்கின்றது. அல்-குர்ஆன் கூறும் மறைவான விடயங்கள் உண்மையானவை என்பதை இஸ்லாமியப் போதனைகளின் அடிப்படையில் நிறுவிச் செல்லும் நூலாசிரியர், இடைக்கிடை தர்க்க ரீதியான விஞ்ஞான ரீதியான தரவுகளையும் சமர்ப்பித்திருப்பது நூலுக்கு மெருகூட்டுவதாகவிருக்கின்றது.

பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இறுதித் தூதர். தனது ஒழுக்க சீலமான வாழ்க்கையின் மூலம் அனைத்து நெஞ் சங்களையும் கவர்ந்தவர். மனித வாழ்வின் அனைத்து துறைக்குமான அழகிய முன்மாதிரிகளைக் கொண்டவர். மாணவனாக, ஆசிரியனாக, படைத்தளபதியாக, கணவனாக, தகப்பனாக-இவ்வாறே அடுக்கிக் கொண்டு போகலாம் - வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் வழிகாட் டும் ஒளிவிளக்காகத் திகழ்பவர். அன்னாரதும் அன்னாரது 'ஸுன்னா' எனப்படும் வாழ்வுநெறியினதும் அவசியம் பற்றி இந்நூல் நல்ல பல விளக்கங்களைத் தருகின்றது. அன்னாரால் அறிமுகப்படுத்தப்பட்ட 'இஸ்லாமியஷரீஆ' எனும் இஸ்லாமிய வாழ்க்கைமுறை நிறத்தால், மொழியால், குலத்தால் இனத்தால், தொழிலால் மனித சமுதாயத் தைக் கூறுபோட விரும்பவில்லை. முழு மனித சமுதாயத்தையும் ஒன் றிணைப்பதே இஸ்லாத்தின் நோக்கம். இதனாலேயே அதன் கட்டளைகள் எவ்விடத்திலும் எவராலும் எளிதிற் கடைப்பிடித்தொழுவதற்கேற்ற முறையில் எளிதுபடுத்தப்பட்டுள்ளன எனும்கருத்தை இந்நூல் எடுத் தோதுகின்றது.

அறிவு கொடுக்கப்பட்டவன் மனிதன். இவ்வற்புத சக்தி மண்ணை ஆட்கொள்ளக் கூடியது. இதுவே எக்காலத்திலும் மனித சமுதாயத் தின் முன்னேற்றத்திற்கும் எழுச்சிக்கும் காரணமாக அமைந்தது. மேலும், ஆரம்ப காலந்தொட்டே தூதுத்துவங்களின் அடிப்படை யாகவும் ,சோதனைகளையும் வேதனைகளையும் களைந்தெறியும் சாதன மாகவும். மனிதனுக்குள்ளே மனிதத்துவத்தை மட்டிடும் கருவி யாகவும் இருந்து வந்துள்ளது எனும் நூலாசிரியரின் கருத்து நூலின் 93ம் பக்கத்தில் இடம்பெற்றிருக்கின்றது. இவ்வரிகள் ஆசிரியரது எதிர்பார்புக்களைத் துல்லியமாக எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின் றன. அறிவுப் பணி செய்தஅல்-குர்ஆனைப் பெற்றுள்ள முஸ்லீம் சமு தாயம் உறக்கம் களைந்து அறிவுக் கண்களை அகலத் திறக்க வேண்டும் என்பது அவரது ஆசையாக இருக்கலாம்.

இஸ்லாமிய கற்கைத்துறையில் உயர்கல்விபெறும் மாணவர்களுக்கு விசேடமாகவும், அனைவருக்கும் பொதுவாகவும் பயன்படக்கூடிய வகையில் அமைந்துள்ள இந்நூல் அனைவரதும் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இவ்வரிய முயற்சியை மேற்கொண்ட மௌலவி எம்.ஐ.அப்துர் ரஸ்ஸாக் அவர்களைப் பாராட்டுவதோடு அவரிடம் இருந்து இன்னும் பல ஆக்கங்களை எதிர்பார்க்கிறேன்.

**பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்**
துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

*30-01-1987*

# ஏன் வெளியிடுகிறோம்?

திசை தடுமாறித் திக்குமுக்காடும் வழிப்போக்கனுக்கு ஒரு வழிகாட்டிதேவை. கடலின் அலைகளுக்கு நடுவே சிக்கிக்கரைகாணத் துடிக்கும் மனிதனுக்கு ஒரு பிடிதேவை. மனிதனாகப் பிறந்து மனிதத் தன்மையை மறந்து, அறம்துறந்து, மறம்தேர்ந்து வாழ்ந்தவர் மத்தியில் ஒரு மறைதேவைப்பட்டது. இம்மாமறையே தெய்வீகத் திருமறை அல்-குர்ஆன்.

அல்-குர்ஆன் போதனைகள் காலத்தால் அழியாதவை. காலத்தின் சவால்களை நின்று எதிர்கொள்ளக்கூடியன. அவ்வாறான போதனைகளில் சிலவற்றை மௌலவி எம். ஐ. அப்துர்ரஸ்ஸாக் அவர்கள் இந்நூலில் இலகுதமிழில் அழகு தெவிட்டாத வகையில் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

நிம்மதியற்றுத் தவிக்கும் மனித சமுதாயத்துக்கு அல்-குர்ஆன் போதனைகளின் தேவை மிக அவசியமானதும் அவசரமானதுமாகும். இவ்வகையில் தமிழ்பேசும் மக்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமே.

சமூகசேவையிலும் சன்மார்க்கத்தொண்டிலும் ஈடுபாடுடைய மௌலவி எம். ஐ. அப்துர்ரஸ்ஸாக் அவர்களது இந்நூலை எமக்கு வெளியிடக் கிடைத்தமை எமதுபெரும் பாக்கியமே,

இந்நூலை அழகுற அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் கு. வி. அச்சகத்தாருக்கும் வெளியீட்டில் உதவிய நண்பர்களுக்கும் பெரியார்களுக்கும் எங்கள் ஆழியநன்றிகள்.

களுத்துறை ஜமாஅத் சபை
163, ஹில்வீதி,
களுத்துறைதெற்கு.

ஜனவரி 30, 1987.

# சமர்ப்பணம்

மனித சமுதாயத்தை நேர்வழிப்படுத்தும் பொறுப்
புக்காக இப்புவியின்கண் தோற்றுவிக்கப்பட்ட
சிறந்த உம்மத்துக்கு,
நபிமார்களின் அனந்திரகாரர்களான உலமாக்களுக்கு,
நன்மையை ஏவித் தீமையை விட்டும்
மனிதர்களைத் தடுக்கும் தஃவாப் பணியில்
ஈடுபட்டுள்ள அனைவருக்கும்,
இந்நூலை சமர்ப்பணம் செய்கின்றேன்.

# முன்னுரை

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அல்ஹம்துலில்லாஹ். சாந்தியும் சமாதானமும் நபிகள் கோமான் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது அன்புத்தோழர்கள், தாபிஈன்கள், தபஉத்தாபிஈன்கள். முத்தகீன்கள், ஸாலிஹீன்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

மனித சமுதாயத்தின் ஈருலக வெற்றிக்காக அருள்மறை அல்-குர்ஆன் அள்ளி வழங்கும் வளமான போதனைகளைத் தமிழ் பேசும் நல்லுலகுக்கு அறிமுகம் செய்யவேண்டும் எனும் ஆசை என்துள்ளத்தின் அடித்தளத்தில் வேரூன்றிப் பல ஆண்டுகளாகின்றன. அல் - குர்ஆன் போதனைகளை அடிநாதமாகக் கொண்டு இஸ்லாத்தின் கலாசாரம், நாகரிகம், சரித்திரம் போன்ற பல துறைகளை உள்ளடக்கி பல கட்டுரைகளை எழுதக்கூடிய வாய்ப்பு எனக்குக்கிடைத்தாலும் இத்துறையில் நூலுருவில் வெளிவரும் எனது முதல் முயற்சி இதுவாகும். இம்முதல் முயற்சி அல்-குர்ஆன் பற்றியதாகவும் அதன் தூதைத் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நினைவூட்டுவதாகவும் அமைந்து விட்டதை எண்ணிப்பார்க்கும் போது பேருவகையடைகின்றேன். அல்-குர்ஆன் வசனங்களை அணுகும் போது அவற்றின் அபார சக்திகளுக்கு முன்னே எனது அறிவு ரீதியான, ஆத்மீக ரீதியான பலவீனங்களையுணர்ந்து கொண்டேன். எனவே மிகவும் நிதானத்தோடும் அவதானத்தோடும் நூலை எழுத வேண்டியிருந்தது.

அல்-குர் ஆன் பற்றி எண்ணிறந்தநூற்கள் இன்று உலக மொழிகளில் தோன்றியுள்ளன. பொதுசனத்தொடர்பு சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி முதலியனவூடாகவும் அல்-குர்ஆன் போதனைகள் நினைவூட்டப்படுகின்றன, அல்-குர்ஆன் பற்றி நிறைய நூல்கள் தமிழில் இருந்தாலும் தெவிட்டாச் சுவைமிக்க அதன் கருத்துக்களைக் கவர்ச்சியானமுறையில் விளக்கும் நூற்களின் குறையை உணர்ந்தேன். எனவே ஆரம்பத்தில் அல்-குர்ஆன் போதனைகளை மையமாக வைத்து ஒரு சில கட்டுரைகளைச் சில முக்கிய கல்வி நிறுவனங்களின் சஞ்சிகைகளுக்கு எழுதினேன். இவ்வாறு எழுதிப் பிரசுரமாகிய மூன்று கட்டுரைகளையும் இந்நூல் கொண்டுள்ளது. அவற்றை ஈண்டு ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது எனக் கருதுகின்றேன்.

''மறைவான விடயங்கள் பற்றி அல்-குர்ஆன் '' எனும் மகுடத்திலான முதலாவது கட்டுரை இரு பகுதிகளாக நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகத்தின் முத்திங்கள் வெளியீடான ''இஸ்லாமிய சிந்தனை'' ஏப்ரல் - யூன், ஜுலை - செப்டெம்பர் 1981 இதழ்களில்

வெளியாகியது. இதையடுத்து யாழ் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் வெளியீடான 'இன்கிலாப்' மூன்றாவது இதழில் 'வஹியின் நிழலில் அசலும் நகலும் - ஒரு ஒப்பீட்டாய்வு' எனும் தலைப்பின் கீழ் ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டது. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முஸ்லிம் மஜ்லிஸின் வெளியீடான 'யாழ்பிறை' "அல்-குர்ஆன் பார்வையில் பெருமானாரும் அவரது ஸுன்னாவும்" எனும் மகுடத்திலான கட்டுரையைப் பிரசுரித்தது. இம் மூன்று கட்டுரைகளோடு இன்னும் இரண்டு புதிய கட்டுரைகளையும் உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்திருக்கின்றது.

இந்நூலுக்குப் பொருத்தமான ஒரு பெயரைத் தேர்ந்தெடுப்பதில் பல இடர்பாடுகள் ஏற்பட்டன, கடைசியாக முதற்கட்டுரையின் தலைப்பையே நூலுக்கு இடுவதாகமுடிவெடுத்தேன். இம் முடிவுக்கு நான் வருவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், அவற்றுள் முக்கியமான ஒரு காரணத்தை மாத்திரம் ஈண்டு ஞாபகப்படுத்திக் கொள்வது போதுமானது எனக் கருதுகின்றேன். மனிதன் பசிதீர உண்டு, களி தீர உடுத்து, போகம் தீரப்புணர்ந்து வாழ்ந்தால் மாத்திரம் வெற்றியடைய முடியாது. அவனது வாழ்க்கையின் அடிநாதமாக வஹியின் வெளிப்பாடுகள் அமைய வேண்டும். இம்மை வாழ்க்கை அசலான மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கையின் நகல் வடிவமே. எனவே நகலைக் கண்டு அவன் அசலை மறந்து விடாது நகலின் ஊடாக அசலின் இன்பத்தை அடைய முனைய வேண்டும், இவ்வுயரிய குறிக்கோளுக்காகவே அல்-குர்ஆன் அருளப்பட்டது என்பதைச் சுட்டுவதற்காகவே இப்பெயரைப் பொருத்தமானதாகக் கண்டேன். இவ்வகையில் இந்நூல் வாசகர்களிடம் ஒரு பாரிய பொறுப்பை ஒப்படைக்கின்றது. இந்நூலை எழுதுவதற்கு தூண்டிய இக்லாஸான எனது எண்ணமும் நிறைவேறுவதைக் கண்டு உவகையடைகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள ஐந்து கட்டுரைகளும் முக்கியமான ஐந்து விடயங்கள் பற்றிப்பேசுகின்றன. மனிதனின் அன்றாடத் தேவைகளான உணவு, உடை, உறையுள், வாழ்க்கைத்துணை, தொழில் முதலியவற்றோடு வேறும் பல ஆன்மீகம் சார்ந்த விடயங்களை ஒப்பிட்டு அல்-குர்ஆன் எவ்வாறு விளக்கம் தருகின்றது என்பதை ஆராய்வதாக முதற்கட்டுரையும், அல்லாஹ்வின் பிரத்தியேக கட்டுப்பாட்டின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இம்மை மறுமை விடயங்

களின் யதார்த்த தன்மைபற்றி ஆராய்வதாக இரண்டாவது கட்டுரையும் அமைகின்றது. அல்-குர் ஆன் வாழ்க்கையில் செயற்படுத்த முடியாத ஒரு வேதாந்தம் எனும் தப்பான கருத்தை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தி இஸ்லாமிய உம்மத்தை அனாதையாக்கும் தீய எண்ணத்துடன் மேலைத்தேய அறிஞர்களும் அவர்களது சீடர்களும் 'ஸுன்னா' பற்றி ஏற்படுத்தியிருக்கும் தப்பான எண்ணத்தை போக்கி அல்-குர்ஆன் ஊடாக ரசூலுல்லாஹ் அவர்கள்பற்றியும் அவர்களது ஸுன்னா பற்றியும் தெளிவான கருத்துக்களைத் தருவதாக மூன்றாவது கட்டுரை அமைந்திருக்கின்றது.

மனிதனது சத்திக்குமேல் சுமைகளைச் சுமத்தி அவனைக் கஷ்டத்துக்குள்ளாக்க இஸ்லாம் விரும்பவில்லை. மாறாக ஏற்கனவே அவன் மீது சுமத்தப்பட்டிருந்த சுமைகளையும் பாரங்களையும் இறக்கி அவன் மேல் பூட்டப்பட்டிருந்த விலங்குகளைக் களைந்தெறியும் நோக்கத்துடனேயே அல்-குர்ஆன் அருளப்பட்டது. இவ்வகையில் இஸ்லாமிய கட்டளைகளை எளிதாக்கி சாதாரண மனிதனும் பின்பற்றியொழுகும்படி செய்வதில் நான்கு மூலாதாரங்களினதும் பங்களிப்பை எடுத்துக்காட்டுவதாக நான்காவது கட்டுரை அமைந்திருக்கின்றது. இறைவனை அறிவதற்கு முதற்படி மனிதன் தன்னை அறிவது தனது பெறுமதியை அறிவது. இவ்வறிவானது அவனிடம் மனவலிமையையும் திடசங்கற்பத்தையும் ஏற்படுத்த வல்லது. ஒவ்வொரு மனிதனும் தனக்குள் மனிதத்தன்மையைக் கண்டு வாழ முற்படுவதன் மூலமே அல்லாஹ்வின் பிரதிநிதித்துவத்தை இப்பூவுலகின் கண் நிலைநாட்டலாம் எனும் உயரிய கருத்தை அடிநாதமாகக் கொண்டதாகக் கடைசிக் கட்டுரை அமைந்திருக்கின்றது.

நூலை முழுமையாக வாசித்து, கருத்துகள் ஜீரணிக்கக்கூடியனவா என்பதைத் தீர்மானிப்பது அன்பின் வாசக நெஞ்சங்களைச் சார்ந்தது.

இந்நூலைத் திறம்பட வெளிக்கொணர்வதில் பலர் எனக்குதவி புரிந்திருக்கின்றார்கள். அவர்கள் அனைவரையும் இவ்விடத்தில் நினைவு கூருவது எனது கடமை எனக்கருதுகின்றேன்.

அச்சுப் பிரதிகளைப் 'புரூப்' பார்ப்பதில் உதவிய யாழ் பல்கலைக் கழக கலைத்துறை முதலாம் வருட மாணவன் மௌலவி எஸ். எச் கலீலுர்ரஹ்மான் அவர்களுக்கும் முகாமைத்துவத்துறை மூன்றாம் வருட மாணவன் முஹம்மத் பிஷ்ரி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அதேபோன்று தேவையான நேரத்தில் ஆலோசனைகள் தந்துதவிய சக விரிவுரையாளர் மௌலவி கே. எம். எச். காலிதீன், கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி ஜனாப் இனனூ, அதிபர் ஜனாப் எம். எஸ். ஷிஹாபுத்தீன் அவர்களுக்கும் அணிந்துரை வழங்கி உதவிய எனது கௌரவத்துக்குரிய துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கும் பல வகைகளில் உதவியும் ஒத்தாசையும் புரிந்த யாழ்ப் பாணம், காதி அபூபக்கர் வீதி, மத்ரஸது முஹ்யித்தீன் நிர்வாக சபையினருக்கும், குறிப்பாக அதிபர் மௌலவி ஏ. எம். ஏ. அஸீஸ் (காஸிமி), ஜனாப்களான எம். எஸ். ரஹீம், எஸ். ஏ. சுல்தான் அப்துல் காதர் ஆகியவர்களுக்கும் பாணந்துறை இஸ்லாமியப் பேரவையினருக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள் என்றும் உரித்தாகும். இந்நூலை அழகிய முறையில் வெளியிட்டுதவிய களுத்துறை ஜமாஅத் சபையினருக்கும் அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் கு. வி. அச்சகத்தாருக் கும் எனது நன்றிகள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் இச்சிறியவனின் முயற்சியை அங்கீ கரித்து அருள் புரிவானாக.

மௌலவி. எம். ஐ. அப்துர்ரஸ்ஸாக், எம். ஏ.

32. ஸ்ரீ. தர்மராம மாவத்தை,
களுத்துறை தெற்கு
20-01-87

# பொருளடக்கம்

அத்தியாயம் ஒன்று — பக்கம்

**வஹியின் ஒளியில் அசலும் நகலும் - ஒரு ஒப்பீட்டாய்வு — 1 - 28**

வஹியின் முக்கியத்துவம் — அல்-குர்ஆன் நாகரிகம் — அல்-குர்ஆன் போதனைகள் — மூன்று விடயங்கள் — அசலும் நகலும் — தக்வா — தக்வாவின் அவசியம் — தக்வா உடையாரின் பண்புகள் — இறையச்சத்தின் சிறப்புக்கள் — இம்மை, மறுமை — மறுமைவாழ்வு — சிறந்த வியாபாரம் — ஜிஹாதின் விளக்கம் — வாழ்க்கைத்துணை — அடிக்குறிப்பு.

அத்தியாயம் இரண்டு

**மறைவான விடயங்கள் பற்றி அல்-குர்ஆன் தரும் யதார்த்தக்கருத்துகள் — 29 - 51**

இன்றியமையாத அம்சங்கள் — அல்-குர்ஆனை அணுகுதல் — மறைவானவற்றில் நம்பிக்கை — எல்லாம் அறிந்தவன் அல்லாஹ் — யுகமுடிவு — மேற்கத்தியப் பெண்ணின் ஏமாற்றம் — மழைநீர் — மழைதேடித்தொழுதல் — பிறப்பின் இரகசியம் — குழந்தை குழாயில் தரித்ததா? — நாளை நடப்பது என்ன? மரணவேளையும் இடமும் — மரணத்தின்பின் நடப்பது என்ன? மறுமையில் நிகழ்வது என்ன? மறுமை தேவை தானா? அடிக்குறிப்புகள்.

அத்தியாயம் மூன்று

**அல்-குர்ஆன் பார்வையில் பெருமானார் (ஸல்) அவர்களும் அன்னாரது ஸுன்னாவும் — 52 - 64**

பெருமானாரை மறுப்பது அறியாமை — பொறுப்புக்களை நிறைவேற்றியவர் — ஸுன்னா என்றால் என்ன? ஸுன்னாவும் ஹிக்மத்தும் — ஸுன்னாவின் பிரிவுகள் — ஸுன்னாவை இழிவு படுத்துவதில் மேற்கத்தியரின் முயற்சி — புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்கள் — வழிதவறியோர் — இஸ்லாமியத் தண்டனைகளில் ஸுன்னாவின் பங்கு — 'ஸுன்னா' தெய்வீக வெளிப்பாடே — அடிக்குறிப்புகள்.

அத்தியாயம் நான்கு

**இஸ்லாத்தின் கட்டளைகள் எளிதானவை** 65 - 89

*மனிதகுலம் ஒன்றே — இஸ்லாத்தின் கட்டளைகள் எளிதானவை — மதுவிலக்கும் அல்-குர்ஆனும் — நடைமுறைச்சாத்தியமான சட்டங்கள் — 'இத்தா'வுக்கான காரணங்கள் — இஸ்லாத்தின் கட்டளைகள் — சமயோசிதமானவை — நாஸிக், மன்ஸூக் — பளுவான கட்டளைகள் — ஸுன்னாவின் பங்களிப்பு — முன்னைய இறைதூதர்களில் இருந்து பெருமானார்வேறுபடும் விதம் — முன்மாதிரியான வாழ்க்கை — வணக்கவழிபாடுகள் — சமூகஉறவாடல் — தொழிலாளி — முதலாளி உறவு — பெருமானாரின் குடும்பவாழ்க்கை — மூடநம்பிக்கைக்குசாவுமணி — இஜ்மாஉம் கியாஸும்*

அத்தியாயம் ஐந்து

**மனிதன்! அவன் யார்? அவனது பெறுமதி என்ன?** *90 - 100*

# வஹியின் ஒளியில் அசலும் நகலும்

## ஒரு ஒப்பீட்டாய்வு

மனிதன் இவ்வுலகிலும், மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கை நிலைமைகளிலும் வெற்றியடைய வேண்டும் எனும் ஒரே ஒரு நோக்கத்திற்காகவே அல்லாஹ், காலத்திற்குக் காலம் இவ்வுலகின்கண் நபிமார்களையும், ரசூல்மார்களையும் அவர்கள் மூலமாக ஸுஹ்புகள், வேதங்கள் எனும் அமைப்பில் நல்ல பல வாழ்க்கைத் திட்டங்களையும் அருளிச் செய்தான். இந்த வரிசையில் சிறப்புமிக்க அகில உலக இரட்சகன் ரப்புல் இஸ்ஸத்தான அல்லாஹ்விடம் இருந்து, நபிமார்கள், ரசூல்மார்கள் அனைவருக்கும் தலைவர் ஸய்யிதுல்முர்ஸலீனான ரசூலே அக்ரம் முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலமாக, இறையச்சம் உடையவர்களுக்கு வழிகாட்டும் ஹுதன்லில்-முத்தகீனான அல்-குர்ஆன் அருளப்பட்டது, மனிதனிடம் காணப்படும் புலனறிவுகள், பகுத்தறிவு, சிந்தனைத் தெளிவு முதலியன சம்பூரணமற்றவை என்பதை அல்-குர்ஆன் வலியுறுத்திக் கூறுவதுடன், பிறரின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் ஒரு உணர்வும் இம்மனிதனிடம் மறைந்திருக்கின்றது என சூசகமாக எடுத்துக்காட்டுகின்றது. எனவே, அவனது வாழ்க்கையின் அடித்தளமாக வஹியின் வெளிப்பாடுகள் அமைய வேண்டும் என அல்லாஹ் எதிர்பார்க்கின்றான். இவ்வாறு அவனது வாழ்க்கை அமைந்துவிட்டதென்றால் அதுவே அவனது ஈடேற்றத்துக்கு வழி எனவும், இதற்கு மாற்றமாக அமைந்துவிட்டால் அது அவனது அழிவுக்கும், இழிவுக்கும் காரணமாக அமையும் எனவும் சரித்திரச் சான்றுகளுடன் அல்-குர்ஆன் வலியுறுத்தி நிற்கின்றது.

### வஹியின் முக்கியத்துவம்

வஹியின் முக்கியத்துவத்தை பின்வரும் அல்-குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்தக்கூடியனவாக இருக்கின்றன.

''அல்லாஹ் (நேருக்கு நேராகப்) பேசுவதற்குரிய தகுதி மனிதரில் எவருக்கும் இல்லை. எனினும் வஹியின் மூலமாகவோ,

அல்லது திரைக்கப்பால் இருந்தோ, அல்லது தான் விரும்பியதைத் தன் அனுமதியின்மீது வஹியை (ப் பெற்று) அறிவிக்கக்கூடிய ஒரு தூதரை அனுப்பி வைத்தோ - (மனிதரிடம் பேசுகிறான்) நிச்சயமாக அவன் மேலானவனும் ஞானமுடையவனுமாவான்''[1]

''(நபியே!) இவ்வாறே உமக்கு நம்முடைய கட்டளைகளில் உயிரானதை (குர்-ஆனை) வஹி மூலமாக அறிவிக்கின்றோம். (இதற்கு முன்னர்) நீர் வேதம் இன்னதென்றும், விசுவாசம் இன்னதென்றும் அறிந்தவராக இருக்கவில்லை. ஆயினும் (இவ்வேதத்தை உமக்கு நாம் வஹி மூலம் அறிவித்து) இதனைப் பிரகாசமாகவும் ஆக்கி நம் அடியார்களில் நாம் விரும்பியவர்களுக்கு இதனைக் கொண்டு நேரான வழியைக் காண்பிக்கின்றோம். (நபியே!) நிச்சயமாக நீர் (இதன் மூலம் ஜனங்களுக்கு) நேரான வழியைக் காண்பிக்கின்றீர்''[2]

## அல்குர்ஆன் நாகரிகம்

எனவே வஹியின் மூலமாக அருளப்பட்டிருக்கின்ற அல்-குர்ஆனே முஸ்லிம்களது வாழ்க்கை உயிர்நாடி. இவ் ஆற்றிலிருந்தே உலூமுல் குர்ஆன் எனப்படும் அல்-குர்ஆனை அடியொற்றி வளர்ந்த ஹதீஸ், விரிவுரை, பிக்ஹ் முதலாம் பல துறைகள் இஸ்லாத்தில் வளர்ச்சியுற்றன. அல்-குர்ஆன் அருளப்பட்ட காலை வாழ்ந்த சமுதாயத்தினர்களான ஸஹாபாப் பெருமக்கள் இதனோடு ஏற்படுத்திக் கொண்டிருந்த தொடர்பு முழு உலகத்தையே வியப்பில் ஆழ்த்தக் கூடியதாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு ''அக்காலத்தில் பெருநூற்கள், ஆராய்ச்சிகள், விஞ்ஞானம், கலாசாரம், நாகரிகம் போன்றன இருக்கவில்லை என்பது இதற்குக் காரணமாக அமையவில்லை. உண்மையில் அன்று பற்பல கலைகள் கலாசாரங்கள், நாகரிகங்கள் எல்லாம் இருந்தன. எடுத்துக்காட்டாக உரோம நாகரிகம் அன்று இருந்தது. இன்றுங்கூட அதன் சட்டம் (அல்லது அச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை) ஐரோப்பாவின் சட்டமாக இருந்து வருகின்றது. கிரேக்க நாகரிகம் தோற்றுவித்த கலைகள், தத்துவங்கள் இருந்து வந்தன. இவைதாம் மேனாட்டுச் சிந்தனையின் பின்னணியாக என்றும் வந்துள்ளன. இவை மட்டுமல்ல; பாரசீக நாகரிகம், அதன் கலை, கவிதை, புராணக் கதைகள், மதங்கள், சட்டங்கள் ஆகியனவும் இருந்து வந்தன.

அக்காலத்தில் வேறுபல நாகரிகங்களும் இருந்தன. அரேபிய நாட்டுக்கு வடக்கிலும் தெற்கிலுமாக உரோம நாகரிகமும் பாரசீக நாகரிகமும் கொடிகட்டிப் பறந்தன. போதாக்குறைக்கு அரேபியாவிலே யூத, கிறிஸ்தவ சமூகங்கள் வாழ்ந்து வந்தன. அவ்வாறிருந்தும்

அந்நிகரற்ற சந்ததி ஆரம்ப கட்டத்திலேயே, இஸ்லாத்தைப் புரிந்து கொள்வதற்கு அல்-குர்ஆனை மட்டுமே தனது ஊற்றுக் கண்ணாக ஏற்றுக்கொண்டது ஏன்? மேற்சொன்ன உலக நாகரிகங்களையும், பண்பாடுகளையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பது இதற்குக் காரணமல்ல எனத் தெளிவாக விளங்குகின்றது. ஆழ்ந்து சிந்தித்துத் தான் அவர்கள் இஸ்லாத்துக்கு அல்-குர்ஆனில் இருந்து மட்டும் விளக்கம் பெற்றார்கள்'' 3

அன்று உலகில் காணப்பட்ட ஏனைய நாகரிகங்கள், கலாசாரங்கள் சிந்தனைகள் என்பன மனித சக்திகளைக் கொண்டு உருவாக்கப்பட்டன வாகக் காணப்பட்டன. அல்-குர்ஆனோ சிருஷ்டிகர்த்தாவினால் வஹி மூலம் அறிவிக்கப்பட்டதாக இருந்தது. வஹி மூலம் அறிவிக்கப்படாத வொன்றாக இருந்திருந்தால் அன்றைய இலட்சிய சமுதாயம் இதிலிருந்து இஸ்லாத்துக்கான விளக்கத்தைப் பெற்றிருக்கமாட்டாது. இக் கருத்தை அல்-குர்ஆனே தெளிவுபடுத்தும்போது, ''இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லா தவரிடமிருந்து வந்திருந்தால், இதில் அநேக (தவறுகளையும்) முரண்பாடுகளை (யும்) அவர்கள் காண்பார்கள்.'' 4 என அழகாக விளக்குகின்றது.

## அல் – குர்ஆன் போதனைகள் :

அல்-குர்ஆன் போதனைகள் கருத்துக்கள் உயரிய இலக்குகளை அடைந்து கொள்ளும் துறையில் மனிதனை வழிநடாத்திச் செல்லுகின்ற ஒழுக்க வழிகாட்டிகளாக இருக்கின்றன. 5 (Moral guidence along the path of noble achievements) இதனாலேயே அல்-குர்ஆன், அதன் தோற்றக் காலத்திலேயே உத்பத் இப்னுரபீஆ, வலீத்பின் முஹைறா, லபீத் இப்னு அபீரபீஆ போன்ற இலக்கிய வல்லுனர்களையும் கவர்ந்து விட்டது. கிப்பன் எனும் சரித்திராசிரியர் அல்-குர்ஆனைப்பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது, ''அது ஒரு முழுமையான நாகரிகம்'' (It is a complete civiliaztion) எனக் குறிப்பிடுகின்றார். 6 இவ்வாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் இது அவ்வக்காலங்களில் வாழ்ந்த சிந்தனையாளர்களையும், தத்துவ வாதிகளையும், அறிஞர்களையும் கவர்ந்து வந்துள்ளதை சரித்திரம் தெளிவாகப்பதிவு செய்து வைத்திருக்கின்றது. இந்திய விடுதலை வீரரான முஹம்மத் அலி ஜௌஹர் அவர்கள் அல்-குர்ஆனைப் பற்றிய தமது கருத்தைத் தெரிவிக்கும்போது, ''நான் ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் கல்விகற்றவன்; எனினும், குர்ஆனைக் கற்றுத் தேர்ந்தநாளே நான் உண்மையாகக் கல்விகற்ற நாள்'' 7 எனக்குறிப்பிடுகின்றார். முதன்முதலாக அல்-குர்ஆனுக்கு ஆங்கிலத்தில் பொருள்

எழுதிய (The meaning of the glorious quran) முஹம்மத் மர்மடியூக் பிக்தோல் (Muhammed marmaduke pickthall) அவர்கள் தன்னுடைய கருத்தை வெளியிடும் போது, அல்-குர்ஆனைக் கற்றுக் கொண்ட எவரும், அதன் வழிகாட்டுதல்களுக்கும் சட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்போர் நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவர் என்பதை மறுக்கமாட்டார்'', எனத் தெரிவிக்கின்றார். இவ்வாறு அல்-குர்ஆன் பலரதும் கண்ணியமான கருத்துக்களுக்கு ஆளாகியதற்கான காரணம் என்ன என்பது பற்றிச் சிந்திக்கும் போது, இதன் போதனைகள் அனைத்தும் மனித இயற்கைக்குப் பொருந்துவனவாகவும், மனித இயற்கைச் சுபாவங்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதுமே காரணம் எனலாம்.

## மூன்று விடயங்கள் :

அல்-குர்ஆனில் இடம் பெற்றுள்ள விடயங்களை மூன்று முக்கிய பிரிவுகளுள் அடக்கலாம்.

1. ஈமான் எனும் விசுவாசத்துடன் தொடர்புடைய அல்லாஹ், மலாயிகாமார்கள், வேதங்கள், நபிமார்கள், மறுமை வாழ்க்கை முதலியனவற்றின் மீது நம்பிக்கையையேற்படுத்தும் வகையில் அமைந்தன. இவற்றை மார்க்க அடிப்படைகள் எனக்கூறலாம்.

2. மன செயற்பாடுகளினூல் நிகழக்கூடிய நற்குணங்களின்பால் மனிதர்களைத் தூண்டுவனவாக அமைந்தவை. இவற்றை நற்குண அறிவுகள் என அறிமுகப்படுத்தலாம்.

3. உறுப்புகளினூல் நடைபெறும் செயல்கள் பற்றி விளக்கம் தரும் வகையில் அமைந்திருப்பவை. இவற்றைச் சட்டவறிவுகள் என இனம் காட்டலாம்.

முழு மனித சமுதாயத்தின் இம்மை, மறுமை ஈடேற்றத்துக்குத் தேவையானவற்றைத் தத்ரூபமான முறையில் யதார்த்தக் கருத்துக்களுடன் விளக்குவதில் அல்-குர்ஆனுக்கு இணை அல்-குர்ஆனே என ஆணித்தரமாகக் கூறலாம். இவற்றை மனித மனங்களில் பதியச் செய்வது இலேசான ஒரு கருமமன்று என்பதையும் அல்-குர்ஆன் உணர்ந்திருக்கின்றது. இதனூலேயே இப்பாரிய கைங்கரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக அல்-குர்ஆன் பல்வேறுபட்ட முயற்சிகளை எடுத்திருக்கின்றது. அவற்றில் முக்கியமானவற்றைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

1. தகுந்த உதாரணங்கள் காட்டி விளக்கம் கொடுத்தல்.

2. சரித்திர சம்பவங்களை நினைவுபடுத்தித் தெளிவுண்டாக்குதல்.

3. சமயோசிதமான முறையில் கருத்துக்களை வெளியிடல்.

4. சட்டங்களைப் பொறுத்தமட்டில் பொறுப்புக்களில் கடினமில்லாத முறையிலும் (அதமுல் ஹறஜ்), கஷ்டங்களைக் கொடுத்து இலேசு கொடுக்கும் முறையிலும் (தக்லீலுத் தகாலீப்), படிப்படியான பயிற்சிகளின் இறுதியில் சட்டமாக்கப்படும் முறையிலும் அமைந்தவை.

5. நபித்தோழர்களின் கேள்விகளுக்கு விடையளிக்கும் பாணியில் அமைந்த வசனங்கள்.

6. மனிதனின் அன்றாடத் தேவைகளான ஊண், உடை, உறையுள், மனைவி, வியாபாரம் அல்லது தொழில் முதலியனவற்றோடு வேறும் பல விடயங்களை ஒப்பிட்டு ஆன்மீகம் சார்ந்த அவை எவ்வளவு லௌகீகம் சார்ந்த இத்தேவைகளைவிட மனிதனுக்கு அவசியமானவை என்பது பற்றியும் அவற்றின் பலாபலன்கள் பற்றியும் விளக்கக்கூடிய வகையில் அமைந்தவை. சுருக்கமாக விளக்கம் தருவதாயின், மனிதனின் மரணத்துக்குப் பின்னுள்ள முடிவில்லாத வாழ்க்கையில் அவனுக்கு இன்பத்தையும், சுகண்டியையும் தரக்கூடியனவற்றின்பால் அவனது சிந்தனையைத் திருப்புவதே இவற்றின் நோக்கம்.

## அசலும் நகலும்

இக்கட்டுரையின் நோக்கம், நான் மேலே தொகுத்துத் தந்தவற்றில் கடைசியாகக் குறிப்பிட்ட விடயம் பற்றி விரிவாக ஆராய்வதே. அல்-குர்ஆனில் ஆங்காங்கே பல இடங்களில் அசலிய்யத்தான சில விடயங்களை இலகுவான முறையில் மனிதன் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் நகலான அவற்றையொத்த பல விடயங்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இவற்றை இனம் காட்டி நகலைவிட அசல் எவ்வளவு மேலானதாக இருக்கின்றது என்பதை அவை இரண்டையும் ஒப்பிட்டு ஆராய்ந்து விளக்குவதாகும். அசலும் நகலும் மனிதனுக்கு எடுத்துக்காட்டப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டுள்ள அல்-குர்ஆனின் போதனுமுறை தனிச்சிறப்பு வாய்ந்ததும் இணையற்றதுமாகும்.

பின்வரும் அல்-குர்ஆன் வசனங்களை ஒரு கணம் உன்னிப்பாகக் கவனியுங்கள்.

''ஹஜ்ஜு (அதற்கெனக்) குறிப்பிடப்பட்ட (ஷவ்வால்துல், கஅதா, துல் ஹஜ் ஆகிய) மாதங்களில்தான். ஆகவே, அவற்றில் எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை (த்தன்மீது) கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜு (மாதத்தின் பத்தாம் தேதி) வரையில், சம்போகம், துர்வார்த்தை பேசுதல், சச்சரவு செய்துகொள்ளுதல் கூடாது. (இவைகளைத் தவிர்த்து) நீங்கள் என்ன நன்மை செய்தபோதிலும், நிச்சயமாக அல்லாஹ் அதனை அறிந்து, அதற்குரிய கூலி தருவான். தவிர, (ஹஜ்ஜுடைய யாத்திரைக்கு வேண்டிய) உணவுகளை (முன்னதாகவே) சித்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால், (நீங்கள்] சித்தப்படுத்திக் கொள்ள வேண்டியவைகளில் எல்லாம் மிக மேலானது நிச்சயமாகப் பரிசுத்த தன்மைதான். ஆதலால், அறிவாளிகளே! நீங்கள் (குறிப்பாக ஹஜ்ஜுடைய காலத்தில்) எனக்குப் பயந்து (மிக்க பக்தியோடும் நடந்து) கொள்ளுங்கள்'' 8

''ஆதமுடைய மக்களே! உங்களுடைய மானத்தை மறைக்கக் கூடிய ஆடையையும் அலங்காரத்தையும் நிச்சயமாக நாம் உங்களுக்கு அருள் புரிந்திருக்கின்றோம். எனினும், (பாவங்களை மறைத்து விடக்கூடிய பயபக்தியென்னும்) பரிசுத்த தன்மையின் ஆடைதான் மிக்க மேலானது. இதுவும் அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். (இதனைக்கொண்டு) அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவார்களாக!'' 9

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களைக் கூர்ந்து கவனிக்கும் போது, இறையச்சம் எனும் பரிசுத்தத் தன்மையின் உயர்வையும் மேன்மையையும் இவ்வசனங்கள் எடுத்து விளக்குவனவாக இருப்பதையுணரலாம். எமது அன்றாட அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை ஆகிய இரண்டும் பரிசுத்தத் தன்மையுடன் ஒப்பிடப்பட்டு இவற்றைவிடப் பரிசுத்தத் தன்மையின் உயர்வு அப்பட்டமாக விளக்கப்பட்டிருக்கின்றது.

## தக்வா

உணவும் உடையும் மனிதனது அதிமுக்கியத் தேவைகள். உணவின்றி உயிர்வாழ்வது சாத்தியப்படாது. இதே போன்று உடையின்றியும் அவன் சமூகத்துடன் உறவாடிக் கூடி வாழமுடியாது. சீதோஷ்ண நிலை வேறுபாடுகளில் இருந்து தனது உடம்பைத் தற்காத்துக் கொள்வதற்கும், மானத்தை மறைப்பதற்கும், தன்னை அழகுபடுத்தி நாகரிகமானவனாகவும், பண்பட்டவனாகவும் காட்டிக்கொள்வதற்கும் அவனுக்கு ஆடை அவசியப்படுகின்றது. உலகத்தில் வாழ்

கின்ற உயிரினங்கள் அனைத்துக்கும் பசியுணர்வு ஏற்படுகின்றது. இயற்கை அமைப்புக்களுக்கேற்ப அவை தத்தமது பசியைத் தீர்த்துக் கொள்வதற்காக வெவ்வேறு வகைகளான உணவுப் பதார்த்தங்களைப் புசிக்கின்றன. மனிதன் தனது பசியைத் தீர்த்துக்கொள்வதற்காக ஆடு, மாடு, ஒட்டகம் முதலிய மிருகங்களின் இறைச்சியை உபயோகித்துக் கொள்கின்றான். இதே நேரத்தில் புலி, கரடி, சிங்கம், முதலை முதலியன நரமாமிசத்தை விரும்பியுண்ணக் கூடியனவாக இருக்கின்றன. எனவே, பசியுணர்வு, உயிருள்ள அல்லாஹ்வின் படைப்புக்கள் அனைத்தினதும் ஒரு பொதுப்பண்பாக இருக்கின்றது. ஆனால், 'தக்வா' எனும் உளப் பரிசுத்தம் ஆறறிவு படைத்த மனிதனிடம் மாத்திரம் இடம்பெறக்கூடியவொரு பண்பு. எனவே, மற்றைய உயிரினங்களுக்கும் பொதுவான ஒரு பண்பு, மனிதனிடமும் இருக்கின்றது என்பதால் மனிதன் ''அஷ்ரபுல் மக்லூகாத்'' எனும் படைப்புகளிலெல்லாம் மேலான படைப்பு எனும் சிறப்புப் பெயரைப் பெறமுடியாது. ஏனைய உயிரினங்களிடம் காணப்படாத ஒரு விசேஷமான பண்பை அல்லாஹ் மனிதனிடம் எதிர்பார்க்கின்றான். இப்பண்பையே அல்லாஹ் 'தக்வா' எனும் உளப்பரிசுத்தம் அல்லது இறையச்சம் என அறிமுகப்படுத்துகின்றான்.

ஆகாரத்தைத் தேடிப் பெற்றுக்கொள்வதில் மனிதன் தனது முயற்சியை ஈடுபடுத்தலாமேயொழிய, தனது ஆகாரத்தைப் படைத்துக் கொள்ளும் திறமையவனிடம் கிடையாது. மாறாக, அல்லாஹ் தான் மனிதனுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும் உணவளிக்கின்றான். மனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும்வரை அவன் முயற்சி செய்தாலும் செய்யாவிட்டாலும் அவனுக்கான ஆகாரத்துக்கான பொறுப்பை அல்லாஹ் ஏற்றிருக்கின்றான். பின்வரும் அல்-குர்ஆன் வசனங்களைக் கவனியுங்கள்.

> ''அல்லாஹ்தான் உங்களைப் படைத்தவன்; உங்களுக்கு ஆகாரம் கொடுப்பவனும் அவனே. பின்னர், அவனே உங்களை மரிக்கச் செய்கின்றான். (அதன்) பின்னர், அவனே உங்களை உயிர்ப்பிப்பான். இவற்றில் எதையும் செய்யக்கூடியவை உங்கள் தெய்வங்களில் ஏதும் உண்டோ? அவர்கள் வைக்கும் இணைகளில் இருந்து, அவன் மிக்க உயர்ந்தவன். மாதூயவன்'' 10

> ''(நபியே! நீர் கூறும்:) நிச்சயமாக அல்லாஹ்தான் (யாவருக்கும்) ஆகாரமளிப்போனும் அசைக்கமுடியாத பலசாலியுமாவான்'' 11

> ''தரித்திரத்துக்காக (ப் பயந்து) உங்கள் குழந்தைகளை நீங்கள் கொலை செய்யாதீர்கள். (ஏனென்றால்) உங்களுக்கும் அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம்'' 12

ஆனால், இறையச்சம் எனும் பரிசுத்தத் தன்மைக்கான அல்லாஹ்வின் வாக்குறுதி சில தியாகங்களை நிபந்தனைகளாக வைத்தேசெய்யப்பட்டிருக்கின்றன. நிபந்தனையற்ற வாக்குறுதி இல்லை. எனவே, 'தக்வா'வை வளர்த்துக்கொள்வதில் நாம் தியாகங்கள் பலவற்றை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றோம்.

உடையைப் பொறுத்தமட்டில் மனிதன் மாத்திரமே உடைகளைக் கொண்டு மேனியை மறைத்துக் கொள்ளக்கூடியவனாக இருக்கின்றான். ஏனைய உயிரினங்கள் இறக்கும் வரை பிறந்த மேனியுடனேயே இவ்வுலகத்தில் வாழ்ந்து செத்துமடிகின்றன. அவற்றிற்கு வெட்க உணர்ச்சியென்பதோ, நாகரிகமாக, அழகாகப் பிறர்முன் தோற்றமளிக்க வேண்டும் எனும் உணர்வோ கிடையா. ஆரம்பத்தில் இலைகுழைகளைக் கொண்டு தனது அங்கங்களை மறைத்துக் கொண்ட மனிதன் அறிவு முதிர்ச்சி பெற்று இன்று நாகரிகமான முறையில் உடையுடுத்தவும் அழகான முறையில் பிறர்முன் தோற்றமளிக்கவும் கற்றுக் கொண்டான். மேனியை மறைத்துக் கொள்வதற்காக மனிதன் அணியும் ஆடைகளைவிட உளப்பரிசுத்தம் தான் அவனுக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்றது என்பதே அல் - குர்ஆனின் கருத்து.

## தக்வாவின் அவசியம் :

உணவு, உடை முதலியவற்றின் அவசியம் எவ்வாறோ, அதைவிட ஒருபடி கூடுதலாக மனிதனுக்குத் "தக்வா" எனும் பரிசுத்த உள்ளத்தின் அவசியத்தை விளக்கக்கூடியனவாக நாம் ஏற்கனவே அவதானித்த அல் - குர்ஆன் வசனங்கள் அமைந்திருக்கின்றன. உணவும், உடையும் பெரும்பாலும் மனித உடம்பைக்கட்டிக்காத்துப் பேணுவதற்கே உதவி செய்கின்றன, மனித உடலினுள்ளே இணந்தெரியாத வகையில் அமைந்திருக்கும் அவனது ஆத்மா புறக்கணிக்கப்படக் கூடியவொன்றல்ல. நிச்சயமாக ஆத்மாவானது இறையச்சம் அற்றதாகவும், பரிசுத்தமற்றதாகவும் ஆகிவிட்டால் அவன் உண்ணும் உணவைக் கொண்டோ, உடுத்தும் ஆடைகளைக் கொண்டோ சாதகமான விளைவுகளை அவனால் அடைந்து கொள்ள முடியாமற் போவதுடன் அவனால் உலகத்துக்கும் எதுவித நன்மையுமேற்படாது.

இங்கே உளப்பரிசுத்தம், உணவு, உடை என்பவற்றுடன் ஒப்பிடப்பட்டு அதன் சிறப்பு விளக்கப்பட்டிருப்பதில் ஒரு முக்கிய கருத்துப் பொதிந்திருக்கின்றது. நாம் உண்ணக்கூடிய உணவு உடம்பின் பல உறுப்புக்களின் தொழிற்பாட்டுக்கு ஆட்பட்டதன் பின்புதான் இரத்தமாக மாறி நம்முடலில் சத்தியைச் சேர்க்கின்றது. நாம் உயிர்வாழும் வரை நமது இருதயம் அடித்துக் கொண்டேயிருக்கின்றது. இதன்

மூலம் இரத்தமானது உடம்பின் பல உறுப்புக்களுக்கும் பகிர்ந்தளிக் கப்படுகின்றது. நாம் உட்கொள்ளும் உணவு முதன்முதலாக உமிழ் நீரினால் ஐதானதாக ஆக்கப்பட்டுப் பற்களினால் மெல்லப்படுகின்றது. வயதைப் பொறுத்து நாம் உட்கொள்ளும் உணவுவகைகளும் அமை வதால் இதற்கேற்றாற்போன்று பற்களும் நமக்கு அளிக்கப்படுகின்றன. ஆறுவயதுக்குழந்தையிடம் இருபது பற்கள் தான் இருக்கும் பதின் மூன்று வயதை அக்குழந்தையடையுமுன் நிலையான பற்கள் அனைத் தும் தோன்றிவிடுகின்றன. ஆனால் கடைவாய்ப் பற்கள் நான்கும் பதினெட்டு வயதுக்குப்பின்தான் வெளிப்படுகின்றன. பருவமடைந்த ஒருவரின் பற்களின் எண்ணிக்கை முப்பத்திரண்டாக இருக்கும், பற் களைக் கொண்டு மெல்லப்பட்ட உணவு நாவினால் தொண்டைக்குழிக் குள் தள்ளப்படுகின்றது, குடலையடைந்த உணவு அங்கே சில மணித் தியாலங்கள் தங்கியிருக்கும். உணவு சீரணமடைவதற்குதவியாக ஒரு சாறு இங்கே சுரக்கப்படுகின்றது. உணவில் இருக்கக்கூடிய சத்துக்கள் குடற்சுவரில் அமைந்திருக்கும் சுரப்பிகளால் உறிஞ்சப்பட்டு உடம்பின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்படுகின்றன. ஆடையைப் பொறுத்த மட்டில்கூட எவ்வளவோ சிரமங்களை மேற்கொண்டதன் பின்தான் அவற்றைக் கொண்டு தன்னை அலங்கரித்துக் கொள்ளக் கூடிய நிலைக்கு மனிதன் வருகின்றான். எனவே, ''தக்வா'' எனும் உளப்பரிசுத்தமும் இலேசாகப்பெற்றுக் கொள்ளக் கூடியவொன்றல்ல. பல தியாயங்களை மேற்கொள்வதன் இறுதியிலேதான் இதை அடைந்து கொள்ளலாம் என்பதை இவை மூலமாக விளங்குகின்றோம்.

## தக்வா உடையோரின் பண்புகள் :

இவ்வாறான தியாகங்கள் பலபற்றி அல் - குர்ஆன் வகுத்துக் காட்டியிருப்பதை இனிக்கவனிப்போம்.

இதுவேதநூல் இதில் சந்தேகமே இல்லை.. பயபக்தியுடையவர் களுக்கு, (இது) நேரான வழியைக்காட்டும். 13

(பயபக்தியுடைய) அவர்கள் மறைவானவற்றை (உண்டென்று) விசுவாசங் கொள்வார்கள். தொழுகையையும் கடைப்பிடித் தொழுகுவார்கள். நாம் அவர்களுக்கு அளித்த (பொருள் முதலிய) வற்றிலிருந்து (தானமாகச்) செலவும் செய்வார்கள். 14 அன்றி (நபியே!) அவர்கள் உமக்கு அருளப் பெற்ற (இவ் வேதத்) தையும், உமக்குமுன் (இருந்த நபிமார்களுக்கு) அரு ளப் பெற்றவற்றையும் விசுவாசங் கொள்வார்கள். (நியாயத் தீர்ப்புநாளாகிய) மறுமையையும் (உண்மை என்று) அவர்கள் உறுதியாக நம்புவார்கள். 15

இத்தகையோர் தாம், தங்கள் இறைவனின் நேரான வழியில் இருக்கின்றனர்கள். இவர்கள் தாம் நிச்சயமாகச் சித்தியடைந்த வர்கள். 16

இவ்வசனங்களில் பயபக்தியுடையவர்களின் நல்ல பல பண்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளதன் மூலம் பயபக்தியை அடைந்து கொள்வதற்கு இவற்றை வழிகளாக எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. பின்வரும் வசனத்தில் நோன்பும் 'தக்வா' வைப்பெற்றுக் கொள்வதற்கான ஒரு தியாகம் என்பது விளக்கப்பட்டிருக்கின்றது.

விசுவாசிகளே! உங்களுக்கு முன்பிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே, உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கின்றது. (அதனால்) நீங்கள் பரிசுத்தவான்களாகலாம். 17

இன்னொரிடத்தில் ஹஜ்ஜின் போது செய்யப்படுகின்ற புனித கிரியைகளின் மகத்துவத்தை அல் - குர்ஆன் விளக்கி விட்டு "எவன் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பெற்ற புனிதச் சடங்குகளை கண்ணியப்படுத்துகின்றானோ, அது அவனுடைய இருதய பரிசுத்தத்தன்மையை அறிவிக்கிறது" 18 எனக்கூறி பரிசுத்த தன்மையை வளர்ப்பதில் ஹஜ்ஜுக் கிரியைகள் அளிக்கக் கூடிய பங்களிப்புப் பற்றி விளக்கிக் காட்டுகின்றது. இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளத்துணை புரியும் இன்னும் சில கருமங்கள்பற்றி அல் - குர்ஆன் கருத்துத் தெரிவிக்கும் போது,

"அநாதைகளின் பொருளை — அவர்கள் பிராயமடையும் வரையில் — நியாயமான முறையிலன்றித் தொடாதீர்கள். அளவை (சரியான அளவு கொண்டு) பூரணமாக அளவுங்கள். எடையை நீதமாக நிறுங்கள். யாதோர் ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் நாம் நிர்ப்பந்திப்பதேயில்லை. நீங்கள் எதைக்கூறிய போதிலும், (ஆதலால் பாதிக்கப்படுவோர் உங்கள்) உறவினராயினும் (சரியே) நீதத்தையே கூறுங்கள். நீங்கள் அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியைப் பூரணமாக நிறைவேற்றுங்கள். நீங்கள் நல்லுணர்ச்சி பெறும் பொருட்டே, இவற்றை உங்களுக்கு உபதேசிக்கின்றான். நிச்சயமாக இதுதான் என்னுடைய நேரான வழியாகும். அதனையே நீங்கள் பின்பற்றுங்கள்; மற்றவழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை, அவனுடைய வழியிலிருந்து உங்களைப்பிரித்துவிடும். நீங்கள் பரிசுத்தவான்களாவதற்காக இறைவன் இவற்றை உங்களுக்கு நல்லுபதேசம் செய்தான்' (என்றும் கூறுவீராக)" 19

இறைவணக்கத்தின் பால் மக்களை அழைப்பது, ஸகாத் தர்மம் முதலியன கொடுத்து வாக்குறுதியை நிறைவேற்றிப் பொறுமையைக்

கடைப்பிடிப்பது, இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக உடலாலும் பொருளாலும் பாடுபடுவது போன்ற வழிகளின் மூலமாக இறையச்சம் அல்லது உளப்பரிசுத்தம் எனும் தக்வாவை அடைந்து கொள்ளலாம் என அல் - குர்ஆன் நமக்கு நல்லுபதேசம் செய்கின்றது.

இனி இறையச்சத்தின் சிறப்புக்கள், மேன்மைகள் பற்றி எமது சிந்தனையைத் திருப்புவோம்.

## இறையச்சத்தின் சிறப்புக்கள்

அல்-குர்ஆன் வசனங்களின் அடிப்படையில் 'தக்வா'வின் மேன்மைகளைப் பன்னிரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. புகழ்ச்சியும் மேன்மையும் தக்வா உடையவர்களுக்கே கிடைக்கும்.
2. பாதுகாப்பும் விரோதிகளிடமிருந்து தற்காப்பும் இவர்களுக்குரித்தானது.
3. இறை உதவியும்கூட இவர்களுக்கே கிடைக்கும்.
4. கஷ்டங்களில் இருந்து விடுதலையும் ஹலாலான ஆகாரமும் இவர்களுக்குக் கிடைக்கும்.
5. இத்தன்மையுடையோரின் செயல்கள் சீராகும்.
6. பாவமன்னிப்புக்கும் இத்தகையோரே தகைமையானோராக மாறுகின்றனர்.
7. அல்லாஹ்வின் அன்பும் நேசமும் இவர்களுக்கே கிடைக்கும்.
8. பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படக்கூடிய தகைமையைப் பெறுவர்.
9. சிறப்பும், சங்கையும் இவர்களுக்கே கிடைக்கும்.
10. மரணத்தின்போது நன்மாராயம் பெறுவர்.
11. நரக விடுதலைக்கு உரித்துடையோர்.
12. சுவர்க்கத்தில் நிரந்தரமாயிருக்கும் பேற்றைப் பெறுகின்றனர்.''

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் முதற் கலீபாவாகப் பதவியேற்ற அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்களின், கிலாபத்தின் பின் ஆற்றிய முதலாவது உரையும் 'தக்வா'வின் மேன்மை பற்றி இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் காட்டக்கூடியதாக இருக்கின்றது. அவ்வுரை இவ்

வாறு அமைந்திருந்தது. ''மனிதர்களே, உங்களை ஆட்சி செய்யும் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனினும் உங்களை விட நான் (எவ்வகையிலும்) சிறந்தவனல்லன். எனினும் அல்-குர் ஆனும் பெருமானார் (ஸல்) அவர்களது வழிகாட்டுதல்களையும் நாம் கற்றுக்கொண்டுள்ளோம். உண்மையான அறிவு என்பது தக்வா தான் என்பதையும், மிகவும் மடமைத்தனம், பாவம் செய்தல்தான் என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். உங்களிடத்தில் பலசாலி என்னிடத்தில் பலவீனனுவான். (பலவீனனுக்குச் சேரவேண்டியதை) அவனில் இருந்து நான் பெற்றுக்கொடுப்பேன். (இதே போன்று) உங்களில் பலவீனன் என்னிடத்தில் பலசாலியாவான். அவனுக்குரிய உரிமைகளை நான் பெற்றுக் கொடுப்பேன். மனிதர்களே! நான் பின்பற்றக் கூடியவனேயன்றி ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தக் கூடியவனல்லன். நான் திறமையாக நடந்தால் என்னுடன் ஒத்துழையுங்கள். நான் வழி தவறினுல் என்னைச் சீர் செய்யுங்கள்.''[20] இறையச்சத்தின் பக்குவமான பண்புகள் விளக்கிக் காட்டக்கூடிய இவ்வுரையே மிகுந்த உளப் பரிசுத்தமுடைய ஒருவரின் உரையாக அமைந்திருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

'பெருமானுர் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது கடைசி ஹஜ்ஜின் முடிவில் திரண்டிருந்த நபித் தோழர் மத்தியில் ஹி. 10 'துல்ஹஜ் 11-ல் அல்லது 12-ல் மினுவில் வைத்து ஆற்றிய நீண்ட உரையின் கடைசியில் இதே கருத்தை வெளியிட்டிருக்கின்றுர்கள். ''மனிதர்களே! உங்கள் இறைவன் ஒருவனே; உங்களது தகப்பனும் ஒருவரே; நீங்கள் அனைவரும் ஆதமின் சந்ததியினர். ஆதமோ மண்ணுல் படைக்கப்பட்டார். அறபியல்லாத ஒருவனைவிட அறபிக்கோ, அறபியை விட அஜமிக்கோ, கறுப்பனை விட சிவப்பு நிறமுடையவனுக்கோ, சிவப்பு நிறமுடையவனை விடக் கறுப்பு நிறமுடையவனுக்கோ 'தக்வா'வைப் பொறுத்தேயன்றிச் சிறப்புக் கிடையாது. அல்லாஹ்விடத்தில் சிறந்தவன் உங்களில் இறையச்சம் உள்ளவனே.''[21]

'தக்வா' எனும் சொல்லுக்கு விளக்கம் தரும் 'ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) 'மஆலிமுத்தன்ஸீல்' எனும் நூலில், இணைவைத்தல், பெரும் பாவங்கள், துர்நடத்தைகளைவிட்டும் விலகியிருப்பது[22] என்றும் உமர் இப்னு அப்துல் அஸீஸ் (வஹ்) அவர்கள் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது, அல்லாஹ் விலக்கியனவற்றைத் தவிர்த்தும் கடமையாக்கியவற்றைச் செய்வதுமாகும்[23] எனக் கருத்துத் தெரிவிக்கின்றுர்.

## இம்மை, மறுமை;

அல்-குர்ஆனுடைய பார்வையில் இம்மையானது நிலையற்றது: மறுமை வாழ்வு தான் நிலையானதும் இன்பத்தையோ, துன்பத்தையோ முழுமையாக அனுபவிக்கக்கூடியதுமாகும். இம்மையில் மாறிமாறி வரும் இன்பமும் - துன்பமும், சுகமும் - துக்கமும், செல்வ நிலையும் - ஏழ்மையும் இன்ன பிற ஏற்றத் தாழ்வுகளும் அசலான மறுமை வாழ்வில் மனிதன் அனுபவிக்கப் போகும் ஏற்றத்தாழ்வுகளின் நகல் வடிவங்களேயன்றி வேறில்லை. இம்மையில் ஒருவனுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களை அவன் மறுமை வீட்டைத் தேடுவதில் பயன்படுத்த வேண்டும் என அல்.குர்ஆன் அவனுக்கு இதனுலேயே ஆணையிடுகின்றது. யதார்த்தமான மறுமை வீட்டைத் தேடுவதில் எமது கவனத்தை முழுமையாகச் செலுத்தும்போது இம்மையின் சாதகமான விளைவுகள் தன்னிடம் தானுகவே வந்து சரணடைந்துவிடும் என்பதே அல்-குர்ஆனின் ஆணித்தரமான நம்பிக்கை. உணவு, உடை என்பன வற்றின் அவசியம் ஒரு மனிதனுல் எவ்வாறு உணரப்படுகின்றதோ, அதேபோல் ஒரு வசிப்பிடத்தின் அவசியமும் அவனுல், மனித இனத்தின் தோற்றகாலந் தொட்டே உணரப்பட்டு வந்திருக்கின்றது. இவ்வகையிலேயே அல்-குர்ஆன் மனித இயற்கையுணர்வுக்கு மதிப்பளித்து மறுமை வீட்டின் அவசியத்தை சூசகமான முறையில் மேலே கூறிய வசனத்தில் உணர்த்தி நிற்கின்றது. மறுமையை ஒரு வீட்டுக்கு ஒப்பாக்கித் திருகுர்ஆன் இன்னும் பல விடயங்களில் மனிதனுக்குப் போதனை செய்கின்றது. ஒரு பானைச் சோற்றில் ஓரவிழ் பதம் பார்ப்பது போன்ற, அவ்வாறு உவமித்துக் கூறப்பட்டுள்ள இன்னெரு வசனத்தைக் கவனிப்போம்.

''(யூதர்களே!) அல்லாஹ்விடம் இருக்கும் மறுமையின் (சுவர்க்க) வீடு (மற்ற) மனிதர்களுக்கன்றி உங்களுக்கே சொந்தமென்று (கூறும்) நீங்கள் உண்மை கூறுபவர்களாக இருந்தால், (உங்களுக்குச் சொந்தமான அவ்வீட்டுக்குச் செல்வதற்காக) நீங்கள் மரணத்தை விரும்புவீர்கள் என (நபியே!) நீர் கூறும்'' 24

யூதமக்களை விழித்துக் கூறும் வகையில் அமைந்த இவ்வசனத்தில் மறுமை வாழ்வானது மனித புத்திக்கு விளங்கக்கூடிய விதத்தில் ஒரு வீட்டுக்கு உவமிக்கப்பட்டுள்ளதோடு, இவ்வாழ்க்கையை விரும்பக் கூடிய தன்மை மனித இயற்கையோடு பின்னிப் பிணைக்கப்பட்டவொன்று என்பதும் சூசகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மனிதன் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் பொழுதைக் கழிக்கக்கூடிய ஒரே ஒரு இடம் இவ்வுலகில் அவனது சொந்த வீடுதான். இதே போன்று மறுமையில் மனிதன் சுவர்க்க வாழ்வையடைந்து கொண்டால் அசலான, தறிபடாத, என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய

நிம்மதியும், சந்தோஷமும் அவனுக்குக் கிடைக்கும். மனிதன் தானாகவே சம்பாதித்துக்கொண்ட தீவினைகள் காரணமாகச் சில வேளைகளில் அவர்களது சொந்த வீடுகளே, அவர்களது மனநிம்மதியற்ற தன்மைக்கும், சந்தோஷமின்மைக்கும்கூடக் காரணமாகலாம். இதேபோன்று இவ்வுலக வாழ்க்கை இறைதிருப்தியைப் பெற்றுக் கொள்வதற்கு மாற்றமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்துவிட்டுச் செல்லக்கூடிய மனிதன் நிம்மதியற்ற, எவ்வித சுகண்டியுமற்ற, துன்பமயமான, சோகமயமான நரக வாழ்வின் வீட்டை அடைய நேரிடும். எனினும் சந்தோஷகரமான மறுமை வீட்டையடைந்து கொள்வதற்காக முற்றுமுழுதாக உலகத் தேவைகளை, இன்பங்களைப் புறக்கணித்து வாழும்படி இஸ்லாம் பணிக்கவில்லை. பூமியில் விஷமம் செய்து வாழ்வதையே இறைவன் தடுக்கின்றான்.

''(உன்னிடம் இருக்கும் பொருள்களையெல்லாம் அல்லாஹ்வே உனக்குக் கொடுத்தான். ஆகவே,) அல்லாஹ் உனக்களித்திருப்பதில் (தானம் செய்து) மறுமை வீட்டைத் தேடிக்கொள். இம்மையில் (தானம் செய்து நீ தேடிக்கொண்டதுதான்) உன்னுடைய பாகம் என்பதை நீ மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு (ப் பொருளைக் கொடுத்து) நன்மை செய்த பிரகாரம், (அதனைக் கொண்டு) நீயும் (பிறருக்குக் கொடுத்து) நன்மை செய். பூமியில் நீ விஷமம் செய்ய விரும்பாதே! ஏனென்றால் விஷமிகளை நிச்சயமாக அல்லாஹ் விரும்புவதில்லை'' 25

இனி, அல்குர்ஆன் எவ்வாறு இம்மையையும், மறுமையையும் ஒப்புநோக்கி மறுமையின் சிறப்புப் பற்றி எடுத்துரைக்கின்றது என்பது பற்றிக் கவனிப்போம்.

''(ஹஜ்ஜுக்குச் சென்ற) நீங்கள், உங்களுடைய (ஹஜ்ஜின்) கிரியைகளை நிறைவேற்றிவிட்டால், நீங்கள் (இஸ்லாத்துக்கு முன்) உங்கள் பிதாக் (களின் பெயர்) களை (ச் சப்தமிட்டுப் பெருமையாக) க் கூறிவந்ததைப் போல், அல்லது அதனைவிடப் பலமாக (ச் சப்தமிட்டு) அல்லாஹ்வை 'திக்ரு' (செய்து உங்களுக்கு வேண்டியவைகளையும் அவனிடம் கேட்டுப் பிரார்த்தனை) செய்யுங்கள். (பிரார்த்தனையில்) 'எங்கள் இறைவனே! எங்களுக்கு (வேண்டியவைகளையெல்லாம்) இம்மையிலேயே அளித்து விடுவாயாக!' என்று கோருவோரும், மனிதர்களில் உண்டு; ஆனால், இத்தகையவர்களுக்கு மறுமையில் யாதொரு பாக்கியமும் இல்லை'' 26

''அன்றி, எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மையளிப்பாயாக! மறுமையிலும் நன்மை அளிப்பாயாக; (நரக)

நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ இரட்சிப்பாயாக' எனக் கோருவோரும் அவர்களில் உண்டு'' 27

''தங்கள் (நல்) வினையின் (பயனை இம்மையிலும் மறுமையிலும் அடையும்) பாக்கியம் இவர்களுக்குத்தான் உண்டு'' 28

''எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டும்) விரும்பினால், அவர்கள் செயலுக்குரிய பலனை இ(வ்வுலகத்) திலேயே நாம் பூரணமாக அவர்களுக்குக் கொடுத்து விடுவோம். அதில் அவர்கள் குறைவு செய்யப்பட மாட்டார்கள். (எனினும்) மறுமையிலோ இத்தகையோருக்கு (நரக) நெருப்பைத் தவிர வேறொன்றுமில்லை; அவர்கள் செய்தவை யாவும் இங்கு அழிந்து விட்டன. அவர்கள் செய்துகொண்டிருப்பவையும் வீணானவையே'' 29

''எவன் மறுமையின் பயிரை விரும்புகின்றானோ, அவனுடைய பயிரை (-விளைச்சலை) நாம் அவனுக்காக அதிகப்படுத்துகின்றோம். எவன் இம்மையின் பயிரை (மட்டும்) விரும்புகின்றானோ, நாம் அவனுக்கு அதிலிருந்து ஓரளவு கொடுக்கின்றோம். எனினும், அவனுக்கு மறுமையில் யாதொரு பங்குமில்லை'' 30

''எனினும், நீங்களோ (மறுமையை விட்டு விட்டு) இவ்வுலக வாழ்க்கையைத் தெரிந்தெடுத்துக் கொள்கின்றீர்கள். மறுமையின் வாழ்க்கைதான் மிக்கமேலானதும் நிலையானதுமாகும்.'' 31

மேலே நாம் அவதானித்த அல் - குர்ஆன் வசனங்கள் இம்மை வாழ்வின் இஸ்த்திரமற்ற தன்மையையும், மறுமை வாழ்வின் நிலையான தன்மையையும் எடுத்துக்காட்டி மறுமைவாழ்வின் சுபீட்சத்துக்காக மனித சமுதாயம் முயற்சிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்வனவாகஇருக்கின்றன. இம்மையின் சுகண்டியும் கஷ்டமும் மரணத்தோடு முடிவடைந்து விடக்கூடியன. இதனாலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ''உலகில் நீவாழும் போது ஒருபரதேசியாக அல்லது வழிப் போக்கன் போன்று (எண்ணிக்கொண்டு) வாழ்வாயாக'' 32 என நமக்குப்போதனை செய்கிறார்' அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் அடிக்கடி ''மாலையாகிவிட்டால் காலைப்பொழுதை எதிர் பார்க்காதே : காலையாகிவிட்டால் மாலைப்பொழுதை எதிர் பார்க்காதே உடல் சுகம் குன்றிநோய்வாய்ப்படு முன் தேகாரோக்கியத்துடன் இருக்கும் காலத்தை (நல்லன செய்ய)ப் பயன்படுத்திக் கொள் : மரணத்துக்கான ஆயத்தங்களைத் தயாரித்துக் கொள்ள உனது ஆயுட்காலத்தைப் பயன் படுத்திக்கொள்வாயாக'' எனக் கூறுபவராக இருந்தார் : தனது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய

அளவுக்கு இம்மையுடனுன தொடர்பை வைத்துக் கொண்டு, இம்மையில் பற்றில்லாது (தனது ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள மறுமை வாழ்வை எதிர்பார்த்திருப்பது) வாழ்ந்தால் இறைநேசம் கிடைக்கும்' [33] என்ற கருத்தும் ஹதீஸ் ஷரீபிலே காணப்படுகின்றது. "அல் குர்ஆன் பார்வையில் இம்மைச் செல்வங்கள், சாதனங்கள் அனைத்தும் அவனது மறுமைப்பிரயாணத்தின் இடைவழியில் எதிர்ப்படக்கூடியனவே. இவற்றையெல்லாம் கடந்து போகும்போதுதான் அவன் தனது கடைசி மைல்கல்லான மறுமையை அடைந்து கொள்கின்றான். எனவே இவ்வுலக வாழ்க்கையின்றி மறுமை இல்லை: அதற்காக வேண்டி இவ்வுலக வாழ்க்கையில் மூழ்கித் தனது இலக்கை மறந்து விடவும் முடியாது. எனவே, இவ்வுலக வாழ்க்கை, அதன் சாதனங்கள் மனிதனுக்கு எவ்வளவு தூரம் அவசியப்படுகின்றதோ, அதற்கேற்றாற் போன்று அவற்றைக் கொண்டு மறுமை வீட்டின் சுபீட்சத்துக்காக மனிதன் உழைக்க வேண்டும்" [34]

## மறுமை வாழ்வு

மறுமை வாழ்வென்பது பின்வரும் அம்சங்களையுள்ளடக்கியதாகும்.

1. ஒரு நாள் அல்லாஹ், முழு உலகையும், அனைத்துப்படைப்பினங்களையும் அழித்ததன் பின் மனிதர்கள் அனைவருக்கும் மறுவாழ்வு அளிப்பான். அனைவரும் அல்லாஹ்வின் முன்னிலையில் ஆஜராவர் இதற்கு 'மஹ்ஷர்' எனப்பெயர்.

2. ஒவ்வொருவரும் இவ்வுலகில் புரிந்த செயல்களனைத்தையும் தாங்கிய செயலேடு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.

3. நற்செயல்கள், தீச்செயல்களைவிட எடை கூடியதாக இருப்பின் அல்லாஹ் அவர்களை மன்னித்து விடுவான். தீச்செயல்கள், நற்செயல்களைவிட எடைகூடியிருப்பின் தண்டனை அளிப்பான்.

4. யார் மன்னிப்புப் பெறுகின்றாரோ அவர்கள் சுவர்க்கம் புகுவர். யாருக்குத் தண்டனை விதியாகின்றதோ அவர்கள் நரகம் புகுவர் [35] இக்கருத்தை அல் - குர்ஆன் பின்வருமாறு அழகுபட வர்ணிக்கின்றது.

"மறுமையின் வேதனைக்குப்பயப்படக் கூடியவருக்கு நிச்சயமாக இதில் நல்லதோர் அத்தாட்சி இருக்கிறது. மனிதர்கள் அனைவரும் ஒன்று சேர்க்கப்படும் நாளாகும் அது. அன்றி அவர்கள் யாவரும் (இறைவன் சந்நிதியில்) கொண்டுவரப்படக் கூடிய நாளாகும்.

சொற்ப நாட்களுக்கேயன்றி நாம் அதனைப் பிற்படுத்தி வைக்கவில்லை.

அது வரும் நாளில் அவனுடைய அனுமதியின்றி எந்த ஒரு மனிதனும் (அவனுடன்) பேசமுடியாது. அவர்களில் துர்ப்பாக்கிய வான்களும் உள்ளனர். நற்பாக்கிய வான்களும் உள்ளனர்.

துர்ப்பாக்கியவான்கள், நரகத்தில் (வீழ்த்தப்படுவார்கள். வேதனை தாங்க முடியாது) அதில் அவர்கள் பெரும் கூச்சலிட்டுக் கதறுவார்கள்.

உம் இறைவன் நாடினாலன்றி வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும் காலம் வரையில் அதில் அவர்கள் தங்கிவிடுவார்கள். நிச்சயமாக உமது இறைவன், தான் விரும்பியவற்றை (த் தடையின்றிச்) செய்து முடிப்பான்.

நற்பாக்கியவான்கள் சுவனபதியில் (நுழைந்து விடுவார்கள்) உமது இறைவன் நாடினாலன்றி, வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும் காலம் வரையில் அதில்தான் அவர்கள் தங்கிவிடுவார்கள். (அது) முடிவுறாத (என்றும் நிலையான )ஓர் அருட்கொடையாகும்''

இவ்வசனங்கள் மறுமை பற்றிய ஒரு சம்பூரண விளக்கத்தை இரத்தினச் சுருக்கமாகத் தருவதோடு, மறுமை வாழ்வில் நடைபெறக் கூடியன, அதன் நிலையான தன்மை முதலியன பற்றியும் விளக்கம் தருவனவாக இருக்கின்றன. இம்மையின் நிலையற்ற தன்மையுடன் மறுமையின் நிலையான தன்மையை அல்-குர்ஆன் ஒப்பிட்டு ஆராய்ந்திருக்கும் பான்மையானது தனிச்சிறப்பு வாய்ந்தவொன்றாக இருப்பதுடன் மறுமையின் நிழல்தான் இம்மையென்றும், எனவே அசலான மறுமைப் பேற்றையடையும் நோக்கோடு நாம் முயற்சி செய்யும் போது இம்மை தானாகவே நம்மை வந்தடையும் எனும் சூட்சகமான கருத்தை விளக்குவதாகவும் அல்-குர்ஆனின் இவ்வொப்பீட்டாய்வு அமைந்திருக்கின்றது.

## சிறந்த வியாபாரம்

இனி அல் - குர்ஆன் நமக்குக் காட்டித்தரும் சிறந்த வியாபாரம் பற்றிக்கவனிப்போம்.

''விசுவாசிகளே! ஒரு வியாபாரத்தை நான் உங்களுக்கு அறிவிக்கவா? (அது) துன்புறுத்தும் வேதனையில் இருந்து உங்களை இரட்சித்துக் கொள்ளும். (அதாவது) அல்லாஹ்வையும், அவனுடைய

(இத்) தூதரையும் விசுவாசித்து உங்களுடைய பொருள்களையும்' உங்களுடைய உயிர்களையும், தியாகம் செய்து அல்லாஹ்வுடைய பாதையில் போரிடுங்கள். நீங்கள் அறிவுடையோர்களாளுல், இதுவே உங்களுக்கு மிக்க மேலானதாக இருக்கும் (என்பதை அறிந்து கொள்வீர்கள்.)'' 36

ஒருவன் தன்னிடம் இருக்கக்கூடிய பணத்தை ஈடுபடுத்தி இரு வகைகளில் இலாபம் பெற்றுக் கொள்ளலாம்.

1. வணிகத்தில் முதலீடு செய்வது.

2. வட்டித் தொழிலில் முதலீடு செய்வது, அல் - குர்ஆன் முத லாவது முறையில் முதலீடு செய்வதை அனுமதித்து வட்டியில் ஈடு படுத்துவதைத் தடை செய்திருக்கின்றது. ''வட்டியை (வாங்கி) விழுங்குகிறவர்கள். ஷைத்தான் பிடித்துப் பித்தங் கொண்டோர்கள் எழும்புவதுபோலன்றி (வேறுவிதமாக மறுமையில்) எழும்பமாட் டார்கள். ஏனென்ருல் வணிகமும் வட்டியைப் போன்றது தான் (எனவே வட்டி வாங்குவதில் தவறில்லை)' என இவர்கள் கூறு கிருர்கள். ஆளுல், அல்லாஹ் வணிகத்தை ஆகுமாக்கி வைத்து, வட் டியைத்தடுத்துவிட்டான். ஆதலால், (உங்களில்) எவரேனும் தன் இறைவனிடமிருந்து வந்த (வட்டிவாங்கக்கூடாதென்ற) எச்சரிக் கைப்படி (அதைவிட்டு) விலகிக் கொண்டால், (அதற்கு) முன் (அவன் வாங்கிச்) சென்று போனது அவனுக்குரியதே'' 37 சிறந்த வொரு தொழிலை அறிமுகப்படுத்தித் தரும்படி பெருமாஞர் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது கூட, 'கைத்தொழிலும் நேர்மை யான வர்த்தகமுமாகும்' எனப் பதில் அளித்திருப்பதும் இஸ்லாத்தில் வணிகநடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதென்பதையும், ஏனைய தொழில்களைவிட அது மகத்துவமானது என்பதும் விளங்கு கின்றது. எனவே, தான் அல்லாஹ்விடத்தில் மகத்துவமான முக்கிய மூன்று விடயங்கள் வியாபாரத்துடன் இணைத்துக் கூறப்பட்டு சிறந்த வியாபாரம் என விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அம்மூன்று விடயங்களுமாவன:

1. அல்லாஹ்வைப் பற்றியும், ரசூலைப்பற்றியும் விசுவாசம்.

2. பொருள்களைத் தியாகம் செய்து அல்லாஹ்வுடைய பாதை யில் பிரயாசைப்படுத்தல்.

3. உயிர்களைத்தத்தம் செய்து இறைபாதையில் முயற்சி செய்தல்.

கொடுக்கல் வாங்கல், கொள்வனவு - விற்பனையுடன் சம்பந்தப்பட்ட வியாபாரத்தின் மூலம் மனிதன் தனது உழைப்பை ஈடுபடுத்திக்குறுகிய

வொருகாலத்தில் அதிகமான பணத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம். இதன் பெறுமதியும், முக்கியத்துவமும் கூட மனிதனால் வெகுவாக உணரப்படுகின்றது. ஆனால் சிறந்த வியாபாரம் என அல் - குர்ஆன் குறிப்பிடும் வியாபாரத்தைப் புரிந்து கொள்ளத் தெளிவான அறிவு வேண்டும் என்பதனால் ''நீங்கள் அறிவுடையோர்களானால் இதுவே உங்களுக்கு மேலானதாக இருக்கும்'' எனக்குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பாமரமக்களின் அறிவில் இருந்து வித்தியாசப்படக்கூடிய, மேன்மை யான தூய்மையான அறிவு வாய்க்கப்பெற்றோரால் மாத்திரமே இதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம் என்பது இதில் இருந்து தெளிவாகின்றது.

வியாபாரம் என்பது பண்டமாற்று முறையாகவும் இருக்கலாம். பணத்தைப்பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகவும் இருக்கலாம். கொள்வனவும், விற்பனையும் இதில் சம்பந்தப்படுவதினால் தேவையுடையோரின் தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன் கொண்டு நடாத்துவோரும் இலாபம் எனும் ரீதியில் பயனடைகின்றனர். இதேபோன்று அல் - குர்ஆன் அறிமுகப்படுத்தும் வியாபாரத்தின் மூலமும் தமக்கும் மற்றோருக்கும் பயனேற்படுவதை ஒவ்வொரு தனி நபரும் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள வேண்டும். வட்டி, கொள்ளை இலாபம், அளவை, நிறுவை மோசடி, தரம் குறைந்ததைத் தரம் கூடியது எனக்கூறி விற்பனை செய்தல் போன்றனவர்த்தகத்தில் நுழைந்து அதன் புனிதத் தன்மைக்கு மாசேற்படுத்தாது பாதுகாத்துக் கொள்வது அவசியமாக இருப்பது போன்று, இதிலும் தற்புகழ்ச்சி, பெருமை, கர்வம், பிறரை மதி யாமை போன்ற துர்க்குணங்கள் வந்து கலந்துவிடாமல் நாம்பேணிப் பாதுகாப்பாக இருப்பதும்அவசியம். வியாபாரத்தின் வளர்ச்சிக்காக மனிதன் தன்னுடைய பணம், பொருள், நேரம், உழைப்பு முதலியன வற்றை ஈடுபடுத்துகின்றான். அதன் பிரயோசனத்தையும் அவன் கண் கூடாகக்காண்கிறான். இதே போன்று அல்லாஹ்வையும் அவனது ரசூலையும் விசுவாசிக்கும் ஒருமனிதன், இவ்விசுவாசத்தைத் தன்னுள் ளென்மேலும் வளர்த்து, ஆட்டம் காணாதவொன்றாக இஸ்திரமான தாக ஆக்கிக்கொள்வதற்குத்தியாகம் செய்யமுன் வரவேண்டும். தனது உடமைகளைக் கொண்டு அல்லாஹ்வுடைய பாதையில் முயற்சி, பிர யாசையெடுத்துக் கொள்ளவேண்டும். உயிரைப்பணயம் வைத்துத்தான் இதைப்பெற்றுக் கொள்ளவேண்டியிருப்பின் அதற்கும் தயங்கக் கூடாது எனும் அருமையான கருத்தை இவ்வியாபாரம் நமக்குக் காட்டித்தருகின்றது. அல்லாஹ்வின் பாதையில் உடலாலும், பொருளாலும், உயிராலும் பிரயாசையெடுத்துக் கொள்வதன் மகத் துவம் பற்றி உணர்த்தி நிற்கும் இன்னும் சில அல்-குர்ஆன் வசனங் களின் பால் எமது சிந்தனையைத் திருப்புவது ஏற்புடைத்து என்

நினைக்கின்றேன்: ''நிச்சயமாக எவர்கள் விசுவாசங்கொண்டு (தங்கள்) ஊரைவிட்டுப் புறப்பட்டு, அல்லாஹ்வுடைய பாதையில் தங்கள் உயிர்களையும் பொருள்களையும் தத்தம் செய்து யுத்தம் புரிந்தார்களோ அவர்களும், எவர்கள் அவர்களுக்கு (த் தங்கள் இல்லங்களில்) இடமளித்து வைத்துக் கொண்டு உதவி புரிந்தார்களோ அவர்களும் ஆகிய இத்தகையோர், ஒருவருக்கொருவர் நட்பில் மிக நெருங்கியவர்களாயிருக்கின்றனர். ஆயினும் விசுவாசம் கொண்டவர்களில் எவர்கள், இன்னும் (தங்கள்) ஊரைவிட்டுப் புறப்படாமல் இருக்கின்றனரோ அவர்கள். (தங்கள்) ஊரைவிட்டுப்புறப்படும் வரையில் நீங்கள் அவர்களுடைய எவ்விசயத்துக்கும் பொறுப்பாளிகளல்ல'' 38

''எவர்கள் விசுவாசங் கொண்டு (தங்கள்) ஊர்களிலிருந்து வெளிப்பட்டு, அல்லாஹ்வுடைய பாதையில் தங்கள் பொருள்களையும் உயிர்களையும் தத்தம் செய்து யுத்தம் புரிகின்றனரோ அவர்கள், அல்லாஹ்விடத்தில் மகத்தான பெரும் பதவி பெற்றவர்கள். இத்தகையோர்தாம் நிச்சயமாகச் சித்தியடைந்தோர். அவர்களுக்கு அவர்களுடைய இறைவன், தன்னுடைய அன்பையும் திருப்பொருத்தத்தையும் அளித்து, சுவனபதிகளையும் அவர்களுக்குத் தருவதாக நன்மாராயங் கூறுகின்ருன். அவர்களுக்கு அ(ச்சுவனப)தி(களி)ல் என்றென்றும் நிலையான இன்பங்களுண்டு. என்றென்றும் அவற்றில் அவர்கள் நிலைபெற்றிருப்பார்கள். (இதனையன்றி) அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக (அவர்களுக்கு) மகத்தான கூலி உண்டு.'' 39

(நபியே! விசுவாசிகளை நோக்கி) நீர் கூறும்: உங்களுடைய தந்தைகளும், உங்களுடைய மக்களும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய துணைவர்களும், உங்களுடைய குடும்பமும், நீங்கள் சம்பாதித்து வைத்திருக்கும் ''(உங்கள்) பொருள்களும், நஷ்டமாகி விடுமோ என நீங்கள் பயந்து (மிகஎச்சரிக்கையுடன்) செய்துவரும் வர்த்தகமும், உங்களுக்கு (மிக்க) விருப்பமுள்ள (உங்கள்) வீடுகளும் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விடவும், அவனுடைய பாதையில் யுத்தம் புரிவதைவிடவும் உங்களுக்கு மிக்க விருப்பமானவைகளாயிருந்தால், (நீங்கள் உண்மை விசுவாசிகளல்ல. நீங்கள் அடையவேண்டிய தண்டனையைப்பற்றிய) அல்லாஹ்வுடைய கட்டளை வரும் வரையில் நீங்கள் எதிர்பார்த்திருங்கள். (உங்களைப்போன்ற) பாவிகளை, அல்லாஹ் நேரான வழியில் செலுத்துவதில்லை.'' 40

''எவர்கள் நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கின்ருர்களோ அவர்களை, நிச்சயமாக நாம் நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகின்றோம்.'' 41

''( உண்மையான ) விசுவாசிகள் எவர்களென்றால், அவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் ( மெய்யாகவே ) விசுவாசங் கொண்டு, பின்னர் எவ்வித சந்தேகமும் கொள்ளாது அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய உயிர்களையும், பொருள்களையும் தத்தம் செய்து யுத்தம் புரிவார்கள். இத்தகையோர்தாம் ( தங்கள் விசுவாசத்தில் ) உண்மையானவர்கள்.'' 42

## ஜிஹாதின் விளக்கம் :

அல்-குர் ஆனிலும் ஹதீஸிலும் விரவிக்கிடக்கும் 'ஜிஹாத்' எனும் சொல்லை முழுக்கமுழுக்க யுத்தம் எனும் கருத்தில் பலர் தவருக புரிந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாக மேற்கத்திய எழுத்தாளர்கள், இஸ்லாத்தைப் பரப்பும் நோக்குடன் வாளேந்தி யுத்தம் செய்வதையே இதுகுறிக்கின்றது எனத்தப்பாகக் கணக்குப் போடுகின்றனர். இஸ்லாமிய பரிபாஷையில் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட புனித யுத்தங்களையே இச்சொல் குறிப்பதாக இருந்தாலும் இதன் பொருள் விரிவானதே. பிரபல நூலாசிரியரான கிளெய்ன், இஸ்லாமிய மதம் என்ற நூலில் '' 'ஜிகாத்' - அவிசுவாசிகளை இஸ்லாத்தில் எடுக்கும் நோக்கத்தோடு அல்லது அவர்கள் முஸ்லிம்களாவதற்கு மறுக்கும் பட்சத்தில் அவர்களைக் கீழ்ப்படுத்தி அழிக்கும் நோக்கத்தோடு போராடுவதாகும். இவ்வாறு ஏனைய எல்லா மதங்களையும் வெற்றி கொண்டுஇஸ்லாம் பரவுவதற்கு வழி செய்வது முஸ்லிம் சமுதாயத்தின் பரிசுத்தக் கடமையாகக் கருதப்படுகிறது'' என்று தப்பாகக் குறிப்பிடுகின்றார். அல்-குர்ஆன், ஹதீஸ் முதலியவைகளில் எவ்வெக் கருத்துக்களிலெல்லாம் இச்சொல்லானது எடுத்தாளப்பட்டிருக்கின்றது என்பது பற்றியும், யுத்தம் ஏன் முஸ்லிம்கள் மீது விதிக்கப்பட்டது என்பது பற்றியும் தெளிவாகப் புரிந்துகொள்ளாது, இவ்வாறு தப்பான கருத்துக்களைக் கொண்டு இஸ்லாத்தை இழிவுபடுத்தவும், உலகினர் மத்தியில் அதைச் சிறுமைப்படுத்திக் காட்டவும், எதிரிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளில் ஒன்றாகவே இதைக் குறிப்பிடலாம். முஸ்லிம்கள் மதீனாவுக்குக் குடி பெயர்ந்து சென்றதன் பின்பே யுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன, 'ஆனால் ஜிஹாது சம்பந்தமான ஆணைகள், முதலில் கிடைத்த மக்கா வெளிப்பாடுகளிலும் அடங்கியிருக்கின்றன. பெருமானாரின் இஸ்லாமிய அழைப்பின் ஐந்தாம் ஆறும் வருடங்களில் தான் ''ஸூரு அன்கபூத்'' இறக்கப்பட்டது, இந்த ஸூருவில் ''ஜிஹாத்'' எனும் சொல் தாராளமாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் ''யுத்தம்'' எனும் கருத்திலல்ல, ஒருவரின் ஆற்றலும் சக்தியும் பிரயோகிக்கப்பட வேண்டும் எனும் கருத்திலேயே ''ஜிஹாத்'' எனும் சொல் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு இடத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. ''எவர்கள்

நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கின்றார்களோ, அவர்களை நிச்சயமாக நாம் நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகின்றோம். (பிறருக்கு) நன்றி செய்வோர்களுடன் நிச்சயமாக அல்லாஹ் இருக்கிறான்,'' (26-69) இந்த வசனத்தில் பாவிக்கப்பட்டிருக்கும், ''ஜிஹாத்'' என்ற சொல் அல்லாஹ்வை நெருங்குவதற்காகச் செய்யப்படும் ஆத்மீக முயற்சியையே குறிக்கிறது.[43]'' இனி, யுத்தம் ஏன் முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டது என்பதற்கு அல்-குர்ஆன் தரும் நியாயங்கள்பால் நமது சிந்தனையைத் திருப்புவோம்.

(1) ''ஆகவே, (உங்களை எதிர்த்து யுத்தம் புரிய முற்பட்ட) அவர்களைக் கண்ட விடமெல்லாம் வெட்டுங்கள். உங்களை (உங்கள் ஊரிலிருந்து) அவர்கள் வெளியேற்றியவாறே, நீங்களும் அவர்களை வெளியேற்றிவிடுங்கள். (அவர்கள் செய்யும்) கலகம் கொலையைவிட மிகக் கொடியது''[44]

(2) ''பலஹீனமான ஆண்களுக்காகவும் பெண்களுக்காகவும் சிறு குழந்தைகளுக்காகவும் (-இவர்களை இரட்சிப்பதற்காக) அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் யுத்தம் புரியாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது ?''[45]

(3)'' (விசுவாசிகளே இந்நிராகரிப்போரின்) விஷமத்தனம் முற்றிலும் நீங்கி அல்லாஹ்வுடைய மார்க்கம் முற்றிலும் நிலைபெறும் வரையில் (மக்காவாசிகளாகிய நிராகரிக்கும்) அவர்களுடன் யுத்தம் புரியுங்கள். (விஷமம் செய்வதிலிருந்து) அவர்கள் விலகிக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதை உற்று நோக்கினவனுகவே இருக்கின்றான்.''[46]

(4) ''(சத்தியம் செய்து) உடன்படிக்கை செய்து கொண்டதன் பின்னரும், அவர்கள் தங்களுடைய சத்தியங்களை முறித்து உங்களுடைய மார்க்கத்தைப்பற்றியும் குற்றங் குறைகள் கூறிக் கொண்டிருந்தால், (நிச்சயமாக) நிராகரிப்போரின் (இத்தகைய) தலைவர்களுடன் போரிடுங்கள். ஏனெனில் அவர்களது உடன்படிக்கையில் உறுதியில்லை. (இத்தகையவிஷமத்திலிருந்து) அவர்கள் (அப்போது) விலகிக்கொள்ளலாம். தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்து (நம்முடைய) தூதரை (ஊரைவிட்டு) வெளிப்படுத்தவும் விரும்பி முயற்சித்த மக்களுடன் நீங்கள் யுத்தம் புரிய வேண்டாமா ?''[47]

(5) (நிராகரிப்போரால்) அநியாயத்துக்குள்ளானவர்களுக்கு (அவர்களை எதிர்த்து) யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டு விட்டது. இவர்கள் (எத்தகையோரென்றால்) நியாயமின்றித்

தங்கள் வீடுகளிலிருந்து (விரோதிகளால்) துரத்தப்பட்டார்கள். எங்களுடைய இறைவன் அல்லாஹ் ஒருவன் என்று கூறியது தான் இவர்கள் செய்த குற்றம்.'' 48

(6) (விசுவாசிகளே) யுத்தம் செய்வது உங்களுக்கு வெறுப் பாயிருந்தும் (உங்களையும் உங்கள் மதத்தையும் காக்கும் பொருட்டு) அது உங்கள் மீது கடமையாக்கப்பட்டிருக்கிறது.'' 49

மேலே நாம் அவதானித்த வசனங்கள் யுத்தம் முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டிருப்பதற்கான நியாயங்கள் பலவற்றைத் தரக் கூடியனவாக இருக்கின்றன. இவையனைத்தையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது, தற்காப்பின் அவசியத்தை உணர்ந்ததன் காரண மாகவே இஸ்லாம் யுத்தத்தைக் கடமையாக்கியிருக்கின்றது எனச் சுருக்கமாகக்கூறலாம். ''ஜிஹாத்'' என்ற சொல் 'ஜஹத' அல்லது 'ஜுஹ்த்' என்ற சொல்லிலிருந்து பிறந்தது. ஆற்றல், முயற்சி, அதிகாரம் என்பவை இவற்றின் அர்த்தங்களாகும். ''ஜிஹாத்'' ''முஜாஹதா'' என்ற சொற்கள் ஒருவரின் சக்தியைப் பிரயோகித்து முயலுதல், எதிரியைப் பின்தள்ளல் என்ற கருத்துக்களைக் கொடுக்கின்றன.'' அல்லாஹ், ரசூலைக் கொண்டு விசுவாசம் கொண்டதன் பின், அல்-குர்ஆன் பல இடங்களில் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஜிஹாதை ஒரு வியாபாரம் எனக்கூறும் அல் – குர்ஆன் கொள்வனவு விற்பனையுடன் சம்பந்தப் படுத்தியும் பல இடங்களில் இதை ஆராய்கின்றது.

''(விசுவாசிகளே!) உங்களுக்கு முன் சென்றவர்களுக்கு ஏற் பட்டது போன்ற (கஷ்டமான) நிலைமை, உங்களுக்கு வராமலே நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்து விடலாமென்று நினைத்துக் கொண்டீர்களோ? தூதரையும், அவருடன் விசுவாசம் கொண்ட அவர்களையும், கஷ்டங்களும் துன்பங்களும் பீடித்து, (அவர்கள் வருந்தித்தங்களுடைய கஷ்டங்களை நீக்கிவைக்க) அல்லாஹ் வுடைய உதவி எப்பொழுது (வரும்? எப்பொழுது வரும்)? என்று கேட்டதற்கு, அல்லாஹ்விடைய உதவி நிச்சயமாக (இதோ) சமீபத்திலிருக்கிறது என்று (நாம், ஆறுதல்) கூறும் வரையில், அவர்கள் ஆட்டிவைக்கப்பட்டார்கள்.'' 50 இவ் வசனத்தில் சுவர்க்கத்தை விற்பனைப் பொருளாகவும்; அதை யடைந்து கொள்வதற்கான கிரயம் அல்லாஹ்வுடைய பாதையில் 'முஜாஹதா' செய்வது தான் என்பதாகவும் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

பின்வரும் வசனத்தையும் கவனியுங்கள். இதில் வெளிப்படை யாகவே ஒரு வியாபாரத்தில் சம்பந்தப்படக்கூடிய வியாபாரி, வாங்கு

பவன், விற்கும் பொருள் அல்லது கொள்வனவு செய்யும் பொருள் முதலியன அடங்கிய பாணியில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

''அல்லாஹ் விசுவாசிகளுடைய உயிர்களையும் பொருள்களையும் நிச்சயமாக அவர்களுக்குச் சுவனபதி தருவதாக (க்கூறி) மெய்யாகவே விலைக்கு வாங்கிக்கொண்டான். அவர்கள் அல்லாஹ்வுடைய பாதையில் 'ஜிஹாத்' செய்து, அவர்கள் (விரோதிகளை) வெட்டுவார்கள். (அல்லது) வெட்டப்பட்டு (இறந்து) விடுவார்கள். (இவ்விருநிலைமைகளிலும் அவர்களுக்குச் சுவனபதி தருவதாகத்) தவ்ருத்திலும், இன்ஜீலிலும், குர்ஆனிலும் (அல்லாஹ்) வாக்களித்துத் தன்மீது கடமையாக்கிக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ்வைவிட வாக்குறுதியைப் பூரணமாக நிறைவேற்றுபவன் யார்? ஆகவே, (விசுவாசிகளே!) நீங்கள் அவனிடம் செய்துகொண்ட உங்களுடைய இவ்வர்த்தகத்தைப் பற்றி மகிழ்ச்சியடையுங்கள். நிச்சயமாக இதுவன்றோ மகத்தான பெரும் பாக்கியம்.'' 51

தனது பொருள்களைக்கொண்டு அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தக் கூடிய வழிகளான ஸகாத், தானதர்மம், வேறும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகச் செய்யப்படும் முயற்சிகள் அனைத்தும் அவனிடத்தில் நன்கு மதிக்கப்படுகின்றன. இவ்வாறு செலவிடுவதின் பயனை அல்லாஹ் விளக்குவதற்கு ஒரு ரூபா முதலைக்கொண்டு எழுநூறு ரூபா இலாபம் சம்பாதிக்கக் கூடிய ஒரு வர்த்தகம் போன்றது எனச்சூட்சகமாக எடுத்துக்காட்டியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவ்வசனம் இவ்வாறு அமைந்திருக்கின்றது.

''அல்லாஹ்வின் பாதையில் தங்கள் பொருட்களைச் செலவிடுவோருக்கு உதாரணம், ஒரு வித்துப்போன்றது. அந்த வித்து ஏழு கதிர்களைத் தந்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு மணிகள் இருந்தன. அல்லாஹ் நாடுவோருக்கு மேலும் அதிகப்படுத்துவான்.'' 52

ஹதீஸுடைய கருத்தில் 'ஜிஹாத்' எனும்பதம் மனதை நல்வழிப்படுத்தும் பொருட்டு, இச்சைகளையடக்கி ஆத்ம பயிற்சி பெறுவது, ஹஜ்வணக்கம் முதலியனவற்றிற்கும் பாவிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, மனிதன், தனது ஆத்மீக வளர்ச்சிக்காகச் செய்யும் அனைத்து தியாகங்களும், இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகத் தனது பேச்சால், பேனுமுனையால், பொருளால், நேரத்தால், உடலால், உயிரால் செய்யப்படும் அனைத்து தியாகங்களும் கூட 'ஜிஹாத்' எனவே மதிக்கப்படுகின்றன. இப்புனித வர்த்தகமானது, நமக்குப்பரிச்சயமான பல்வகைப்பட்ட வர்த்தகங்களில் இருந்தும் கணிசமான அளவு

வேறுபடுவதுடன், இவ்வர்த்தகத்தில் நாம் வெற்றியீட்டும் போது அல்லாஹ்வின் விசேஷமான அருளுக்கும், சுவனத்துக்கும் தகுதியான வர்களாக மாறிவிடுகின்றோம். நிலையான இன்பத்துக்கு ஆளாகின்றோம். எனவே, இறை திருப்தியைப் பெற்றுத் தரக்கூடிய இவ்வர்த்தகத்தைப் பேணுதலுடன் செய்யமுற்படுவோமாக.

நற்கருமங்களோடு பொருளும் மக்களும் தொடர்புபடுத்தப்பட்டு, நற்கருமங்களே அசலானவை; நிலையானவை என்பதை விளக்க இவ்வுலகப்பொருள், மக்கள் என்பன, மறுமையில் இருக்கக்கூடிய பல வகைப்பட்ட சுகண்டியான பொருட்கள், சிதறியமுத்துக்கள் போன்று காட்சியளிக்கக் கூடிய, என்றுமே இளமைமாறாத பிள்ளைகள் ஆகியோரின் நகல் உருவங்களே என்பது எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது. இக்கருத்தை மேலும் ஊர்ஜிதம் செய்வதுபோல் இரண்டாவது வசனம் அமைந்திருக்கின்றது.

## வாழ்க்கைத்துணை

மனிதனுடைய அவசியத் தேவைகளில் அவனுக்கான ஒரு வாழ்க்கைத்துணையைத் தேடிக்கொள்வதும் முக்கியமானதொன்று. ஆனால், உலக வாழ்க்கைத்துணைவி எவ்வளவுதான் அழகும், அன்பும், இளமையும், இன்னோரன்ன கவர்ச்சிகரமான பண்புகளைப் பெற்றுக் காணப்பட்டாலும் அவள்கூட, சுவர்க்கநங்கைகளின் நகல்உருவமன்றி அசலாக இருக்கமுடியாது எனும் கருத்தை அல் - குர்ஆன் சூட்சகமாகப் பல இடங்களில் தெளிவுபடுத்தி, இம்மை வாழ்க்கையில் மருண்டு விடாதீர்கள் என எச்சரிக்கின்றது.

சுவர்க்கக்கன்னிகைகள் பற்றி அல் - குர்ஆன் வர்ணிக்கும் போது,

"( அங்கு இவர்களுக்கு ) 'ஹூருல்ஈன்' ( என்னும் கண்ணழகிகளான மனைவி ) களும் இருப்பார்கள். ( அவர்கள், ) பேணிக் காக்கப்படும் ஆணிமுத்துக்களைப்போல் ( இருப்பார்கள் )" 53

"ஹூர் ( என்னும் கண்ணழகிகளாகிய கன்னிகை ) கள் ( முத்து பவளங்களாலான ) கூடாரங்களில் வசித்திருப்பர்." 54

"நாம் அவர்களுக்கு ( ஹூருல்ஈன் என்னும் ) கண்ணழகி ( களாகிய கன்னிகை ) களைத் திருமணம் செய்து வைப்போம்" 55 என்பதாகக் குறிப்பிடுகின்றது. இவ்வசலான சுவர்க்க நங்கைகளையடைவதற்கான முயற்சிகளில் ஈடுபட ஒவ்வொரு மனிதனுக்கும் இம்மை வாழ்வில் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கின்றது. இச் சந்தர்ப்பத்தை செவ்வனே பயன்படுத்தி, இறைகட்டளைகளுக்கும், இறைதூதர்



85178

களின் வழிகாட்டுதல்களுக்கும் வழிபட்டு நடக்கும் ஒவ்வொரு ஆணுக்கும் இப்பாக்கியம் கிடைக்கும். இவ்வாறு நடக்கும் ஒவ்வொரு பெண்ணும் சுவர்க்கநங்கையாக மாறி விருப்பமான ஆண்களையடைந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தையும் அல்லாஹ் சுவர்க்கத்தில் அவர்களுக் களிப்பான்.

இம்மை வாழ்க்கையில் மனிதன் சந்திக்கின்ற எல்லாப் பொருள் களும், அனைத்து நிலைமைகளும் அவன் மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கையில் சந்திக்கப்போகின்ற யதார்த்தமான, ஹகீகத்தான, அசலானவற்றின் நகல்வடிவங்களே என்பதைச்சில ஆதாரங்கள் மூலமாக விளக்கியிருக்கின்றேன். விஞ்ஞான முன்னேற்றமும், இயந் திரப் பெருக்கமும், தொழில்நுட்ப முன்னேற்றங்களும் மாத்திரம் ஒரு மனிதனை நல்மனிதனாகவோ, பண்பட்டவனாகவோ, ஹகீகத்தை விளங் கியவனாகவோ ஆக்கிவிடா. ஒழுக்கத்தையும், ஆன்மீகப்பண்பாடுக ளையும் அடிப்படையாகக் கொள்ளாதவரையில் சிறந்தவொரு சமுதா யம் இவ்வுலகில் தோன்ற முடியாது. பசிதீர உண்டு, களிப்புத்தீர அனுபவித்து, மோகம்தீரப் புணர்ந்தால் மாத்திரம் மனிதன் உயர்வ டையமுடியாது. அவனது ஆசைகள் அற்றுப்போயும் விடா. இவ்வாறு தவறுதலாக எண்ணும் மனிதன் நிச்சயமாக ஆழ்ந்த உறக்கத்தில் தான் இருக்கின்றான். இதை அலி (ரழி) அவர்கள் அழகுற விளக்கிக் காட்டும் போது ''மனிதர்கள் அனைவரும் உறக்கத்தில் இருக்கின்றனர்; மரணத்தை அனுபவித்து விட்டால் விழித்தெழுவார்கள்''. எனக்கூறு கின்றார்கள். கருத்தென்னவெனில், அப்போதுதான், தான் உலகத்தில் அசலாக நம்பியிருந்தவைகள் எல்லாம் அசல்கள் அல்ல; அவையனைத் தும் நகல் வடிவங்களே எனத் தெரிந்துகொள்வான். பெருமானார் (ஸல்)அவர்கள்கூட தம்முடைய ஸஹாபாப் பெருமக்கள் உலோகா யதவிடயங்களில் அதிக ஈடுபாடுகொண்டு அவைபற்றிப் பெருமை யாகப்பேசும் போதெல்லாம் அவர்களுக்கு அவற்றின் நிலையற்ற தன் மைகள் பற்றியும் அசலானவை யாவை என்பது பற்றியும்விளக்கம் கொடுத்திருக்கின்றார்கள். இதற்குப் பின்வரும் சம்பவம் தகுந்த சான்றாக அமைகின்றது என நினைக்கின்றேன். ''முஸ்லிம்கள் கைபரை வெற்றிகொண்டபோது 'கனீமத்' பொருட்களை வாங்கியும் விற்றும் ஒரு ஸஹாபி பெருலாபத்தைப் பெற்றுக்கொண்டார். இந்த ஸஹாபி, பெருமானார் (ஸல்) அவர்கள் சமுகத்தில் வந்து 'நாயகமே! இன் றைய வியாபாரத்தில் என்னைப்போன்று எவருமே இலாபம் அடைய வில்லை. முன்னூறு ஊகியா இலாபம் பெற்றேன்' என்றார். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் இதைவிட உயர்ந்த இலாபம் தரும் ஒன்றைக் கூறட்டுமா?' என்று கேட்டுவிட்டு, பர்ளுத் தொழுகைக்குப் பின் இரண்டு ரக்அத்துக்கள் நபில் தொழுவது எனக் கூறினார்கள்.'' 56

முடிவுரையாகப் பெருமானார் (ஸல்) மூலமாக அல் - குர்ஆன் முழுமனித சமுதாயத்துக்கும் விடுக்கும் பின்வரும் தூதைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்து கொள்கிறேன் :

"(நபியே இது) வேதநூல். இதனை நாமே உம்மீது அருட்செய்திருக்கின்றோம். (இதன் மூலம்) மனிதர்களை அவர்களுடைய இறைவன் கட்டளைப்பிரகாரம், இருள்களிலிருந்து வெளியேற்றி பிரகாசத்தின் பால் நீர் கொண்டு வருவீராக (அப்பிரகாசமோ) மிக்க புகழுக்குரிய (அல்லாஹ்வாகிய யாவரையும்) மிகைத்தவனின் வழியாகும்" 57

---

அடிக்குறிப்பு :

1. அல்-குர்ஆன் 42 : 51
2. அல்-குர்ஆன் 42 : 52
3. ஸெயித் அஷ்ஷெஹீத்-அல்-மிஸ்ரி அல்-குர்ஆன் தோற்றுவித்த உயர்சமுதாயம், அஷ்ஷெபாப்-ஹி 1400 வது ஆண்டுமலர், 1980
4. அல்-குர்ஆன் 4 : 82
5. Gibb H. A. R. **Islam**, (Second Edition) Oxford University Press, London 1978. P 18
6. Ibid, page. 19
7. Pikcthal Mohammed Marmaduke, **The Cultural Side of Islam**, page 10
8. அல்-குர்ஆன் 2 : 197
9. அல்-குர்ஆன் 7 : 26
10. அல்-குர்ஆன் 30 : 40
11. அல்-குர்ஆன் 52 : 58
12. அல்-குர்ஆன் 6 : 51
13. அல்-குர்ஆன் 2 : 2
14. அல்-குர்ஆன் 2 : 3
15. அல்-குர்ஆன் 2 ; 4
16. அல்-குர்ஆன் 2 : 5
17. அல்-குர்ஆன் 2 : 183
18. அல்-குர்ஆன்
19. அல்-குர்ஆன் 6 : 152, 153
20. Muhammed Ubaidul Akbar, **The Orations of Muhammed (sal)**, Ashraff press Lahore 1976 page 5
21. Ibid, page 25
22. மஆலிமுத்தன்ஸீஸ், பக்கம்,

23. Ibid, p 17
24. அல்-குர்ஆன் 63 : 6
25. அல்-குர்ஆன் 28 : 77
26. அல்-குர்ஆன் 2 : 200
27. அல்-குர்ஆன் 2 : 201
28. அல்-குர்ஆன் 2 : 202
29. அல்-குர்ஆன் 11 : 15, 16
30. அல்-குர்ஆன் 42 : 20
31. அல்-குர்ஆன் 88 : 16, 17
32. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னுஉமர் (ரழி), நூல் : புகாரி
33. அறிவிப்பாளர் : ஸஃதிப்னுஸ்ஸஃதிஸ் ஸாஇதி(ரழி), நூல்: இப்னு மஜா
34. **Muhammed Shafi Mufthi, The Distribution of Wealth in Islam, page 19**
35. மௌலானா மௌதூதி, இதுதான் இஸ்லாம் (தமிழ்மொழி பெயர்ப்பு) பக்கம் 157
36. அல்-குர்ஆன் 61 : 10, 11
37. அல்-குர்ஆன் 2 : 275
38. அல்-குர்ஆன் 8 : 72
39. அல்-குர்ஆன் 9 ; 20, 21, 22
40. அல்-குர்ஆன் 9 : 24
41. அல்-குர்ஆன் 30 : 69
42. அல்-குர்ஆன் 49 : 15
43. ஸாயிக், இஸ்லாம் ஓர் அறிமுகம், பக்கம் 148
44. ஆல்-குர்ஆன் 2 : 191
45. அல்-குர்ஆன் 4 : 75
46. அல்-குர்ஆன் 8 : 39
47. அல்-குர்ஆன் 9 : 12 13
48. அல்-குர்ஆன் 22 : 39, 40
49. அல்-குர்ஆன் 2 : 216
50. அல்-குர்ஆன் 2 : 214
51. அல் - குர்ஆன் 9 : 111
52. அல்-குர்ஆன் 2 : 261
53. அல்-குர்ஆன் 56 : 22, 23
54. அல்-குர்ஆன் 55 : 72
55. அல்-குர்ஆன் 52 ; 20
56. அறிவிப்பாளர் : உபைதுல்லாபின்ஸல்மானி(ரழி) நூல் : அபூதாவூத்.
57. அல்-குர்ஆன் 14 : 01

2

# மறைவான விடயங்கள் பற்றி

# அல்-குர்ஆன் தரும் யதார்த்தக் கருத்துகள்

அல்-குர்ஆனின் முக்கிய குறிக்கோள் மனித சமுதாயத்தை ஒன்றிணைத்து முழுமனித சமுதாயக் கூட்டுறவொன்றையேற்படுத்துவதே. இக்கூட்டிணைப்பானது வெறுமனே வெளிப்படையான தோற்றப்பாடுகளைக் கொண்டோ, இணைப்புகள், தொடர்புகளைக் கொண்டோ ஏற்படாது. இன்றையவுலகில் நாடுகளுக்கிடையேயும், சமூகங்களுக்கிடையேயும் அன்னியோன்ய பரஸ்பர நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் வளர்ப்பதற்கு இவ்வாறான ஒரு முயற்சியே மேற்கொள்ளப்படுகின்றது. வியாபாரத்தொடர்புகளை இனங்களுக்கிடையேயும் நாடுகளுக்கிடையேயும் ஏற்படுத்திக்கொள்வது, புவியியல் ரீதியான தொடர்புகளை வைத்துக் கொள்ளல், ஏற்றிறக்குமதி வியாபாரத்தை ஊக்குவித்தல், நல்லெண்ணத்தூதுக் குழுக்களைப் பரிமாறிக் கொள்ளல், நிறுவன ரீதியான இயக்கங்களையும் அமைப்புக்களையும் ஏற்படுத்தி அங்கம் வகிப்பது போன்ற இன்னோரன்ன முறைகள் மூலமாக இக்கூட்டிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள இன்றைய நவீனவுலகம் முயன்று கொண்டிருக்கின்றது. ஆனால் இம்முயற்சிகள் எதிர்பார்த்த பலன்களைத் தராது இடையில் தவிடுபொடியாகி விடுவதை நாம் பார்க்கின்றோம். எனவே இவ்வாறான முயற்சிகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு உலக மக்களின் நெஞ்சங்களை ஒன்றோடொன்று இணைக்கக்கூடிய ஒரு முயற்சியின் அவசியத்தை அல்-குர்ஆன் முழு மனித சமுதாயத்துக்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. இன்றையவுலகில் பல்வேறு இனங்களாக, பகுதியினராக, மதத்தினராகப் பிரிந்து வாழக்கூடியவர்கள் எப்போதோ ஒரு காலத்தில் ஒரு நபியின் சமூகத்தினராக இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம். அவர்களுக்கும் அவ்வப்போது அவர்களுக்கு அனுப்பப்பட்ட இறைதூதர்கள் மூலம் இக்கருத்தே கூறப்பட்டது. இதை அல்-குர்ஆன் திரும்ப ஞாபகமூட்டிக்கொண்டும் இருக்கின்றது.

நூஹ் நபியை நாம் அவருடைய இனத்தினரிடம் அனுப்பினோம். அவர் ''என் இனத்தினரே! இறைவனுக்கு வழிப்படுங்கள்; உங்களுக்கு அவனையன்றி வேறு தெய்வமில்லை. நீங்கள் தீமையில் இருந்து விலகி இருக்கமாட்டீர்களா?'' என்றார்.

பின்னர் அவருக்குப் பின் ஆத் எனும் வகுப்பினரைப் படைத்தோம். அவர்களைச் சேர்ந்த ஒரு இறைதூதர் அவர்களிடம் அனுப்பப்பட்டார். ''அல்லாஹ் ஒருவனை வணங்குங்கள்; உங்களுக்கு அவனையன்றி வேறு தெய்வமில்லை.'' என்று அவர் கூறினார்.

பிறகு நாம் மூஸாவையும் அவரது சகோதரர் ஹாரூனையும் அனுப்பினோம்.

மேலும் நாம் மர்யமின் மைந்தரையும் அவருடைய தாயாரையும் ஒரு அடையாளமாக்கினோம். 1

விசுவாசிகளே! நூஹ் நபிக்கு எது போதிக்கப்பட்டதோ, எதன்படி நடக்கும்படி இப்ராஹீம், மூஸா, ஈஸா (அலை) ஆகியோருக்குக் கட்டளையிடப்பட்டதோ, அந்த ஏக தெய்வக் கொள்கையாகிய தீனுடைய பாதையையே உங்களுக்காகவும் அல்லாஹ் நிலையாக நிறுவியிருக்கின்றான். அந்ததீன்மீது நிலைத்திருங்கள். இப்பாதையில் தனித்தனியே பிரிந்து விடாதீர்கள். 2

(நபியே) நீர் கூறும். அல்லாஹ்வையும் நம்மீது அருளப்பட்டதையும், இப்றுஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் யஃகூப் ஆகியவர்கள் மீதும் அவர்கள் சந்ததிகள் மீதும் அருளப்பட்டவைகளையும் மூஸா, ஈஸா முதலிய மற்ற நபிமார்களுக்கு அவர்கள் இறைவனால் அளிக்கப்பட்டவைகளையும் நாம் விசுவாசிக்கின்றோம். இவர்களில் ஒருவரையும் (நபியல்ல என்று) நாம் பிரித்து விடமாட்டோம். அ(ல்லாஹ்ஒரு)வனுக்கே நாங்கள் முற்றிலும் வழிப்பட்டு நடப்போம். 3

கி. பி. 7-ம் நூற்றாண்டில் பெருமானார் (ஸல்) அவர்களால் கட்டியெழுப்பப்பட்ட அரேபிய சமுதாயத்தின் ஊற்றுக்கண்களாக நாம் மேலே அவதானித்த அல்-குர்ஆன் வசனங்கள் எடுத்தோதும் உன்னத போதனைகள் காணப்பட்டன. இவ்வுயரிய தத்துவத்தை அனைத்து மக்களுடனும் சரிசமமாகப் பகிர்ந்து கொள்வதற்காகவே உலகின் பலகோணங்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் முயற்சி செய்தனர். நிலப்பரப்பை விஸ்தீரணப் படுத்திக்கொள்வது அவர்களது நோக்கமாக இருக்கவில்லை.

'தனிநபரின் தன்மையை வளர்த்து அவரை இலட்சிய சமூகமொன்றுக்கு உருவாக்குவது தான் புனித குர்ஆனின் அடிப்படை

நோக்கம். இவ்வாறு ஏற்படும்போது சன்மார்க்கமும் அறவாழ்வும் மேலோங்கி, துன்மார்க்கமும், மறவாழ்வும் மழுங்கி விடுகின்றன. ஒவ்வொரு மனிதனும் அவனது சிருஷ்டிகர்த்தாவுக்கு நேரடியாகப் பொறுப்பாவான் என்று அது பிரகடனம் செய்கின்றது. ஆணைகள் பிறப்பிப்பது மாத்திரமின்றி, அந்த ஆணைகளின் பெறுமதியையும் பிரயோசனத்தையுமிட்டு மக்களுக்கு விளக்கி, அவர்களது மனதில் பதியப்பண்ணுவது புனித குர்ஆனின் முறையாகும்.' 4

## இன்றியமையாத அம்சங்கள் :

ஏகத்துவம் இயற்கையான ஒரே அடிப்படைச் சமயம் பற்றி எடுத்தோதுகிறது. மாறாக பலதெய்வ வாதம் (polytheism) பற்பல சமயங்கள் பற்றிப் பேசுகின்றது. இஸ்லாத்தின் முழக்கம் இறைவன் ஒருவனே என்பது மட்டுமல்ல; மனித இனம் முழுதும் ஒன்றுதான்; அதற்குரிய மார்க்கமும் சமயமும் ஒன்றேதான் என்பதுமாகும். ஆதலால் ஏகத்துவம் (Unity of God) மனித இன ஒருமைப்பாடு (Unity of mankind) மார்க்க அடிப்படை ஒருமைப்பாடு ( Basic Unity of Religion) ஆகியவை இஸ்லாத்தின் இன்றியமையாத பெரும் அம்சங்களாகத் திகழ்கின்றன.

முழுமனித சமுதாயத்தையும் ஒன்றிணைப்பதே அல்-குர்ஆனின் அடிப்படைப் போதனையென்பதையும், இதைச் சாத்தியப்படுத்திக் கொள்ள மனித நெஞ்சங்கள் ஏகத்துவக்கொள்கையின் அடிப்படையில் ஒன்றுபடவேண்டும் என்பதையும் கவனித்தோம். இதை இன்னும் சிறிது விவரித்துச் சொல்வதென்றால் பின்வருமாறு சொல்லலாம்.

1. இம்மை, மறுமைக்கட்டுப்பாடுகள் அனைத்தும் அல்லாஹ்வின் பொறுப்பிலேயே இருக்கின்றன.

2. இவ்வுயரிய தத்துவத்தை மனித சமுதாயத்துக்கு உணர்த்தி அவர்களை விசுவாசங் கொள்ளச்செய்வதற்காகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

3. இவ்வரிய பணியைச் செவ்வனே நிறைவேற்றி முடிப்பதற்காகவே அல்-குர்ஆன் எனும் வழிகாட்டும் ஒளி விளக்கு அருளப்பட்டது.

## அல்-குர்ஆனை அணுகுதல் :

இதுவரை நாம் கவனித்தவற்றை எமது கட்டுரைக்கான ஓர் ஆரம்ப அறிமுகமாக வைத்துக்கொண்டு இனி அல்-குர்ஆன் எடுத்தோதும் மறைவான விடயங்கள்பற்றிய கருத்துக்களின்பால் எமது

சிந்தனையைத் திருப்புவோம். இதற்கு முன் இன்னொருகருத்தையும் கூறிவைக்க விரும்புகின்றேன். அல்-குர்ஆன் கருத்துகளுக்கு விளக்கம் பெறுமுன், நமது புலன்கள் எப்போதும் எந்நிலையிலும் உண்மையைத் தான் அறிவிக்கும் எனும் நம்பிக்கையை மனதில் இருந்து எடுத்து விடுவதும், எமது பகுத்தறிவானது முழுமையானது எனும் தப்பான கருத்தைக்களைந்து விடுவதும், நுபுவ்வத்தின் மூலம் இறைதூதர்களுக்கு இறைவனால் அருளப்படுபவை அனைத்தும் இவையிரண்டையும் தாண்டிச்சென்று உண்மையை அசலான உருவத்தில் உள்ளதை உள்ளபடி அறிவிக்கும் சக்தி வாய்ந்தன எனும் திடமான நம்பிக்கையை நம்முள் வளர்த்துக்கொள்வதும் அவசியம். அல்-குர்ஆன் கருத்துக்களுக்கு உண்மையான விளக்கத்தை அப்போது தான் பெற்றுக்கொள்ளலாம். மேலும், ஏனைய நூல்களை ஆராய்ச்சி ரீதியில் அணுகுவது போன்று அல்-குர்ஆனை அணுகாது பக்திசிரத்தையுடன் அணுகுவதும் ! அதன்கருத்துக்களை விளங்கி நேர்வழி பெறுவதற்குத் துணைசெய்யும்.

இக்கருத்தை அல் - குர்ஆன் வலியுறுத்திக் கூறும்போது,

''இது வேதநூல் : இதில் சந்தேகமே இல்லை ; பயபக்தியுடையவர்களுக்கு, ( இது ) நேரான வழியைக் காட்டும்.

( பயபக்தியுடைய ) அவர்கள் மறைவானவற்றை ( உண்டென்று) விசுவாசங் கொள்வார்கள். தொழுகையையும் கடைபிடித்தொழுகுவார்கள். நாம் அவர்களுக்கு அளித்த ( பொருள் முதலிய ) வற்றிலிருந்து ( தானமாகச் ) செலவும் செய்வார்கள்.

அன்றி (நபியே!) அவர்கள் உமக்கு அருளப்பெற்ற (இவ்வேதத்) தையும், உமக்குமுன் ( இருந்த நபிமார்களுக்கு ) அருளப்பெற்றவற்றையும் விசுவாசங் கொள்வார்கள். ( நியாயத் தீர்ப்பு நாளாகிய ) மறுமையையும் ( உண்மை என்று ) அவர்கள் உறுதியாக நம்புவார்கள்.

இத்தகையோர் தாம், தங்கள் இறைவனின் நேரான வழியில் இருக்கின்றார்கள். இவர்கள் தாம் நிச்சயமாகச் சித்தியடைந்தவர்கள்.'' 5

என்பதாக விளக்கி பக்திசிரத்தையுடன் அதை அணுகுவதன் மூலமே அல் - குர்ஆனில் இருந்து பயன் பெறலாம் என்பதையும் பக்திசிரத்தையுடையவர்களின் பண்புகள் எப்படி அமைய வேண்டும் என்பதையும் தெளிவாக எடுத்தோதுகின்றது.

## மறைவானவற்றில் நம்பிக்கை

ஐம்புலன்களைக் கொண்டு பொருட்களை இனம் கண்டு கொள்வதில் ஒருசில அசாதாரண சந்தர்ப்பங்களில் மனிதன் சிரமத்துக்குள்ளாக வேண்டியேற்பட்டாலும் பொதுவாக இவ்விடயமானது அவ்வளவு கஷ்டமானவொன்றல்ல. பகுத்தறிவைக் கொண்டு ஒரு விடயத்தைப் பற்றிய தீர்வுக்கு வருவது இதைவிட கொஞ்சங் கடினமானதே. இவ்விரண்டினதும் உதவிகள் அற்ற நிலையில் மறைவாக இருக்கக் கூடிய விடயங்கள் பற்றி முழுமையாக ஒரு மனிதன் நம்பிவிடுவதென்றால் அது உண்மையில் குறிப்பிட்ட விடயங்கள் பற்றி சொல்லக்கூடியவரில் இருக்கக் கூடிய அசைக்கமுடியாத நம்பிக்கையையும் ஈடுபாட்டையும்தான் குறிக்கின்றதெனலாம். அல்லாஹ்வுக்கும் அவனது அடியானுக்குமிடையில் நெருக்கமான பிணைப்பையேற்படுத்த வேண்டும் என்பதற்காகவே இஸ்லாத்தில் அதிகமான அல்-குர்ஆன் வசனங்கள் மறைவான விடயங்கள் மீது நம்பிக்கை கொள்ளும்படி அடிக்கடி கூறிக்கொண்டிருக்கின்றன.

அல்-குர்ஆன் விளக்கிக் கூறும் மறைவான விடயங்களை இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. இம்மை வாழ்வில் அல்லாஹ்வின் பிரத்தியேக கட்டுப்பாட்டின்கீழ் மறைவாக வைக்கப்பட்டிருப்பவை. இவை பற்றிய அறிவு மனிதனிடம் கொடுக்கப்படவில்லை. அல்லாஹ் அன்றி வேறெவராலும் அறிந்து கொள்ளமுடியாதவை என இவற்றை அல்-குர்ஆன்குறிப்பிடுகின்றது.

''மறைவானவற்றின் சாவிகள் அவனிடந்தான் இருக்கின்றன. அவற் (றிலுள்ளவற்)றை அவனையன்றி வேறெவரும் அறியார். தரையிலும், கடலிலும் உள்ளவைகளையும் அவன் நன்கு அறிவான். அவன் அறியாமல் யாதோர் இலையும் உதிருவதில்லை. பூமியின் (ஆழத்தில்) அடர்ந்த இருளில் (புதைந்து) கிடக்கும் (கடுகு போன்ற சிறிய) வித்தும் பசுமையானதும், உலர்ந்ததும் (அவனுடைய) தெளிவான (பதிவுப்) புத்தகத்தில் இல்லாமல் இல்லை.'' [6]

''நிச்சயமாக (யுகமுடிவு) காலத்தைப்பற்றிய ஞானம், அல்லாஹ்விடத்தில் (மட்டுந்) தான் இருக்கிறது; அவனே மழையை இறக்கி வைக்கின்றான். அவனே கர்ப்பங்களில் உள்ளவைகளையும் அறிவான். (அவனைத்தவிர) எவரும் நாளைக்கு அவர் என்ன செய்வார் என்பதை அறியார்; அவர் எந்தப்பூமியில் இறப்பார் என்பதையும் (அவனைத்தவிர) எவருமே அறியார். நிச்சயமாக அல்லாஹ்தான் (இவைகளை) நன்கறிந்தோனும் தெரிந்தோனுமாக இருக்கின்றான்'' [7]

2. மனிதனது மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கையில் மறைத்து வைக்கப்பட்டிருப்பவை. இவற்றை மனிதன் மரணித்த தன் பின்பு தான் கண்டுகொள்வான். மறுமை வாழ்வு பற்றிய கருத்தையே இது சுட்டிக்காட்டுகின்றது. இவற்றில் கேள்வி - கணக்கு பற்றிய நம்பிக்கை, மீதான், ஸிராத், சுவர்க்கவாழ்வு, அதன் கனிவர்க்கங்கள், சுவர்க்க அரம்பையர்கள், பாலாறு, மதுவாறு, தேனாறு, ஒருசெங்கல் பொன்னாலும் மற்றையது வெள்ளியாலும் ஆக்கப்பட்டுக் கட்டப்பட்டிருக்கும். சுவர்க்க மாளிகைகள், கஸ்தூரி மணங்கமழும் சுவர்க்க மண், நரக வாழ்க்கை, அதன் கொடூரமான தன்மைகள் போன்றன அடங்கும். இவையனைத்தும் மனித பகுத்தறிவும் விசித்திரமானவையாகத் தோற்றமளித்தாலும் அவையனைத்தும் உண்மையானவையே என அல்-குர்ஆன் மடக்கி மடக்கிப் பல இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

## எல்லாம் அறிந்தவன் அல்லாஹ்

எமது இம்மை வாழ்வில் அல்லாஹ், தனது பிரத்தியேக கட்டுப்பாட்டின்கீழ் வேறெவரும் அறிந்துகொள்ள முடியாத வகையில் மறைத்து வைத்திருந்து வெளியாக்கும் ஐந்து பிரதான விடயங்கள் பற்றிக் கவனித்தோம். இனி இவைபற்றிச் சிறிது விரிவாக ஆராய்வோம். இவ்வைந்து விடயங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருப்பதும் அவதானிக்கற்பாலது. மழையைப் பற்றிய அறிவு தன்னிடம் தான் இருக்கின்றது எனக் கூறும் அல்லாஹ், மழையைப் பொழிய வைப்பதன் மூலம் புற்பூண்டுகளையும், மரம், செடி, கொடிகளையும், கனி வர்க்கங்களையும், பறவை, மிருக இனங்களையும் உற்பத்திசெய்து, இவையெல்லாம் யாருக்காகப் படைக்கப்படுகின்றனவோ அம்மனிதன் தாயின் கர்ப்பவறைக்குள் சிசுவாக இருக்கும்போதே அவனைப் பற்றிய முழு விபரங்களும் தனக்குத்தான் தெரியும் எனக் குறிப்பிடுகின்றான். உலக இயக்கத்துக்கு மனித வாழ்க்கையின் தேவை இன்றியமையாதவொன்று. மனித வாழ்க்கையின் செம்மைக்கு 'நாளை' எனும் ஓர் எதிர்காலம் அவசியப்படுகின்றது. 'நாளை' எனும் சொல்லுக்கு இடமில்லாது போனால் மனித வாழ்க்கை முற்றுப் பெற்றுவிட்டது என்பதே அர்த்தம். எனவே, நாளைக்கு மனிதன் என்ன செய்யப் போகின்றான் என்பது பற்றிய அறிவும் தன்னிடமே இருக்கின்றது என்பதாக அடுத்ததாகக் குறிப்பிடுகின்றான். மனிதனது இவ்வுலக வாழ்க்கைக் கடைசி மைல்கல்லு மரணமாக இருப்பதால் அது பற்றிய தனது அறிவைக் கடைசியாகக் குறிப்பிடுகின்றான். மனிதனது இவ்வுலக வாழ்க்கையானது மறுமை நோக்கிப் போகும் அவனது பயணத்தின் ஒரு சில கட்டங்கள் என்பதாலும் அவனது இலக்கு மறுமை என்பதாலும் யுகமுடிவு பற்றிய தனது அறிவை முதலாவதாகக் குறிப்பிட்டுள்ளான்.

## யுக முடிவு

அல்-குர்ஆனிலும், ஹதீஸிலும் "அஸ்-ஸாஅத்", "அல்-கியாமத்" என வருகின்ற சொற்கள் மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கையையே குறிக்கின்றன எனும் தப்பான அபிப்பிராயம் பலரிடையே இருந்து வருகின்றது. பின்னைய சொல்லைப் பொறுத்தளவில் அவர்களது கருத்து சரியானதே. மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கையில் அல்லாஹ் மறைத்து வைத்திருக்கக் கூடியதே இது. ஆனுல் முன்னைய சொல் இவ்வுலக வாழ்க்கையின் மறைவான முக்கிய ஐந்து விடயங்களில் அல்-குர்ஆன் குறிப்பிட்டுக் காட்டும் முதல் விடயம். "அஸ்-ஸாஅத் என்பது உண்மையாகத் திடீரென ஏற்படக்கூடியது. இதோடு உலகம் முடிந்துவிடும்; அல்கியாமத் என்பது மறுமையைப் பொறுத்த விடயம். இதற்காக வேண்டியே அல்லாஹ் இருமுறை ஸூர் ஊதப்படுவதை அவசியமாக ஆக்கியிருக்கின்ருன். முதலாவது யுக முடிவுக்கானது; இரண்டாவது கியாம நாளைக்கானது. இவையிரண்டுக்குமிடையே இடைவெளியும் உண்டு. அல்-குர்ஆன் விரிவுரையாளர்களிடத்தில் இவ்விடைவெளி சில வருடங்கள் என்றும், இன்னும் சிலரிடத்தில் நாற்பது வருடங்கள் எனும் திட்டவட்டமான கணக்கும் கொள்ளப்படுகின்றது" 8. அல்-குர்ஆன் வசனங்கள் இவையிரண்டுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

*(நபியே! யுக முடிவு) காலத்தைப் பற்றி - அது எப்போது வரும் என - அவர்கள் உம்மிடம் கேட்கின்ருர்கள். (அதற்கு) நீர் கூறும். "அதன் அறிவு என் இறைவனிடத்தில்தான் இருக்கின்றது. அது வரும் நேரத்தை, அவனைத் தவிர மற்றெவரும் தெளிவாக்கவும் முடியாது. (அதுசமயம்) வானங்களிலும், பூமியிலும் மகத்தான சம்பவங்கள் நிகழும். திடுகூருகவன்றி, (அது) உங்களிடம் வராது" அதனை முற்றிலும் அறிந்து கொண்டவராக உம்மை அவர்கள் மதித்து, (அதனைப்பற்றி) உம்மிடம் கேட்கிருர்கள். (அதற்கு) நீர் கூறும். "அதன் அறிவு அல்லாஹ்விடத்தில் தான் இருக்கின்றது. மனிதரில் பெரும்பாலோர் (அதனை) அறியமாட்டார்கள்."* 9

இவ்வசனமானது இவ்வுலகத்தில் திடீரென ஏற்படக்கூடிய அழிவையே குறிப்பிடுகின்றது.

*மறுமை நாளைப்பற்றி அல்-குர்ஆன் குறிப்பிட்டுக் காட்டும்போது, "மனிதர்கள் அனைவரும் ஒன்றுசேர்க்கப்படும் நாளாகும். அது அன்றி, அவர்கள் யாவரும் (இறைவனின் சந்நிதியில்) கொண்டு வரப்படக்கூடிய நாளாகும்"* 10

பின்வரும் அல்-குர்ஆன் வசனம் யுகமுடிவு பற்றியே குறிப்பிடு கின்றது.

> ''வானங்களிலும் பூமியிலும் உள்ள இரகசியம் அல்லாஹ்வுக்கே சொந்தம். (அதனை மற்றெவரும் அறியமாட்டார்கள்) ஆகவே (யுக) முடிவுகாலம் (அஸ்-ஸாஅத்) இமை கொட்டி விழிப்பதைப் போல், அல்லது அதைவிட விரைவாகவே முடிந்துவிடும். நிச்சய மாக அல்லாஹ், யாவற்றின் மீதும் மிக்க ஆற்றலுடையவனாகவே இருக்கிறான்'' 11

மறுமையின் கால அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, யுக முடிவுகாலம் மிகமிகச் சொற்பமென்ற கருத்தை இவ்வசனம் எடுத் தோதுவதும் இவையிரண்டுக்குமிடையே இருக்கும் வித்தியாசத்தை விளங்கிக் கொள்ளப் போதுமானது என நினைக்கின்றேன்.

இவ்யுகமுடிவு நாள் பற்றியோ நேரம் பற்றியோ அல்லாஹ் அல் லாத வேறெவராலும் புரிந்துகொள்ள முடியாது. இன்னொரு வித மாகக் கூறினால் யுகமுடிவு பற்றி அல்லாஹ்வே அறிவான். அதற்குரிய நேரம் வரும்போதுதான் அதை அல்லாஹ் வெளிப்படுத்துவான் என்ற கருத்தையும் அல்-குர்ஆன் கூறிக்கொண்டிருக்கின்றது. ஸுன்னா தரும் விளக்கமும் இதுவே.

## மேற்கத்திய பெண்ணின் ஏமாற்றம்

நவீன விஞ்ஞானத்தின் துணைகொண்டு ஒரு மேற்கத்தியப் பெண் ஆராய்ச்சியில் ஈடுபட்டு யுகமுடிவு நிகழும் ஒரு தினம் பற்றியும் நேரம் பற்றியும் திட்டவட்டமாக அண்மையில் குறிப்பிட்டிருந்தாள். அவள் குறிப்பிட்ட நாள் ஞாயிற்றுக் கிழமையாகவும், நேரம் மதீ னாவின் நேரப்படி அஸருடைய நேரம் எனவும் சொல்லப்பட்டது. குறிப்பிட்ட தினம் வந்தவுடன் மக்கள் ஒருவருக்கொருவர் மறுமையில் சந்திப்போம் எனக் கூறிக்கொண்டு பிரியாவிடை கூறிக்கொண்டனர். அஸருடைய நேரம் கழிந்து இஷாவுடைய நேரமும் ஆகிவிட்டது. உலக அழிவு ஏற்படவில்லை. காபிரான இப்பெண்ணின் வார்த்தை களில் ஏமாந்துபோன மக்கள் அப்போதுதான் உண்மையை விளங்கிக் கொண்டார்கள். ஒருசிலர் மத்தியிலாவது இம்மூட நம்பிக்கை 'சுய் ருல் முவஹ்ஹிதீன்' எனவழைக்கப்படும் பெருமானார் (ஸல்) அவர்க ளது பூமியாகிய மதீனதுல் முனவ்வராவிலேயே ஏற்பட்டதென்றால் நாம் எவ்வளவு தூரம் அறியாமையில் இருக்கின்றோம்'' என்பதாக பழீலதுஷ் ஷெய்க் அப்துல் பத்தாஹ் அஷ்மாவீ என்பவர் வினவுகின் றார். எனவே, யுக முடிவு பற்றி அல்-குர்ஆன் கொண்டிருக்கும் கருத்

துக்கள் எவ்வளவு யதார்த்தமானவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கின்றோம்.

## மழை நீர்

இனி அடுத்த விடயத்துக்கு வருகின்றேன். வானத்தில் இருந்து பொழியும் மழை நீர் பற்றிய அறிவும் தன்னிடம் மாத்திரமே இருப்பதாக அல்-குர்ஆன் வாதிக்கின்றது. வானத்தில் இருந்து பொழியக் கூடிய மழை முற்றாக நின்றுவிட்டால் உலக இயக்கமே தடைப்பட்டு விடும். சிருஷ்டிகளின் ஆக்கத்துக்கு மூலப் பொருளாக அமைவதும் தண்ணீரே. எனவே, இதுபற்றிய அல்-குர்ஆனின் கொள்கையை இன்னும் சிறிது ஆழமாக ஆராய்வோம்.

"அவன் தான் மேகத்திலிருந்து மழையை இறக்கி வைக்கின்றான். அதைக் கொண்டே சகல வகைப் புற்பூண்டுகளையும் நாம் முளைக்க வைத்து, அதிலிருந்து பசுமையான தழைகளையும் நாம் வெளிப் படுத்துகின்றோம், பேரீச்ச மரத்தின் பாளைகளில் வளைந்து தொங் கும் பழக்குலைகளுமிருக்கின்றன. (அவற்றையும் நாமே வெளிப் படுத்துகின்றோம்.) திராட்சைத் தோட்டங்களையும், (பார்வைக்கு) ஒன்றுபோலும் (ரசனையில்) வெவ்வேறாகவுமுள்ள மாதுளை, ஜய்த் தூன், (-ஒலிவம்) ஆகியவற்றையும் (நாமே வெளிப்படுத்துகின் றோம்.) அவற்றின் கனிகளை நோக்குவீர்களாக! அவை (பூத்துக்) காய்ப்பதையும் பின்னர் கனிந்து பழமாகும் விதத்தையும் (உற்று நோக்குவீர்களாக!) விசுவாசங் கொள்ளும் மக்களுக்கு, நிச்சய மாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன." 12

அல்லாஹ்வே மேகத்தில் இருந்து மழையைப் பொழியச்செய்து, உயிரிழந்த பூமிக்கு அதைக் கொண்டு ஜீவனளிக்கின்றான். (நல் லுபதேசத்துக்கு) செவிசாய்க்கும் மக்களுக்கு நிச்சயமாக இதில் ஓர்அத்தாட்சி இருக்கிறது. 13

(நபியே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் தான் மேகத்தில் இருந்து மழை பொழியச் செய்கிறான். (அதனால்) பூமி பசுமையாகி விடுகின்றது. 14

(நபியே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் தான், மேகத்தில் இருந்து மழையைப் பொழிவித்து, அதனைப் பூமியில் ஊற்றுக்களாக ஓடச் செய்கிறான். பின்னர், அதனைக் கொண்டு பல வர்ணங்களையுடைய (பலவகைப்) பயிர்களை அவன் வெளிப் படுத்துகின்றான். பின்னர் (கதிர்) முற்றி, அவை மஞ்சள் வர்ண மாக இருக்கக் காண்கின்றீர். பின்னர் அதனைக் (காய்ந்த) சருகு

களாக்கி விடுகின்றான். நிச்சயமாக இதில், அறிவுடையோர்களுக்கு நல்ல படிப்பினை இருக்கின்றது.[15]

பண்டைக்கால நாகரீக தோற்றங்களுக்குக் கூட நதித்திரங்கள் தான் களமமைத்துக் கொடுத்திருப்பதைக் கவனிக்கும்போது நீரின் மகத்துவத்தை இன்னும் சிறிது சிறப்பாக விளங்கிக்கொள்ள முடிகின்றது. சிந்து, கங்கை நதி திரங்களில் தோன்றிய நாகரீகம், எகிப்தில் நைல் நதி திரத்தில் தோன்றிய நாகரீகம், யூப்பிரடீஸ், தைகிறீஸ் நதிகளுக்கு மத்தியில் தோன்றிய மொசபட்டோமியா நாகரீகம் முதலியன விசேடமாக இவ்வகையில் குறிப்பிட்டுக் காட்டக் கூடியன. வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானதாகவும், உலகத்தில் தோன்றியுள்ள அனைத்து உயிரினங்களின் தோற்றப்பாட்டுக்கு அடிப்படையானதாகவும் தண்ணீரே அமைந்திருப்பதை நோக்கும்போது இதன் மகத்துவத்தை இன்னும் சிறிது ஆழமாகப் புரிந்துகொள்கின்றோம்.

''தண்ணீர் தான் வாழ்க்கையின் அடிப்படை. இதனாலேயே அல்-குர்ஆன் 'தண்ணீரில் இருந்தே உயிருள்ள அனைத்தையும் நாம் ஆக்கினோம்' எனக் கூறுகின்றது. குறிப்பிட்டுக் காட்டக் கூடிய உலகில் தோன்றிய நாகரீகங்கள் அனைத்தும் தோன்றுவதற்கு அவை தோன்றிய இடங்களில் காணப்பட்ட பசுமையான தன்மைகளும், உற்பத்தி முயற்சிகளுமே காரணங்களாகின்றன. அந்நாகரீகங்களின் முன்னேற்றத்தில் இவையிரண்டும் சமபங்கு கொள்கின்றன.''[16] எனவே, இறையருட் கொடையான நீர் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை நாம் உணர வேண்டியிருக்கின்றோம்.

''தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காதெனில்'' என்று திருவள்ளுவர் கூட தனது குறளில் இம்மழை நீரின் அவசியத்தை வலியுறுத்துகின்றார். இவ்வளவு முக்கியமான, அல்லாஹ்வின் பிரத்தியேக கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய மழைநீரைக் கிரமமாகப் பெறுவதற்கு அல்-குர்ஆன் எங்களிடம் இரண்டு தகைமைகளை எதிர்பார்க்கின்றது.

1. அல்லாஹ்வைப் பற்றிய விசுவாசம்

2. இறையச்சம் என்பனவே அவை. இவ்விரண்டு தகைமைகளையும் நாம் பெற்றுக்கொள்ளாது எவ்வளவுதான் நவீன தொழில் நுட்பம், விஞ்ஞானம் முதலியவற்றின் துணைகொண்டு செயற்கை முறையில் மழையைத் தருவிக்க முயன்றாலும் அது உண்மையான வழிமுறையாக இருக்காது. இமாம் பைஹகீ அவர்களது ரிவாயத்தில் பின்வரும் நிகழ்ச்சி காணப்படுகின்றது.

பனூபதாரா எனும் ஒரு கிளையில் இருந்து இஸ்லாத்தையேற்றுக் கொள்ளும் நோக்குடன் ஒரு தூதுக்குழு பெருமானாரிடம் வந்தது. அவர்களது கிராமம்பற்றி பெருமானாரவர்கள் வினவினார்கள். விடையாக மழையின்மையால் தங்களது பகுதி காய்ந்து வரண்டு போய் இருப்பதுபற்றி அவர்கள் முறையிட்டுக்கொண்டனர். உடனே பெருமானாரவர்கள் எழுந்து மிம்பரில் ஏறி 'யாஅல்லாஹ்! உன்னுடைய நாட்டுக்கும் கால்நடைகளுக்கும் நீர் புகட்டுவாயாக. உனது அருட்கொடையைப் பரத்துவாயாக. மரணித்துப்போயுள்ள உனது பூமிக்கு உயிர்கொடுப்பாயாக' எனப் பிரார்த்தித்தார்கள். இவர்களது பிரார்த்தனையின் காரணமாக ஒரு கிழமை முழுதாக சூரியனையே காண முடியாத வகையில் பெருத்த மழை பெய்தது.

## மழை தேடித் தொழுதல்

இறையச்சத்தோடு ஒரு விசுவாசி, மழையில்லாத போது, மழை வேண்டித் தொழக்கூடிய இரண்டு ரக்அத் தொழுகையை நிறைவேற்றிக் கேட்கக்கூடிய பிரார்த்தனையின் மூலம் அல்லாஹ் மழையைப் பொழியச் செய்யக்கூடியவன். மழை முழுக்க முழுக்க அல்லாஹ்வின் ஒரு மறைவான இரகசியம். அவன் விதிக்கும் நிபந்தனைகட்குக் கட்டுப்படும்போது தான் நாம் அதன் பயனை அனுபவிக்கலாம். மாறாக ஒன்றுமேயறியாத கால்நடைகள்மீது இரக்கப்பட்டு அல்லாஹ் இறக்கி வைக்கும் மழையைக் கொண்டு ஆறறிவு படைத்த மனிதன் அதை உபயோகிக்க வெட்கம் வேண்டாமா?

## பிறப்பின் இரகசியம்

இனி அடுத்த விடயத்துக்கு வருவோம். தாயின் கர்ப்பப்பையில் இருக்கக்கூடிய சிசுபற்றிய அறிவும் தன்னிடமேயுண்டு. மனிதர்களால் இதைப் புரிந்துகொள்வது சாத்தியமில்லை என அல்-குர்ஆன் எடுத்தியம்பிக்கொண்டிருப்பதை நாம் கவனித்தோம். நவீன விஞ்ஞானம் தாயின் கர்ப்பத்தில் இருக்கக்கூடிய சிசு அது பிறப்பதற்கு முன்பே பிறக்கப்போவது ஆணு, பெண்ணு என்பதுபற்றி அறிவதில் சாத்தியப்பட்டிருக்கின்றது எனவும், விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாகப் பிள்ளைகளைத் தாயின் கர்ப்பத்தில் உற்பத்தி செய்து பிறக்கச் செய்ய முடியும் எனவும் அண்மைக்காலத்தில் ஒரு பிழையான அபிப்பிராயம் உலகினர் மத்தியில் கட்டவிழ்த்துவிடப்பட்டதையும் நாம் அறிவோம். இக்கருத்து எவ்வளவு தூரம் பிழையானது என்பதை நாம் நிரூபிப்பதற்கு முன் மேலே நாம் அவதானித்த அல்-குர்ஆன் கருத்துக்கு ஆதாரமாக இறைவன் குறிப்பிடும் இன்னும் சில வசனங்களின்பால் நமது சிந்தனையைத் திருப்புவோம்.



பொது நூலகம் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

''வானங்கள் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்குரியதே. (இவற்றைத் தவிர) அவன் விரும்பியதையும் சிருஷ்டிக்கின்றான். ஆகவே, அவன் விரும்பியவர்களுக்கு பெண் சந்ததியை மாத்திரம் கொடுக்கின்றான். அவன் விரும்பியவர்களுக்கு ஆண் சந்ததியை மட்டும் கொடுக்கின்றான்''[17]

''அல்லது, ஆணையும் பெண்ணையும் கலந்தே கொடுக்கின்றான். அன்றி, அவன் விரும்பியவர்களை (ச் சந்ததியற்ற) மலடாகவும் ஆக்கி விடுகின்றான். நிச்சயமாக அவன் (அவரவர்களின் தகுதியை) நன்கறிந்தோனும், (தான் விரும்பியவாறு செய்ய) ஆற்றலுடையோனுமாக இருக்கிறான்.''[18]

''ஒவ்வொரு பெண்ணும் (கர்ப்பத்தில்) சுமந்துகொண்டிருப்ப (து ஆணா பெண்ணா என்ப) தையும் அல்லாஹ் நன்கறிகிறான். கர்ப்பப் பைகள் (கர்ப்பம் தரிக்கும் சமயம்) சுருங்குவதையும், (பிரசவிக்கும் பொழுது) அவை விரிவதையும் அவன் அறிகிறான். (கர்ப்பங்களிலுள்ள) ஒவ்வொன்றுக்கும் (அக்கர்ப்பங்களில் தங்கியிருக்க வேண்டிய) காலம் அவனிடம் குறிப்பிடப்பட்டேயிருக்கின்றது''[19]
''அவன் அறியாமல் யாதொரு பெண் கர்ப்பமாவதுமில்லை; பிரசவிப்பதுமில்லை.''[20]

## குழந்தை குழாயில் தரித்ததா ?

நவீன விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக பரிசோதனைக் குழாய் (Test Tube) மூலமாக அண்மையில் ஒரு பெண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்ததை உலகம் வியப்புடன் நோக்கியது. அல்லாஹ்வின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக இவர்கள் புதுமுறைகளைக் கொண்டு குழந்தையொன்றைப் பிறக்கச் செய்யவில்லை. ஆணினது இந்திரியம் ஒரு பெண்ணது கர்ப்பப்பையில் செலுத்தப்பட்டு பிள்ளை தரிப்பதற்கு ஏற்ற அணுக்களும் அதில் காணப்பட்டால் ஒரு குழந்தையுண்டாவதைப் பொதுநியதியாக அல்லாஹ் ஏற்படுத்தி வைத்திருக்கின்றான். இந்நியதியில் நவீன விஞ்ஞானம் எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லை. மாறாக இயற்கையான உடலுறவு கொள்ளும் முறையை மாற்றியமைத்து ஆணின் இந்திரியத்தைக் குழாய் வழியாகப் பெண்ணது கர்ப்பப்பையினுள் நுழைத்தார்கள். எவ்வாறு இயற்கையில் ஒரு பெண் தாய்மையடைந்து ஒன்பது மாதங்கள் வயிற்றில் சுமந்து ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கின்றாளோ, அவ்வாறே இவளும் பெற்றெடுத்தாள். குழந்தையானது குழாயில் தரிக்கவில்லை; குழாய் அதற்குப் பாலூட்டவும்இல்லை. ஏனெனில் அதற்கான பாலை அல்லாஹ் தாயின் மார்பில் தான் வைத்திருக்கின்றான். குறிப்பிட்ட பெண் கர்ப்பமடைந்திருக்கும்

போது, பிறக்கப்போகும் பிள்ளை ஓர் ஆணாகத்தான் இருக்கும் என வைத்தியர்கள் தீர்க்கதரிசனம் கூறியிருந்தனர். ஆனால் பிறந்ததோ பெண்பிள்ளை. இதனால் மிகுந்த கவலைக்குள்ளான அத்தாய் வைத்தியர்களிடம் இதுபற்றி விளக்கம் கேட்டபோது, நாம் அவ்வாறுதான் நினைத்திருந்தோம். என்ன செய்யலாம்? அடுத்தமுறை முயற்சித்துப் பார்ப்போம் எனக் கூறிவிட்டனராம்.

படைப்பின் இரகசியம் முழுமையாக அல்லாஹ்வின் சொந்த நாட்டப்படியே நடக்கின்றது. மனித சந்ததிகளையுற்பத்தி செய்வதாயிருந்தாலென்ன, வேறென்ன உற்பத்தியாக இருந்தால் என்ன மனிதனுக்குத் தனது உழைப்பை ஈடுபடுத்தலாமேயொழிய அவன் விரும்பியபடி சிருஷ்டித்துக் கொள்ளவோ, உற்பத்தி செய்துகொள்ளவோ முடியாது.

1. "நீங்கள் விதைக்கக் கூடியவைகளைப் பார்த்தீர்களா? நீங்கள் அதை முளைக்கப்பண்ணுகின்றீர்களா? அல்லது நாங்கள்தான் முளைக்கப் பண்ணுகின்றோமா?
2. நாங்கள் நாடினால் அதைக் கூளமாக ஆக்கியிருப்போம்.
3. நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா?
4. அதனை (ச் சிசுவாக) நீங்கள் சிருஷ்டிக்கிறீர்களா? அல்லது நாம் சிருஷ்டிக்கிறோமா?
5. நீங்கள் (அடுப்பில்) மூட்டுகின்ற நெருப்பையும் கவனித்தீர்களா?
6. அதன் மரத்தை நீங்கள் உற்பத்தி செய்கின்றீர்களா? அல்லது நாம் உற்பத்தி செய்கின்றோமா?"[21]

எனவே, நவீன தொழில்நுட்பம், விஞ்ஞானம் முதலியவைகளில் நம்பிக்கை வைத்திருப்போர் அல்லாஹ்வின் படைத்தல் தொழிலில் சிருஷ்டிகளாகிய எம்மால் பங்குபெற முடியாது என்பதை ஏற்றுக்கொள்வதுதான் நியாயமானதும் முறையானதுமாகும், இதற்கு வெட்கப்படவேண்டிய தேவையில்லை.

## நாளை நடப்பது என்ன ?

அடுத்த நிமிடம் மனிதன் என்ன செய்யப்போகின்றான் என்பது பற்றி அவனால் அறிந்துகொள்ள முடியாது. இதேபோன்றுதான், தான் எப்போது மரணமடையப் போகின்றான் என்பது பற்றியும், பூமியின்

எப்பார்கத்தில் எந்நிலேயில் மரணமடையப் போகின்ருன் என்பது பற்றியும் மனிதனுல் ஏற்கனவே அறிந்துகொள்ள முடியாது. தீர்க்கதரிசனம் கூறக்கூடிய உரிமை அல்லாஹ் ஒருவனுக்கேயுண்டு. இதன் காரணமாகவே அல்-குர்ஆன் நம்மை இவ்வாறு பணிக்கின்றது:

(நபியே!) எந்த விஷயத்தைப்பற்றியும் ''நிச்சயமாக நான் அதனை நாளைக்குச் செய்துவிடுவேன்'' என்று கூருதீர். ஆயினும் ''இன்ஷா அல்லாஹ்'' ('அல்லாஹ் நாடினுல்' நாளைக்குச் செய்வேன் என்று கூறுவீராக.) நீர் (இதனை) மறந்துவிட்டால் (ஞாபகம் வந்ததும் இவ்வாறு) உம் இறைவனின் பெயரைக் கூறுவீராக! தவிர, இதைவிட இன்னும் நெருங்கிய பல நல்ல விஷயங்களையும் என் இறைவன் எனக்கு அறிவிக்கக் கூடும்'' என்றும் கூறுவீராக'' 22

நாளைக்கு என்ன நடக்கப் போகின்றது? நான் என்ன செய்யப் போகின்றேன் என்பதுபற்றித் தன்னுல் அறிந்துகொள்ள முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளும் மனிதன், அல்லாஹ்வின் பிரத்தியேக கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய மறைவான விடயங்களை அறிந்து கொள்வதற்காக குறிகாரர்களையும், சோதிடர்களையும் அணுகித் தெரிந்துகொள்ள முற்படுகின்ருன். இம்முறையானது இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்படுத்தப்படவில்லை.

''விசுவாசிகளே! நிச்சயமாக மதுபானமும், சூதாட்டமும், விக்கிரக ஆராதனையும், அம்பெறிந்து குறி கேட்பதும் ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளிலுள்ளவையாகும். ஆகவே, இவைகளில் இருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். (அதனுல்) நீங்கள் சித்தி பெறுவீர்கள்'' 23

இனி இவ் விடயத்தில் ஹதீஸின் அறிவுறுத்தல்களைக் கவனிப்போம்.

''சில மனிதர்கள் பெருமானுரையணுகிக் குறி பார்ப்போரைப் பற்றிய அவர்களது கருத்தைக் கேட்டார்கள். அவர்களிடம் எதுவுமில்லை எனப் பெருமானுர் விடையிறுத்தார்கள். அப்போது வந்திருந்தோர் 'அவர்கள் சொல்லக் கூடியவை சில நேரங்களில் உண்மையாகி விடுகின்றனவே' எனக் கூறினர். ஜின்கள் அவர்களது செவிகளில் போடக்கூடிய சில சொற்கள் உண்மையானவை. இவ்வாறுன ஒருண்மை வார்த்தையுடன் நூறு பொய்களையும் கலந்து விடுகின்றனர்'' 24 எனக் கூறினுர்கள்.

''எவராவது குறிகாரரையண்டிக் குறிபார்த்தால் அவருடைய நாற்பது நாள் தொழுகைகளை அல்லாஹ் ஏற்றுக்கொள்ள மாட்டான்'' 25

இஸ்லாத்துக்கு முன்னைய ஜாஹிலிய்யாக் காலத்தில் சோதிடமானது ஒரு மதிப்பு வாய்ந்த துறையாக அறபிகளால் மதிக்கப்பட்டு வந்தது.

அக்காலத்தில் சோதிடகாரர்கள் அவர்களிடத்தில் அறிவுடையோராகவும், தத்துவ ஞானிகளாகவும், வைத்தியர்களாகவும், தீர்ப்புக்களை வழங்கக் கூடியோராகவும், மதவறிஞர்களாகவும் மதிக்கப்பட்டனர். குறி பார்க்கும் கலையானது பெரும்பாலும் கல்தானியர் எனும் இனத்தினரிடமிருந்தே அறபு மக்களிடம் நுழைந்தது. அறபு நாட்டுக்குள் அவர்கள் கொண்டுவந்த நட்சத்திர கோளங்கள் பற்றிய அறிவோடு இதையும் கொண்டுவந்தனர்.

ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட இவ்வழக்கம் பெருமானார் (ஸல்) அவர்களது நபித்துவத்தின்பின் இல்லாதொழிக்கப்பட்டது.

## மரண வேளையும் இடமும்

அடுத்த ஒரு முக்கியமான மறைவான விடயம் மனிதன் எப்போது, எந்நிலையில், பூமியின் எப்பகுதியில் இறப்பான் என்பது பற்றியதாகும். நவீன விஞ்ஞானமோ, தொழில் நுட்ப முன்னேற்றங்களோ, மனிதனது அறிவியல் வளர்ச்சிகளோ இவைபற்றி அறிந்து கொண்டதாகவோ, தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்ததாகவோ தெரியவில்லை. இறை நியதிப்படி குறிப்பிட்ட தவணை வந்துவிட்டால் அதைப் பிற்போடும் உரிமையோ, அல்லது தவணைக்கு முன்னதாக முற்படுத்திக்கொள்ளும் சக்தியோ மனிதனிடம் கிடையாது.

''உங்களில் எவருக்கும் மரணம் வருவதற்கு முன்னதாகவே நாம் உங்களுக்குக் கொடுத்தவைகளில் இருந்து தானம் செய்யுங்கள். (அவ்வாறு செய்யாதவன் மரிக்கும் சமயத்தில்) "என் இறைவனே! ஒரு சொற்ப காலத்துக்கு என்னை விட்டு வைக்க வேண்டாமா? (அவ்வாறு விட்டு வைத்தால்) நான் தானமும் செய்வேன்; (நன்மைகளைச் செய்து) நல்லோர்களிலும் ஆகிவிடுவேன்'' என்று கூறுவான்'' எனினும் யாதோர் ஆத்மாவுக்கும் அதற்குரிய தவணை வரும் பட்சத்தில் (அதனை) அல்லாஹ் பிற்படுத்தவே மாட்டான்; அன்றி நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிந்தே இருக்கின்றான்'' 26

"ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே தீரும். எனினும் உங்கள் (செயல்களுக்குரிய) கூலிகளை நீங்கள் பூரணமாக அடைவதெல்லாம், மறுமை நாளில்தான். ஆகவே, (அந்நாளில்) எவர் (நரக) நெருப்பில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுச் சுவர்க்கத்தில்

புகுத்தப்பெறுகின்றாரோ அவர், நிச்சயமாகப் (பெரும்) பாக்கியத்தை அடைந்துவிட்டார். இவ்வுலக வாழ்க்கை, மயக்கக்கூடிய (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை.'' 27

''நீங்கள் எங்கிருந்தபோதிலும், மரணம் உங்களை அடைந்தே தீரும் - மிகப்பலமான உயர்ந்த (கோட்டை) கொத்தளங்களின் மீது நீங்கள் இருந்தபோதிலும் சரியே!'' 28

''நாம்தான் உங்களுக்கிடையில் (பல விதங்களில்) மரணத்தைக் கற்பிக்கின்றோம். (இவ் விஷயத்தில்) எவரும் நம்மை மிகைக்க முடியாது'' 29

மனிதர்களால் ஏற்கனவே அறிந்துகொள்ள முடியாத வகையில் மரணத்தை இறைவன் முழுக்க மர்மமானவொன்றாக அமைத்து வைத்திருந்தாலும் கூட,

(எவனேனும் நோய்வாய்ப்பட்டு, அவனின்) உயிர் தொண்டைக் குழியை அடைந்துவிட்டால், (அவனுக்கு சமீபத்தில் இருப்பவர்கள் அவனைச் சொஸ்தப்படுத்த) மந்திரிப்பவன் யார்? (எங்கிருக்கின்றான்?) என்று கேட்கின்றனர். எனினும், அவனோ நிச்சயமாக இதுதான் (தன்னுடைய) பிரிவினை என்பதை (உறுதியாக) அறிந்து கொள்கின்றான். (அவனுடைய) கெண்டைக்கால், கெண்டைக் காலோடு பின்னிக்கொள்ளும்'' 30

தனது மரணத்தைப்பற்றி அறிந்துகொள்ளக்கூடிய, புலன்களால் கண்டு தெரிந்துகொள்ளக்கூடிய அறிவு கொடுக்கப்படக்கூடிய நேரம் அவனால் எதுவித நல் அமல்களையும் ஆற்றமுடியாத நேரமாகும். ஏற்கனவே, மறைவான இம்மரணம் ஒருபொழுது திடீரென வந்து தன்னை இராஞ்சிக் கொண்டு போய்விடும். எனவே, அதற்கு முன் நல்லன செய்யவேண்டும் என ஓர்ந்து செயற்பட்டிருப்பின் அவன் சஞ்சலமேது மற்ற நிலையில் தனது நீண்ட பயணத்தின் மூன்றாவது கட்டத்தை முடித்துக்கொண்டு (முதலாவது கட்டம் ஆலமுல் அர்வாஹ் எனப்படும் ஆன்மவுலகம், இரண்டாவது தாயின் வயிறு) ஆலமுல் பர்ஸக் எனப்படும் அடுத்தவொரு மறைவான வாழ்க்கைக்குப் புறப்படுவான். இன்றேல் அவன் போக விருப்பப்படாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது பலவந்தமாக அவனது உயிர் உடலைவிட்டுப் பிரிக்கப்படும். தட்டிக் கேட்கவோ வழக்குத் தொடரவோ யாருக்கும் சக்தி வராது.

இதுவரை இவ்வுலக வாழ்க்கையின்போது மர்மமானவைகளாக இருக்கக்கூடிய சில முக்கியமான விடயங்களை எவ்வாறு அல்-குர்ஆன் வர்ணித்துச் செல்கின்றது என்பது பற்றியும் அல்-குர்ஆனின் மறை

வான விடயங்கள்பற்றிய கருத்துக்கள் எவ்வளவு தூரம் யதார்த்த மானவை என்பதையும் கவனித்தோம்.

## மரணத்தின் பின் நடப்பது என்ன ?

இனி மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கையில் மறைவாக இருப் பனபற்றிய அல்-குர்ஆனின் கருத்துக்களை நோக்குவோம். மரணத் துக்குப் பின் மனிதனுடையநிலை என்ன என்பது பற்றி மூன்று வித மான வித்தியாசமான கொள்கைகள் இன்று உலகத்தில் இருக் கின்றன.

1. மனிதன் மாண்டபின் அழிந்து போகின்றான், மறு வாழ்வு என்ற ஒன்று அவனுக்கு இல்லை; மறுமை வாழ்வு மெய்மையற்றது; நடக்கமுடியாத ஒன்று என்றும் இக் கூட் டத்தினர் வாதாடுகின்றனர். இத்தகைய கொள்கையுடை யவர்கள் நாத்திகர்களாவர்.

2. இரண்டாவது கொள்கையுடையோர், இவ்வுலகில் மனிதன் ஆற்றக்கூடிய கருமங்களுக்கேற்ப அதன் நன்மையையோ தீமையையோ அனுபவிப்பதற்காக மறுபிறப்பை எடுக்கின் றான் என்பதாகும். நல்வினை செய்தவன் அடுத்த பிறவியில் உயர்ந்த அந்தஸ்த்திலும், தீவினை செய்தவன் தாழ்ந்த அந் தஸ்த்திலும் பிறவியெடுப்பான் என்பதே இவர்களது வாதம்.

3. மூன்றாவது கூட்டத்தினர், இறுதித் தீர்ப்பு நாளாகிய கியாமத், மஹ்ஷர் (மீண்டும் உயிர் ஊட்டி எழுப்புதல்) இறை நீதி மன்றத்தில் ஆஜராதல், தண்டனை வெகுமதி ஆகியவை மீது நம்பிக்கை கொள்கின்றனர். இதுவே அல்- குர்ஆனின் கொள்கை.

இவ்வுலகில் படைக்கப்பட்டிருக்கின்ற அனைத்தும் அழிந்து விடு கின்றன. ஆனால் மனிதனுக்கு அழிவென்பதே கிடையாது. இறை வனின் படைப்புக்களில் சிலவான மரங்கள் மிருகங்கள் மனிதனைவிட இவ்வுலகில் நீண்டகாலம் வாழக்கூடியன. அவ்வாறாயின் தனது பிரதி நிதியாக சிறந்த படைப்பாகப் படைக்கப்பட்டுள்ள மனிதனது வாழ்க்கையும் மரணத்துடன் முடிவடைந்து விடுவதென்றால் அவனுக் காக இறைவன் இறைதூதர்களையும் வேதங்களையும், இன்னும் எத்தனையோ அருட் கொடைகளையும் ஏன் ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கின்றோம்.



. 85177

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் தாவரவியல் நிலையத்தில் பேணிக்காக்கப்பட்டுவரும் புராதன இனமரங்களின் எண்ணிக்கையில் மேலும் ஆயிரம் வகை மரங்கள் அதிகரித்துள்ளன. இந்தப் புராதன மர இனங்களில் பெரும்பாலானவை கம்சட்கா தீபகற்பத்தில் (சோவியத் தூரகிழக்கு) கண்டுபிடிக்கப்பட்டவை.

இம்மரஇனங்கள் 50,00,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தவை எனக்கருதப்படுகிறது. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட புராதன மர இனங்களின் ஒரு பகுதி சோவியத் யூனியனின் மிகப் பழையதான லெனின் கிராட் தாவரவியல் மியூஷியத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இத்தகவலின் மூலம் எப்போதோ ஒருநாள் நிரந்தரமான அழிவை நோக்கிக் கொண்டிருக்கும் தாவர வகைகள் மனிதனைவிட இவ்வுலகில் நீண்டகாலம் வாழ்வன என்பது தெளிவாகின்றது. கீழ் வரும் தகவல் மனித வாழ்வின் நீடிப்பைப்பற்றிய ஒரு தெளிவான கருத்தை நமக்குத் தரக்கூடியதாக இருக்கின்றது.

பெண்களில் அதிக வயது வாழ்ந்த அயர்லாந்தைச் சேர்ந்த காஜிரின் ப்ளஸ்கெட் என்பவர் 1820 ஆம் வருடம் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி பிறந்து 111 வருடம் 10 மாதம் 28 நாட்கள் வாழ்ந்து 1932 ஆம் வருடம் அக்டோபர் 14 ஆம் திகதி இறந்தார்.

தற்காலத்தைப் பொறுத்தளவில் பெண்களில் அதிககாலம் வாழ்ந்தவரின் காலம் நூற்றுக்குச் சற்றுக் கூடுதலாகவே இருந்திருக்கின்றதென்பதை இது அறிவிக்கின்றது. நவீன அறிஞர்களின் கருத்துப்படி மனிதனுடைய வாழ்க்கையானது 120 வயதைத் தாண்டுவது கடினம் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே மனிதன் வெறுமனே இக்குறுகிய காலத்துக்கு மாத்திரம் படைக்கப்பட்டவனாக இருக்க முடியாதென்பதும், அவனுக்கு அழிவேயில்லை என்பதும், தொடர்ந்து அவன் பலகட்டங்களில் வாழவேண்டியவனாக இருக்கின்றான் என்பதும் தெளிவாகின்றது.

## மறுமையில் நிகழ்வது என்ன ?

மறுமை சம்பந்தமான வாழ்க்கையில் முக்கியமாகப் பின்வரும் விடயங்கள் நடைபெறுகின்றன.

1. ஒருநாள் அல்லாஹ், முழு உலகையும் படைப்பினங்களையும் அழித்ததற்குப் பிறகு அனைவருக்கும் மறுவாழ்வு அளிப்பான். அனைவரும்

அல்லாஹ் முன் ஆஜராவார்கள். இதற்கு மஹ்ஷர் எனப் பெயர்.

2. மனிதர்கள் இவ்வுலகில் புரிந்த செயல்களனைத்தையும் தாங்கிய செயலேடு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.

3. நற்செயல்கள், தீச்செயல்களை விட எடை கூடியதாகவிருப்பின் அவர்களை மன்னித்துவிடுவான் அல்லாஹ். தீச்செயல்கள், நற்செயல்களைவிட எடை கூடியனவாக இருப்பின் தண்டனை அளிப்பான்.

4. யார் மன்னிப்புப் பெறுகின்றார்களோ அவர்கள் சுவர்க்கம் புகுவர். யாருக்குத் தண்டனை விதியாகின்றதோ அவர்கள் நரகம் புகுவர்.

மறுமையைப்பற்றிக் குறிப்பதற்கு அல்-குர்ஆன் எடுத்தாண்டுள்ள சொற்களைக் கவனிக்கும்போது இவ்வுண்மைகள் புலப்படும்.

''மறுமையின் வேதனைக்குப் பயப்படக் கூடியவருக்கு நிச்சயமாக இதில் நல்லதோர் அத்தாட்சி இருக்கிறது. மனிதர்கள் அனைவரும் ஒன்று சேர்க்கப்படும் நாளாகும் அது. அன்றி, அவர்கள் யாவரும் (இறைவனின் சந்நிதியில்) கொண்டு வரப்படக் கூடிய நாளாகும்.

சொற்ப நாட்களுக்கேயன்றி நாம் அதனைப் பிற்படுத்தி வைக்கவில்லை.

அது வரும் நாளில் அவனுடைய அனுமதியின்றி எந்த ஒரு மனிதனும் (அவனுடன்) பேச முடியாது. அவர்களில் துர்ப்பாக்கியவான்களும் உள்ளனர். நற்பாக்கியவான்களும் உள்ளனர். துர்ப்பாக்கியவான்கள், நரகத்தில் (வீழ்த்தப்படுவார்கள். வேதனை தாங்க முடியாது) அதில் அவர்கள் பெரும் கூச்சலிட்டுக் கதறுவார்கள்.

உம் இறைவன் நாடினாலன்றி வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும் காலம் வரையில் அதில் அவர்கள் தங்கி விடுவார்கள். நிச்சயமாக உமது இறைவன், தான் விரும்பியவற்றை (த் தடையின்றிச்) செய்து முடிப்போன்.

நற்பாக்கியவான்கள் சுவனபதியில் (நுழைந்துவிடுவார்கள்) உமதிறைவன் நாடினாலன்றி வானங்களும் பூமியும் நிலைத்திருக்கும் காலம்வரையில் அதில்தான் அவர்கள் தங்கிவிடுவார்கள். (அது) முடிவுறாத (என்றும் நிலையான) ஓர் அருட்கொடையாகும்'' [81]

## மறுமை தேவை தானா ?

இனி. மறுமை வாழ்வொன்று ஏன் அவசியப்படுகின்றது என்பதற்கான அல்-குர்ஆனின் கூற்றைக் கவனிப்போம்.

''ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே தீரும். எனினும் உங்கள் (செயலுக்குரிய) கூலிகளை நீங்கள் பூரணமாக அடைவதெல்லாம், மறுமை நாளில் தான். ஆகவே (அந்நாளில்) எவர் (நரக) நெருப்பிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுச் சுவர்க்கத்தில் புகுத்தப் பெறுகிறாரோ அவர் நிச்சயமாகப் (பெரும்) பாக்கியத்தை அடைந்துவிட்டார். இவ்வுலக வாழ்க்கை, மயக்கக் கூடிய (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை'' 32

''மறுமையின் வாழ்க்கை தான் மிக்க மேலானதும் நிலையானதுமாகும்'' 33

''(மரித்த) அவர்கள் (சமாதிகளிலிருந்து) வெளிப்பட்டு (த் தங்கள் இறைவனின்) முன் வந்து நிற்கும் நாளில், அவர்களுடைய யாதொரு விஷயமும் அல்லாஹ்வுக்கு மறைந்ததாக இல்லை. ''ஆட்சி இன்று யாருக்கு ?'' (என்று கேட்கப்பட்டு அதற்கு உரிய விடையாக ''யாவரையும்'') அடக்கி ஆளும் ஒருவனாகிய அல்லாஹ்வுக்குடையதே'' (என்று கூறப்படும்)

இன்றைய தினம் ஒவ்வோர் ஆத்மாவுக்கும், அது தேடிக் கொண்ட வினைகளுக்குத் தக்க கூலி கொடுக்கப்படும். இன்றைய தினம் யாதொரு அநியாயமும் நடைபெறாது. அல்லாஹ் (கேள்வி) கணக்குக் கேட் (டுத்தீர்ப்) பதில் மிக்க தீவிரமானவன். (என்றும் கூறப்படும்) 34

இம்மை வாழ்க்கையில் பரிபூரணமான முறையில் இறைநீதி நிலை நாட்டப்பட முடியாது. இதற்குத் தகுந்த இடம் மறுமை தான். 'ஒரு கொலைக்கு ஒரு மரணதண்டனை' இவ்வுலகில் நிறைவேற்றலாம். ஆனால் பத்துப்பேரைக் கொலை செய்தவனுக்கு இவ்வுலகில் அளிக்கக் கூடிய அதிகபட்ச தண்டனையும் அதுதான். இது இறை நீதியா? இருக்கவே முடியாது. இதே போன்று ஒருவனது நற்செயல்களுக்குப் பரிசளிப்பதாகவிருந்தாலும் மரணமில்லாத ஒரு வாழ்க்கையில் அளிக்கப்பட்டால் அது அவனுக்கு நிரந்தர பிரயோசனத்தைக் கொடுக்குமல்லவா? இன்னும் சிறிது விரிவாக இதனை விளக்குவதாகவிருப்பின் ஒருவன் பரிசு பெறத் தகுதியுடையவனா? அல்லது தண்டனைக்கு அருகதையுடையவனா என்பதைக் கூட அறிவதற்கு அவன் உலகில் வாழ்ந்து

முடிய வேண்டியிருக்கின்றது. வாழ்நாள் பூராவும் நல்வணக்கங்களில் ஈடுபட்டிருந்து திடீரென நிராகரிப்பவனுக மாறி இறந்து போகக் கூடியோனும், நிராகரிப்பவனுக இருந்து தனது அந்திய காலத்தில் முஃமினுக இறப்பவனும் உண்டு.

''நிச்சயமாக உங்கள் ஒவ்வொருவரதும் படைப்பானது தாயினுடைய வயிற்றில் நாற்பது நாட்கள் இந்திரியமாகவும், பின்பு நாற்பது நாட்கள் இரத்தக் கட்டியாகவும், பின்பு நாற்பது நாட்கள் சதைப் பிண்டமாகவும் இருக்கும். பின்பு அதனிடம் ஒரு மலக்கு அனுப்பப்பட்டு உயிர் ஊதச் செய்யப்படும். அவர் நான்கு விடயங்கள் பற்றித் தீர்மானித்து, அம்மனிதனது உணவு, உயிர் வாழும் காலம், புரியப்போகும் காரியங்கள், அவன் மூதேவியா, சீதேவியா என்பன பற்றி எழுதுவார். அல்லாஹ்வின்மீது (அவனன்றி தெய்வம் வேறில்லை) ஆணையாக, உங்களில் ஒருவன் அவனுக்கும் சுவர்க்கத்துக்குமிடையே சில முழங்களே மீதமிருக்கக்கூடிய வகையில் நல்லமல்கள் செய்வான். திடீரென அவனது ஆரம்ப எழுத்து முந்திக்கொள்ளும். அப்போது அவன் நரகவாசிக்குரிய காரியமொன்றைச் செய்வதன் மூலம் நரகில் நுழைவான். இதேபோன்று உங்களில் ஒருவன், அவனுக்கும் நரகத்துக்குமிடையே சில முழங்கள்தான் இடைவெளி இருக்கக்கூடியளவுக்குத் தீமையான செயல்களில் ஈடுபட்டிருப்பான். திடீரென அவனது செயலேடு முந்திக்கொள்ளும். அப்போது சுவர்க்கத்துக்குரியவர்கள் செய்யக்கூடிய நல்லமல்களைச் செய்து சுவர்க்கம் புகுவான்.'' 35

எனவே மனிதனது நற்செயல்களுக்குப் பரிசளிக்கவும், தீச்செயல்களுக்குத் தண்டனையளிக்கவும் அவனது கடைசிவேளைவரை பொறுத்திருக்கவேண்டும் என்பதும், அதன்பின் பரிசில் அல்லது தண்டனை வழங்குவதற்குரிய இடம் மறுமை வாழ்வு அன்றி வேறு இல்லை என்பதும் புலனுகின்றது. பரிசில் அளிக்கக்கூடிய இடம் சுவர்க்கமாகவும், தண்டனை வழங்கக்கூடிய இடம் நரகமாகவும் இருக்கின்றது. இதுபற்றி அல்-குர்ஆன் கருத்துத் தெரிவிக்கும்போது,

''(நபியே!) 'எவர்கள் (இவ்வேதத்தை) விசுவாசித்து' (இதில் கூறப்பெற்றுள்ள பிரகாரம்) நற் கருமங்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு, (சுவனபதியில்) நீரருவிகள் சதா ஓடிக்கொண்டேயிருக்கும் சோலைகள் நிச்சயமாக உண்டு' என்று நீர் நன்மாராயம் கூறுவீராக! அவற்றிலிருந்து (அவர்களுக்கு) ஒரு கனி புசிக்கக் கொடுக்கப்படும் போதெல்லாம், ''முன்னர் நமக்குக் கொடுக்கப்பட்டதும் இதுதானே'' என (ஆச்சரியப்பட்டு)க் கூறுவார்கள். (ஏனென்றால் பார்வைக்கு) ஒரேவிதமாகத் தோற்றக் கூடியவைகளே கொடுக்கப் பெறுவார்கள். (எனினும் அவை ருசி

யில் விதவிதமாக இருக்கும்.) தூய்மையான துணைவர்களும் அங்கு அவர்களுக்குண்டு. அன்றி, அவர்கள் அதில் என்றென்றும் தங்கி விடுவார்கள்.'' 36

''நிச்சயமாக (நரகத்திலிருக்கும்) கள்ளி மரந்தான், பாவிகளின் ஆகாரம். (அது) உருகிய செம்பைப்போல் (அவர்களுடைய) வயிறுகளில் கொதிக்கும். வெந்நீர் கொதிப்பதைப் போல் (அது கொதித்துப் பொங்கிவரும்.)

அவர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு நரகத்தின் மத்தியில் செல்லுங்கள்! அவர்களுடைய தலைக்கு மேல் கொதித் (துக் காய்ந்)த நீரை ஊற்றி நோவினை செய்யுங்கள்'' (என்று கூறப் படுவதுடன் அவர்களை நோக்கி, ஏளனமாக)

நிச்சயமாக நீங்கள் மிகக் கண்ணியமும் மரியாதையுமுடையவர் கள். ஆதலால் நீங்கள் (இவ்வேதனையைச் சிறிது) சுகித்துப் பாருங்கள். நிச்சயமாக இதுதான் நீங்கள் சந்தேகித்துக் கொண் டிருந்தது (என்று கூறப்படும்)'' 37

இதுவரை மறைவான விடயங்கள் பற்றிய அல்-குர்ஆன் போதனை களைக் கவனித்தோம். நமக்கு ஓர் உயிர் இருக்கின்றது என்பதை நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக்கொள்கின்றோம். காற்றையும் நெருப்பையும் இன்னொரு பொருளுடன் அவை தொடர்புபடும்போது தான் நாம் உணர்கின்றோம். நமது தாய், தந்தையரைக்கூட நம் பிக்கையின் பேரிலேயே நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எனவே அல்-குர்ஆன் கூறும் மறைவான விடயங்களில் நமது நம்பிக்கை பலம் பெறும்போதுதான் நமது ஈமான் சுவைக்கும்.

---

**அடிக்குறிப்புக்கள்**

1. அல்-குர்ஆன் 23 : 23, 31, 32, 45, 46, 50.
2. அல்-குர்ஆன் 42 : 13
3. அல்-குர்ஆன் 2 : 136
4. ஸாயிக், இஸ்லாம் ஓர் அறிமுகம், பக்கம் 77
5. அல்-குர்ஆன் 2 : 2 — 5
6. அல்-குர்ஆன் 6 : 59
7. அல்-குர்ஆன் 31 : 34
8. பழீலதுஷ்ஷைகு அப்துல் பத்தாஹ் அஷ்மாவீ, நவீன விஞ்ஞானம் எனும் பெயரில் மறைவானவற்றின் திறவுகோல்கள் சம்பந்தமாகத் தர்க்கிப்போருக்கு, (அரபு) கருத்தரங்குக் கட்டுரைத் தொகுதி, ஜாமிஆ இஸ்லாமி, மதீனா, 1980.

9. அல்-குர்ஆன் 7 : 187

10. அல்-குர்ஆன் 11 : 103

11. அல்-குர்ஆன் 16 : 77

12. அல்-குர்ஆன் 6 : 99

13. அல்-குர்ஆன் 16 : 65

14. அல்-குர்ஆன் 22 : 63

15. அல்-குர்ஆன் 39 : 21

16. டாக்டர் அஹ்மத் ஸீஸாஹ், ஹழாரதுல் அறப் வ மராஹிலு ததவ்வுரிஹா அபரல் உஸீர், (அரபு) தகவல் அமைச்சு, இராக் குடியரசு, 1979, பக்கம் 16.

17. அல்-குர்ஆன் 42 : 49

18. அல்-குர்ஆன் 42 : 50

19. அல்-குர்ஆன் 13 : 8

20. அல்-குர்ஆன் 41 : 47

21. அல்-குர்ஆன் 56 : 63 — 65, 58, 59, 71, 72

22. அல்-குர்ஆன் 18 ; 23 - 24

23. அல்-குர்ஆன் 5 : 90

24. அறிவிப்பாளர் : ஆயிஷா (ரழி) அவர்கள், பாபு இத்பானுல் குஹ்ஹறான், புகாரி, முஸ்லிம்

25. அறி : ஸபிய்யா (ரழி) அவர்கள், நூல் : முஸ்லிம்

26. அல்-குர்ஆன் 63 : 10, 11

27. அல்-குர்ஆன் 3 : 185

28. அல்-குர்ஆன் 4 : 78

29. அல்-குர்ஆன் 56 : 60

30. அல்-குர்ஆன் 75 : 26 - 29

31. அல்-குர்ஆன் 11 : 103 - 108

32. அல்-குர்ஆன் 3 : 185

33. அல்-குர்ஆன் 87 : 17

34. அல்-குர்ஆன் 40 : 16, 17

35. அறி : அப்துல்லாஹ் இப்னு மஸ் ஊத் (ரழி), நூல் : புகாரி, முஸ்லிம்

36. அல்-குர்ஆன் 2 : 25

37. அல்-குர்ஆன் 44 : 43 - 50

# 3

# அல்-குர்ஆன் பார்வையில்

## பெருமானார் (ஸல்) அவர்களும் அன்னாரது ஸுன்னாவும்

முழு மனித சமுதாயத்தின் 'ரப்பான, அல்லாஹ், மனித சமுதாயத்தை நேர்வழியில் நெறிப்படுத்திச் செல்வதற்காக அல்-குர்ஆனை பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாக அருளி முழு மனித சமுதாயத்தினருக்கும் அவர்களை இறைதூதராக அனுப்பி வைத்தான். இறை தூதர்கள் வரிசையில் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் கடைசியாக வந்தவர்கள். இவர்களை இவ்வுலகின்கண் தோற்றச் செய்வதன் மூலம் நபித்துவ வரலாற்றை இறைவன் பூர்த்தி செய்வதுடன், இவர் மூலமாக முழுமனித சமுதாயத்தினருக்கும் விடுக்கப்பட்ட தூதான அல்-குர்ஆனையே கடைசி வேதமாகவும் ஆக்கிவிடுகின்றான். பெருமானார் (ஸல்) அவர்களை அல்-குர் ஆன் 'காப்பதுன் லின்னாஸ்' 1 (முழுமனித சமுதாயத்துக்குமுரியவர்) என அறிமுகப்படுத்துவதைக் கொண்டு மனித சமுதாயத்தின் இம்மை, மறுமைப் பயன்கள் அனைத்தும், பெருமானாரது வழிகாட்டுதல்கள், நடைமுறைகள் முதலியனவற்றை வைத்துத் தீர்மானிக்க வேண்டியனவாக இருக்கின்றன. இவ்வகையில் பெருமானார் (ஸல்) அவர்களும் அவர்களது ஸுன்னாவும் முக்கியத்துவம் பெறுவதுடன் மனித சமுதாயத்தின் இன்றியமையாத் தேவைகளாகவும் ஆகிவிடுகின்றன. மனித சமுதாயத்தை சீரிய பாதையில் நேரிய முறையில் நெறிப்படுத்தும் தகைமையும், திறனும்கூடப் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களுக்கே உண்டென்பதையும் அல்-குர்ஆன் ஊர்ஜிதம் செய்கின்றது.

நோய் வாய்ப்பட்டு அவதியுறும் மனிதனுக்கு தகுந்த ஒரு வைத்தியனின் தேவையும், அவன் சிபாரிசு செய்யும் மருந்துகளின் தேவையும் எவ்வாறு அத்தியாவசியமானவைகளாக இருக்கின்றனவோ, இதேபோன்று பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களும் அவரது

ஸுன்னாவும் முழுமனித சமுதாயத்தினராலும் உணரப்படவேண்டிய இன்றியமையா அம்சங்களாக இருக்கின்றன. "முந்திய நபிமார்கள் மூலமாக எந்த இஸ்லாமியப் போதனை அளிக்கப்பட்டிருந்ததோ அது முழுமையானதாக இருக்கவில்லை. ஒவ்வொரு தூதருக்குப்பின் மற்றொரு தூதர் வந்து அதன் கட்டளைகளிலும் சட்டங்களிலும் உபதேசங்களிலும் மாறுதல்களும், கூட்டுதல்களும் செய்துகொண்டே இருந்தார்கள். சீர்திருத்தம், முன்னேற்றம் ஆகியன தொடர்ந்து இருந்து வந்தன. இதனால் அந்த நபிமார்களின் போதனைகளை, அவர்களுடைய காலம் கடந்த பின்னர் அல்லாஹ் பாதுகாத்தும் வைக்கவில்லை. ஏனெனில் ஒவ்வொரு முழுமையான போதனைக்குப் பின்னர் முந்திய குறையுள்ள போதனையின் அவசியம் இருக்கவில்லை. இறுதியாக ஹலரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலமாக எல்லா வகையிலும் நிறைவு பெற்ற இஸ்லாமிய போதனை அளிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் முந்திய இறைதூதர்கள் அனைவரின் மார்க்க சட்ட திட்டங்களும் தாமாகவே இரத்தாகி விட்டன. இக்காரணங்களால் ஹஜ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களை மட்டும் பின்பற்ற வேண்டியது அகில உலக மக்களுக்கும் இன்றியமையாததாகி விட்டது.[2] முஹம்மது நபி (ஸல்) அவர்களையும் அவர்களது வழிமுறைகளையும் பின்பற்றாது இறைவனையடையலாம் என்று எவராலும் வாதாட முடியாது. ஏனெனில் இறைவனோடு மனிதனை இணைக்கும் பாலமாக இவர்களே விளங்குகின்றார்கள் என்பது அல்-குர்ஆனின் கூற்று. கேத்திர கணித (Geometry) முறைப்படி கூட, ஒரு புள்ளியோடு இன்னொரு புள்ளியை இணைப்பதற்கு ஒரேயொரு நேர்கோடுதான் வரையலாம். எனவே அல்லாஹ்வோடு அவனது அடியானைத் தொடர்புபடுத்தக் கூடியவரும் ஒருவராகவன்றி இருவராகவோ, பலராகவோ இருக்க முடியாது. பெருமானாருக்கு வழிப்படுவது அல்லாஹ்வுக்கு வழிப்படுதலாகும் எனும் கருத்தை அல்-குர்ஆன் பலவிடங்களில் மனித சமுதாயத்தின் முன் சமர்ப்பிக்கின்றது. பின்வரும் வசனங்களை ஒருதரம் உன்னிப்பாகக் கவனியுங்கள் :

> "எவன் (அல்லாஹ்வுடைய) தூதருக்கு (முற்றிலும்) வழிப்ப(ட்)டு (நடக்)கின்றானோ, அவன் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே வழிப்பட்டான்."[3]

> "(நபியே! மனிதர்களை நோக்கி,) நீர் கூறும்: 'நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பாவங்களையும் உங்களுக்காக அவன் மன்னித்து விடுவான். அல்லாஹ் மன்னிப்போனும் மிகவும் இரக்கமுடையோனுமாக இருக்கின்றான்."[4]

## பெருமானாரை மறுப்பது அறியாமை :

பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழிப்படுவது, அல்லாஹ்வுக்கு வழிப்படுவதுதான் என அல்-குர்ஆன் கூறும் அதே வேளையில் இறை திருப்தி கூட இதைக் கொண்டுதான் கிடைக்கும் என்பதாக மேலே நாம் அவதானித்த வசனங்களில் தெளிவுபடுத்தப் பட்டிருக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மாற்றமாக நடப்பது அறியாமையாகும் என்ற கருத்தும் அல்-குர்ஆனில் பல விடங்களில் ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. அவ்வாறான சில வசனங்களை இனிக் கவனிப்போம் :

"அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் யாதொரு விஷயத்தைப் பற்றிக் கட்டளையிட்ட பின்னர் அவ்விஷயத்தில் (அதற்கு மாறாக வேறு) அபிப்பிராயங்கொள்வதற்கு, விசுவாசியான எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமையில்லை. (அதில்) அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் எவரேனும் மாறு செய்தால், நிச்சயமாக அவர்கள் பகிரங்கமான வழி கேட்டிலேயே இருக்கின்றார்கள்."[5]

"உம் இறைவன் மீது சத்தியமாக, அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில், உம்மை நீதிபதியாக அங்கீகரித்து நீர் செய்யும் தீர்ப்பைத் தங்கள் மனத்தில் எத்தகைய அதிருப்தியுமின்றி அங்கீகரித்து முற்றிலும் வழிப்படாத வரையில், அவர்கள் உண்மை விசுவாசிகளாக மாட்டார்கள்."[6]

"எவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் மெய்யாகவே எதிர்க்கின்றார்களோ, அவர்களே இழிவுக்குள்ளாவார்கள்."[7]

## பொறுப்புக்களை நிறைவேற்றியவர் :

இவ்வகையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பெருமானார் (ஸல்) அவர்கள் இன்னொரு வகையில் பிரதான இடம் வகிக்கின்றார். அல்லாஹ்வினால் சில பொறுப்புகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டன. அவையனைத்தையும் கண்ணும் கருத்துமாக நிறைவேற்றி அதன் பிரதிபலனைத் தம் வெளிக் கண்களாலேயே பார்த்து அதற்குச் சாட்சியாக அல்லாஹ்வையே ஆக்கி வைத்துவிட்டுத்தான் இவ்வுலகத்தை நீத்திருக்கின்றார். மனித வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சம்பவமாக இன்றும் அறிஞர்களால் இது நினைவுகூரப் படுகின்றது. அவர்மீது சாட்டப்பட்ட பொறுப்புக்கள் பற்றி அல்-குர்ஆன் இவ்வாறு இயம்புகின்றது :

"(நம்முடைய) தூதரே! உம் இறைவனிடமிருந்து உமக்கு அருளப்பெற்றதை (யாதொரு குறையுமின்றி அவர்களுக்கு) அறிவித்து விடும். நீர் (அவ்வாறு) செய்யாவிடில், அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராக மாட்டீர். (இதில் எவருக்கும் அஞ்சாதீர்!) மனிதர் (களின் தீங்கு) களிலிருந்து, அல்லாஹ் உம்மை (இரட்சித்து)க் காப்பாற்றிக் கொள்வான்." 8

"இந்தக் குர்ஆனை (நபியே!) நாம் உமக்கு அருளினோம்; மனிதர்களுக்காக (உம்மீது) அருளப்பட்ட இதை, நீர் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்பியும். (இதன் மூலம்) அவர்கள் கவனித்தறிந்து கொள்வார்கள். (நபியே!) நீர் (மனிதர்களை) நளினமாகவும், அழகான நல்லுபதேசத்தைக் கொண்டுமே உம் இறைவன் வழியின்பால் அழைப்பீராக! அன்றி அவர்களுடன் (தர்க்கிக்க நேரிட்டால்) நீர் (கண்ணியமான) அழகான முறையில் தர்க்கம் செய்வீராக!" 9

அல்லாஹ்வினால் தன்மீது சுமத்தப்பட்ட இப்பொறுப்புகளை பெருமானார் (ஸல்) அவர்கள் மனித சமுதாயம் வியந்து போற்றக் கூடிய வகையில் மிகவும் குறுகியவொரு காலகட்டத்தில் நிறைவான முறையில் பூர்த்திசெய்து வைத்தார்கள். ஏனைய இறைதூதர்களின் சாதனைகளிலிருந்து இது கணிசமான அளவு வேறுபடுகின்றது. "ஒரு ஞானியாகவோ, அமரராகவோ இல்லாத நிலையில், தமது சாதனைகளையெல்லாம் அவர் சாதித்த உண்மைதான் சமய வரலாற்றில் முஹம்மதுக்குத் தனி இடத்தை அளித்திருக்கின்றது." 10 ('ஆர். வீ. எஸ். பொட்லி — தூதன்' லண்டன் 1946 பக்கம் 338) "தத்துவ மேதை, நாவலர், தீர்க்கதரிசி, சட்டத் தயாரிப்பாளர், போர்வீரர், வெற்றியாளர், தருக்கரீதியான கோட்பாட்டை நிலைநாட்டியவர், உருவங்களற்ற ஒரு மதத்தைத் தோற்றுவித்தவர், இருபது பிரதேச சாம்ராஜ்யங்களையும், ஒரே ஆத்மீக சாம்ராஜ்யத்தையும் ஸ்தாபித்தவர்; இவர் தான் முஹம்மத். மனிதனின் பெருமையை அளவிடக் கூடிய எந்தத் தரத்திலிருந்து பார்ப்பினும் இவரை விடப் பெரிய வேறொருவர் இருக்கின்றாரா? என்று நாம் கேட்க முடியும்" 11 (லாமாட்டின் 'ஹிஸ்டரி டீலா துருக்கி' பாரிஸ் 1854 வால்யூம் II பக்கம் 276)

அல்-குர்ஆன் எவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்களை மனித சமுதாயத்துக்கு அறிமுகப்படுத்தி நிற்கிறது என்பதை மேலோட்டமாக அவதானித்த நாம், இனி அன்னாரது ஸுன்னாவின்பால் கவனத்தைத் திருப்புவோம்.

## ஸுன்னு என்றால் என்ன ?

அறபு மொழியில் 'ஸுன்னு' என்பது பாதை, வழிமுறை எனப் பொருள்படும். அது நல்ல பாதையாகவும் அல்லது நல்ல வழிமுறையாகவும் தீய பாதையாகவும் அல்லது தீய வழிமுறையாகவும் இருக்கலாம். இதற்கு ஆதாரமாகப் பின்வரும் ஹதீஸ் அமைந்திருக்கின்றது.

''எவராவது ஒரு நல்ல வழிமுறையைத் தொடங்கி வைத்தால் அதற்கான கூலியும், இறுதி நாள்வரை யாரெல்லாம் அதைச் செயற்படுத்துகின்றார்களோ அவர்களுக்குக் கிடைக்கப்பெறும் கூலி போன்றதும் (தொடக்கி வைத்தவருக்கு) கிடைக்கும்; இதே போன்று எவராவது தீய வழியொன்றை ஆரம்பித்து வைத்தால் அதற்குரிய குற்றமும் இறுதிநாள் வரை இதைச் செயற்படுத்துவோருக்குக் கிடைப்பது போன்ற தீமையும் இவருக்கும் கிடைக்கும்.'' 12

''இஸ்லாமிய சட்ட மூலாதாரங்கள் பற்றி ஆய்வு நடாத்திய முஜ்தஹிதீன்கள் மத்தியில் 'ஸுன்னு' என்பது பெருமானாரின் சொல் செயல், அங்கீகாரங்களைக் குறிக்கும் எனும் கருத்தும், சிலவேளைகளில் முக்கிய ஸஹாபாப் பெருமக்களின் வழிமுறைகளைக் குறிப்பதாகவும் கருத்துக்கொள்ளப்படுகின்றது. பொதுவாக மார்க்க அறிஞர்களிடம் இச் சொல்லானது, மார்க்கத்தில் கட்டாயப்படுத்தப்படாத, செய்பவனுக்கு நன்மையையும், விட்டவனுக்கு தண்டனை கிடைக்கப் பெறாததுமான வழிமுறைகள் எனும் கருத்துக் கொள்ளப்படுகின்றது. பெரும்பாலான உலமாக்களிடம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிமுறைகள்தான் ஸுன்னுவென்பதும், இவற்றிற்கு மாற்றமானவை 'பித்அத்' எனவும் கொள்ளப்படுகின்றது.'' 13

## ஸுன்னுவும் ஹிக்மத்தும்

பெருமானார் (ஸல்) அவர்களின் ஸுன்னு பற்றி அல்-குர் ஆன் அறிமுகப்படுத்தும் போது, அவற்றை 'ஹிக்மத்'-ஞானம் எனும் கருத்தில் குறித்து நிற்கின்றது. ஸுன்னு ஹிக்மத் எனும் பெயரில் குர் ஆனுக்கு அடுத்தபடியாக வைத்து மதிப்பிடப்பட்டிருப்பதைப் பின் வரும் வசனங்கள் மூலமாக அறியலாம்.

''எங்கள் இறைவனே! (என் சந்ததிகளாகிய) அவர்களுக்கு, உன்னுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, வேதத்தையும் ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கக் கூடிய ஒரு தூதரை, அவர்களிலிருந்தே அவர்

களிடையே எழுந்தருளச் செய்வாயாக! நிச்சயமாக நீயே, மிக்க வல்லோனும் நுண்ணறிவுடையோனுமாக இருக்கின்றாய்'' (என்றும் பிரார்த்தித்தனர்.)[14]

''அல்லாஹ் விசுவாசிகளின் மீது மெய்யாகவே அருள்புரிந்திருக்கின்றான். அவர்களுக்காக ஒரு தூதரை (அதுவும்) அவர்களிலிருந்தே எழுந்தருளச்செய்தான். அவர், அவர்களுக்கு அவனுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து, அவர்களைப் (பாவத்திலிருந்து) பரிசுத்தமாக்கியும் வைக்கின்றார். அன்றி, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். நிச்சயமாக, அவர்கள்இதற்குமுன் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருந்தனர்''[15]

''அல்லாஹ் இவ்வேதத்தையும் ஞானத்தையும் உம்மீது அருட்செய்து நீர் அறியாதிருந்தவற்றையும், உமக்குக் கற்பித்திருக்கின்றான். உம்மீது அல்லாஹ்வின் அருள் மகத்தானதாகவே இருக்கின்றது.[16]''

மேலே நாம் அவதானித்த வசனங்களில் 'அல்-கிதாப்', 'அல்-ஹிக்மத்' எனும் இரு சொற்களும் அடுத்தடுத்து பிரயோகிக்கப் பட்டிருக்கின்றன. இமாம் ஷாபி அவர்கள், 'அல்-கிதாப்' என்பது அல்-குர்ஆனையும், 'அல்-ஹிக்மத்' என்பது பெருமானார் (ஸல்) அவர்களது ஸுன்னாவையும் குறிக்கின்றது எனும் தனது கருத்தை வெளியிடுகின்றார்.

## ஸுன்னாவின் பிரிவுகள்

ஸுன்னாவின் பிரிவுகள் பற்றி இமாம் ஷாபி அவர்கள் கூறியதாக இமாம் பைஹகி அவர்கள் பின்வரும் மூன்று பிரிவுகளையும் அறிவிக்கின்றார்கள்.

(i) அல்-குர் ஆன் மூலம் கட்டளையிடப்பட்ட சிலவற்றைப் பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்ததன் காரணமாக ஸுன்னாவாக ஆக்கப்பட்டவை. இதற்கு உதாரணமாக 'தஹஜ்ஜுத் தொழுகை' யைக் குறிப்பிடலாம். தஹஜ்ஜுத் தொழுகை பற்றி அல்-குர் ஆன் குறிப்பிடும்போது ''போர்வையைப் போர்த்திக் கொண்டிருப்பவரே! (நபியே) இரவில் நீர் (தொழுகைக்காக எழுந்து) நில்லும். (முழு இரவிலுமல்ல; அதிலொரு) சொற்பபாகம். (அதாவது) அதில்பாதி (நேரம்) அதில் நீர் சிறிது 'குறைத்துக் கொள்ளலாம்' அல்லது அதில் சிறிது கூட்டியுங்கொள்ளலாம்.''[17] இத்தொழுகை பெருமானாரைப்

பொறுத்தவரையில் ஒரு கட்டாயக் கட்டளையாக இருந்தாலும் நமக்குஸுன்னத்தானதாக ஆக்கப்பட்டது.

(ii) அல்-குர் ஆன் வசனங்களின் மூலம் விதிக்கப்பட்ட கட்டளைகளைப் பொறுத்தவரையில் அக்கட்டளைகள் எவ்வாறு கடமையாக்கப்பட்டது? பொதுவாக அனைவருக்குமா? அல்லது விசேடமாக சிலருக்காகவா? அதைக்கொண்டு எவ்வாறு வணக்கம் செய்வது போன்ற விளக்கங்களை உள்ளடக்கியவை. இதற்கு உதாரணமாக கடமையான ஹஜ்ஜுக்கு மேலாகப் புரியக்கூடிய ஹஜ் வணக்கங்களைக் குறிப்பிடலாம்,

(iii) அல்-குர் ஆனின் நேரடியான கட்டளைகள் இல்லாத நிலையில் பெருமானார் (ஸல்) அவர்களைக் கொண்டு ஸுன்னத்தாக்கப்பட்டவைகள். இவ்வாறு செய்வதற்கான தகுதி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு உண்டென்பதை அல்-குர் ஆன் பலவிடங்களில் மிகவும் நயம்பட எடுத்தியம்புகின்றது. முக்கியமாகப் பின்வரும் அல்-குர்ஆன் வசனங்கள் இதற்கு ஆதாரங்களாக இருக்கின்றன.

"ஆகவே (நம்முடைய) தூதர்உங்களுக்கு கொடுத்ததை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக் கொள்ளுங்கள் அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்," 18

"எவன் (அல்லாஹ்வுடைய) தூதருக்கு (முற்றிலும்) வழிப(ட்)டு (நடக்) கின்றானோ அவன், நிச்சயமாக அல்லாஹ்வுக்கே வழிபட்டான். ஆகவே (நபியே! உம்மை) எவனும் புறக்கணித்தால், (அதற்காக நீர் கவலைப்பட வேண்டாம்.) அவர்களைக் கண்காணிப்பவராக, உம்மை நாம் அனுப்பவில்லை." 19

இமாம் பைஹகீ அவர்கள் அறிவிக்கக் கூடிய இன்னொரு சம்பவம் இதை இன்னும் சிறிது ஆழமாகத் தெளிவுபடுத்த உதவி செய்யும் என நினைக்கிறேன். உம்ரான் பின் ஹஸீன் (ரழி) என்பவர், பெருமானார் (ஸல்) அவர்களுக்கே சொந்தமான ஷபாஅத் எனப்படும் அடியார்களுக்காக அல்லாஹ்விடம் செய்யப்படும் மன்றாட்டம் பற்றி பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கும்போது, ஒருவர் இடையில் குறுக்கிட்டு அல்-குர் ஆனில் ஆதாரம் இல்லாதவொன்றை நீங்கள் எங்களுக்குக் கூறுகின்றீரே என்றனர். உடனே உம்ரானுக்கு கோபமேற்பட்டு அப்படியாயின் ஐவேளைத் தொழுகைகளில் ரக்அத்துக்கள் பற்றியும் ஸகாத்தின் வீதங்கள் பற்றியும் கூடக் குர் ஆனில் ஆதாரம் இல்லையே என்றார். இந்நிகழ்ச்சியும் கூடப் பெருமானார் (ஸல்)

அவர்களின் வழிமுறைகளையறிந்து செயற்படுவது முஸ்லிம்களது தலையாய கடமை என்பதை வலியுறுத்துவதாக இருக்கின்றது.

## ஸுன்னாவை இழிவுபடுத்துவதில் மேற்கத்தியரின் முயற்சி :

'ஸுன்னா' பற்றி ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட இச் சந்தேகம் இன்னும் கூடவிடுபட்டதாக இல்லை. காரிஜிகள், சியாக்கள் போன்ற அரசியல் கட்சியினரும், முஃதஸிலாக்கள் போன்ற பகுத்தறிவுவாதிகளும், சில சந்தர்ப்பங்களில் வியாபாரிகளும் கூடத் தத்தம் சுயநல நோக்கங்களுக்காக ஹதீஸ்களைப் புனைந்துரைத்து வந்துள்ளது என்னவோ உண்மைதான். இதை ஆதாரமாக வைத்து முழுஸுன்னாவையுமே புறக்கணிப்பது புத்தியுடைமையாகாது. பெருமானாரின் ஸுன்னாவைக் குறைவுபடுத்திக் காட்டவேண்டும் என்றே இஸ்லாத்தின் விரோதிகளினால் மேற்கொள்ளப்பட்ட, திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சதிமுயற்சி தான் இது என்பது தெளிவு. "1890-ல் இஸ்லாமிய ஆராய்ச்சி பற்றிய நூலை வெளியிட்ட 'கோல்ஸியர்' ஹதீஸ்களைக் கிண்டல் செய்யும் வகையில் விந்தையான கருத்துக்களை எழுதியிருக்கின்றார். இவருக்கு அடுத்த வருடத்திலே இன்னோர் அறிஞர் மற்றோர் ஆராய்ச்சியை மேற்கொண்டு பிக்ஹுக்கு ஆதாரமாக அமைந்திருக்கக் கூடிய ஹதீஸ்களில் ஒன்றுதானும் சரியான ஹதீஸல்ல எனும் கருத்தை வெளியிட்டார். பேராசிரியர் 'கிப்' இந்நூலை ஒரு மூலாதார நூல் என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு கீழைத்தேச அறிஞர்களும் அவர்களது சீடர்களும் முஸ்லிம்களுக்கு மத்தியில் பல சந்தேகங்களை எழுப்பினார்கள். அவற்றின் விளைவுகளை இன்றுநாம் கண்கூடாகக் காண்கின்றோம். குர்ஆனை ஒப்புக் கொள்வோம்; ஹதீஸை ஒப்புக்கொள்ள மாட்டோம் என்ற குரல்கள் ஒலிப்பது இதனால்தான்." ௨௰

## புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்கள் :

அல்-குர்ஆன் வசனங்களில் பொருள் மயக்கம் ஏற்படும்போது ஸஹாபாப் பெருமக்கள் உரிய விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 'ஸுன்னா'வின் பக்கம் தமது கவனத்தைத் திருப்பினார்கள். உஸ்மான் (ரலி) அவர்களின் கொலையின்பின் அரசியற் குழப்பங்கள் இராச்சியத்தின் பல பகுதிகளிலும் தலைதூக்கியதன் காரணமாக தலைமைப் பீடப் போட்டிக்கு அனுசரணையாக அமையக்கூடிய வகையில் பலரும் பல ஹதீஸ்களைத் தத்தமக்குச் சாதகமான முறையில் புனைந்துரைத்தனர். கவாரிஜ்களின் அரசியற் பலத்தை குறைத்துக்காட்டும் நோக்கத்துடன் ஹலப் பின் அபீஸுப்ரு என்பவரால் கட்டிவிடப்பட்ட

ஹதீஸ்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். பெருமானாரின் ஹதீஸ்கள் சமுதாயத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடியன. எனவே அரசியல் லாபமடையும் நோக்கத்தோடு பல்வேறுபட்ட கட்சியினரும் ஹதீஸ்களைப் புனைந்துரைக்க முனைந்தனர்; ''இவ்வகையில் பிரபல்யம் வாய்ந்தோராக மதீனாவில் இப்னு அபீயஹ்யாவும், பக்தாதில் வாஹிதிய்யும், குராஸான்பகுதியில் மகாதில் பின்ஸுலைமானும், ஷாம்பகுதியில் முஹம்மத் பின் ஸயீதும் காணப்பட்டதாக இப்னு கல்லிகான் குறிப்பிடுகின்றார்.''[21] கூபாவில் வாழ்ந்துவந்த இப்னு அபில் அவ்ஜா என்பவர் மாத்திரம் நாலாயிரம் ஹதீஸ்களைப் புனைந்துரைத்ததை அவரே பின்பு ஒப்புக்கொண்டார். ஹி 153-ல் கூபாவின் தளபதி முஹம்மதிப்னு ஸுலைமான் என்பவரால் இவர் கொள்ளப்பட்டார். இவரைப்போன்று இப்னுஉக்காஷா, இப்னு தமீம், ஸஹ்ல் இப்னு ஸரீ, அல்மதுல் ஜுபியாரி போன்றோரும் ஏறக்குறைய நாலாயிரம் ஹதீஸ்களைப் புனைந்திருக்கின்றனர்.''[22] எனவே உண்மையான ஹதீஸ்களைப் பிரித்தெடுக்கும் பணியில் ஹி. 2—4 க்குமிடைப்பட்ட காலத்தில் முஹத்திஸின்களான ஸிஹாஹுஸ் ஸித்தா எனும் ஆறு கிரந்தங்களினதும் இமாம்கள் மேற்கொண்ட பணி மகத்தானது.

## வழிதவறியோர் :

குர்ஆனை ஏற்றுக்கொள்வோம்; ஸுன்னாவை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என விதண்டாவாதம் புரிவோர் உண்மையிலேயே 'வழி தவறியோராவர். ஏனெனில் அல்-குர்ஆன் வசனங்களுக்குத் தெளிவான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள பெருமானாரின் வழிமுறை நமக்கு அவசியத்திலும் அவசியம். உதாரணமாக இஸ்லாத்தில் இணைந்தவொருவனின் அடுத்த முக்கிய கடமையான தொழுகை பற்றி சட்ட விளக்கங்களை மாத்திரமே அல்-குர்ஆன் தருகிறது. செயல்முறை விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஸுன்னா நமக்கு அவசியப்படுகின்றது. தொழுகைகளின் எண்ணிக்கை, ரக்அத்துக்களின் எண்ணிக்கை பற்றிக்கூட திருக்குர்ஆன் தெளிவான விளக்கத்தைத் தரவில்லை. அல்-குர்ஆனில் சட்ட விளக்கங்களாக வந்திருக்கும் வசனங்களின் தொகை இருநூறைத் தாண்டவில்லை. இவையனைத்திற்கும் பெருமானார் (ஸல்) அவர்கள் தனது ஹதீஸ்கள் மூலமாக விரிவான விளக்கத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். ''நான் எவ்வாறு தொழுகின்றேனோ அவ்வாறே தொழுங்கள்.'' ''ஹஜ் வணக்கம் எவ்வாறு நிறைவேற்றப்படவேண்டும் என்பதுபற்றி நான் செய்வதை அவதானித்து அறிந்துகொள்ளுங்கள்'' போன்ற ஹதீஸ்கள் வணக்க வழிபாடுகளைப் பொறுத்தமட்டில் பெருமானாரது ஸுன்னாவின் அவசியத்தையுணர்ந்துகொள்ளப் போதுமானவை என நினைக்கின்றேன்,

## இஸ்லாமியத் தண்டனைகளில் ஸுன்னுவின் பங்கு

குற்றச் செயல்களுக்கான இஸ்லாத்தின் தண்டனைகளைப் பொறுத்தளவில் கூட 'ஸுன்னு' அதன் செல்வாக்கை நிலைநிறுத்தி நிற்பதையுணரலாம். உதாரணமாக விபசாரத்துக்குரிய தண்டனை பற்றி அல்-குர்ஆன் கூறும்போது,

> ''விபசாரம் செய்த பெண், விபசாரம் செய்த ஆண் இவர்களில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள். மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் அல்லாஹ் விதித்த இக் கட்டளையை நிறைவேற்றுவதில், அவ்விருவர்களுடைய விஷயத்தில் உங்களுக்கு இரக்கம் ஏற்படக்கூடாது. அவ்விருவர்களுக்கு (த் தண்டனையாக) வேதனை கொடுக்கும் சமயத்தில், விசுவாசிகளில் ஒரு குழுவினர் (அதற்குச்) சாட்சியாக அங்கு இருக்கவும்'' 23

விபசாரம் சம்பந்தமான குர் ஆனின் இத்தண்டனை மணமுடித்தவனுக்கும் மணமுடிக்காதவனுக்கும் பொதுவானதா எனும் விளக்கம் குறிப்பிடப்படவில்லை. இதற்கான விளக்கத்தை 'ஸுன்னு' தான் நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. ஸஹீஹ் முஸ்லிமில், அபூஇஸ்ஹாகுப் ஷைபானி என்பவர் அப்துல்லாபின் அபீ அவ்பாவிடம் விபசாரம் செய்த மணமுடித்தவனுக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் அளித்த தண்டனைபற்றி வினவியபோது, கல்லெறிந்து கொல்லப்பட்டதுண்டு என அவர் பதிலளித்தார். எனவே அல்-குர் ஆனின் மேலே குறிப்பிட்ட தண்டனை மணமுடிக்காதவனுக்குரியதேயன்றி மணமுடித்தவனுக்குரியதன்று என்பது தெளிவாகிறது.

இதே போன்று களவெடுத்தவனுக்கான தண்டனை பற்றி அல்-குர் ஆன் வருணிக்கும்போது,

> ''ஆணோ பெண்ணோ எவர் திருடினாலும், இ(த்தீ)ச் செயலுக்குத் தண்டனையாக- அவர்களின், கைகளைத் துண்டித்து விடுங்கள். (இஃது) அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட எடுத்துக்காட்டான தண்டனையாகும். அல்லாஹ் மிகைத்தோனும் ஞானமுடையோனுமாக இருக்கின்றான்.'' 24

பூமியில் விஷமம் செய்வோருக்கான தண்டனை பற்றி அல்-குர் ஆன் குறிப்பிடும்போது,

> ''அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் யுத்தம் தொடுத்தும், பூமியில் விஷமம் செய்து கொண்டும் திரிகின்றவர்



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

களுக்குரிய தண்டனை இதுதான்; (அவர்கள்) வெட்டப்பட வேண்டும். அல்லது தூக்கிலிடப்பட வேண்டும். அல்லது மாறுகை (கள், மாறு) கால்கள் துண்டிக்கப்பட வேண்டும். அல்லது (கைது செய்யப்படவேண்டும். அல்லது) தேஷப் பிரஷ்டம் செய்யப்பட வேண்டும். இஃது இம்மையில் அவர்களுக்கு இழிவு (தரும் தண்டனை) ஆகும். அன்றி, மறுமையிலோ மகத்தான வேதனையும் அவர்களுக்கு உண்டு. 25

இவ்விரண்டு வசனங்களும் குறிப்பிட்டு நிற்பனவற்றின் பால் எமது சிந்தனையைத் திருப்புவோமாயின் பல்வேறுபட்ட சட்ட விளக்கங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. களவெடுக்கப்பட்ட பொருளின் பெறுமதி எவ்வளவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்? தகப்பனின் பொருளைத் திருடிய மகனுக்கும் இத்தண்டனை செல்லுபடியாகுமா? வறுமை வயப்பட்டதனால் திருடியவனுக்கு இத் தண்டனையை நிறைவேற்றுவதில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் யாவை? போன்றன பற்றிப் பெருமானார் (ஸல்) அவர்களின் ஸுன்னாவின் மூலமே நாம் விளக்கம் பெற வேண்டியிருக்கின்றோம். திருடப்பட்ட பொருளின் பெறுமதி ஏறக்குறைய 10 திர்ஹம்களாக இருக்கவேண்டுமென இமாம் ஷாபிஈ கருத்துத் தெரிவிக்கின்றார். ஹனபி இமாமிடம் இப் பெறுமதி மூன்று திர்ஹம்களாக இருக்கின்றது. இவ்விடயத்தில் இரு இமாம்களும் வேறுபட்ட பெறுமதிகளை அங்கீகரிப்பது ஸுன்னாவின் ஆழமான பங்களிப்பை உணர்த்தப் போதுமானதாக இருக்கின்றது. இவைபோன்ற எண்ணற்ற சட்டப் பிரச்சினைகள் ஏற்படும்போது ஸுன்னாவின் அவசியம் இன்றியமையாததாகின்றது.

## 'ஸுன்னா' தெய்வீக வெளிப்பாடே

பெருமானார் (ஸல்)அவர்களின் ஸுன்னா, அல்-குர் ஆனில் இருந்து வேறுபட்டதாக இருந்தாலும் அது தெய்வீக வெளிப்பாடு தான் என்பதை அல்-குர் ஆனும் ஹதீஸும் ஊர்ஜிதம் செய்வதாக இருக்கின்றன.

(i) "அவர் தன் இஷ்டப்படி (எதனையும்) கூறுவதில்லை. இது அவருக்கு வஹீமூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறில்லை." 26

(ii) "அறிந்து கொள்ளுங்கள், நிச்சயமாக குர்ஆனும் அதைப் போன்றதும் அதனுடன் சேர்த்து நான் கொடுக்கப்பட்டுள்ளேன்" (அபூதாவூத், திர்மிதி)

(iii) அப்துல்லா இப்னு அம்ர் அறிவிக்கின்றூர்கள். "பெருமானுர் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்பவற்றையெல்லாம் பாடமிட்டுக் கொள்ளும் நோக்கத்துடன் அவற்றை எழுதி வைத்துக்கொண்டிருந்தேன். இதைக் கண்ட குறைஷிகள் எனது செய்கையைத் தடுத்ததுடன், சில நேரம் கோபத்தோடும், சிலவேளைகளில் திருப்தியுற்ற (அமைதியான) மனத்துடனும் கதைக்கும் ஒரு மனிதனின் வார்த்தைகளை நீர் எழுதுகின்றீரே எனக் கூறத் தலைப்பட்டனர். இவர்களது கருத்தைப் பெருமானுர் (ஸல்) அவர்களிடம் தெரிவித்தபோது "நீர் தொடர்ந்து எழுதி வைத்துக் கொள்வாயாக! (எழுதுவதை நிறுத்தாதீர்) என்னுடைய ஆத்மா எவன் கைவசம் இருக்கின்றதோ, அவன் மீது ஆணையாக என்னிலிருந்து வெளிப்படக் கூடியவை (அனைத்தும்) உண்மையானவையன்றி வேறில்லை எனக்கூறினூர்."

இதுவரை நாம் அவதானித்தவற்றிலிருந்து ஸுன்னுவின் முக்கியத்துவத்தையும் அதன் பக்குவமான பங்களிப்பையும் நன்கு விளங்கியிருப்பீர்கள்.

---

அடிக்குறிப்புக்கள் :

1. பார்க்க அல்-குர்ஆன் 5 : 19, 21 : 107, 6 : 90, 42 : 7, 81 : 27
2. மௌலானு மௌதூதி, ஸையித் அபுல் அஃலா இது தான் இஸ்லாம் ஜமாஅதே இஸ்லாமி, ஹிந்து, ஏப்ரல் 1970, பக்கம் 155.
3. அல்-குர்ஆன் 4 : 80
4. அல்-குர்ஆன் 3 : 31
5. அல்-குர்ஆன் 33 : 36
6. அல்-குர்ஆன் 4 : 65
7. அல்-குர்ஆன் 58 : 20
8. அல்-குர்ஆன் 5 : 67
9. அல்-குர்ஆன் 16 : 44, 125
10. ஸாயிக் இஸ்லாம் ஓர் அறிமுகம், (Islam an Introduction தமிழாக்கம்) இலங்கை இஸ்லாமிய கட்டளைகள் கழகம், ஜூலை 1973, பக்கம் 135
11. Ibid p: 149
12. அறி : ஜரீர்இப்னு அப்துல்லாஹ்; முஸ்லிம்

13. அமான் அலி முஹம்மத், மன்ஸிலதுஸ் ஸுன்னு - பீ - தஷ்ரீஇல் இஸ்லாமி, (அறபு) கட்டுரைத்தொகுதி ஜாமிஆ இஸ்லாமிய்யா, மதீனு, 1980, பக்கம் 28

14. அல்-குர்ஆன் 2 : 129

15. அல்-குர்ஆன் 3 : 164

16. அல்-குர்ஆன் 4 : 113

17. அல்-குர்ஆன் 73 : 1 - 4

18. அல்-குர்ஆன் 59 : 7

19. அல்-குர்ஆன் 4 : 80

20. மௌலவி இப்றுஹீம் ஏ. எல். எம், பெருமானுரின் ஸுன்னுவும் அதன் முக்கியத்துவமும் — 2, இஸ்லாமிய சிந்தனை, நளீமிய்யா வெளியீட்டுப் பணியகம், பேருவளை, 1980, பக்கம் 33

21. ஜுர்ஜி ஸைதான், தாரீகுத் தமத்துனில் இஸ்லாமி (இரண்டாம் பகுதி) பக்கம் 66

22. Ibid p. 66

23. அல்-குர்ஆன் 24 : 2

24. அல்-குர்ஆன் 5 : 38

25. அல்-குர்ஆன் 5 : 33

26. அல்-குர்ஆன் 53 : 3, 4

# 4

# இஸ்லாத்தின் கட்டளைகள் எளிதானவை

## அல்-குர்ஆன் வசனங்களை அடியொற்றிய ஓர் ஆய்வு

*"(விசுவாசிகளே!) நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் முயற்சிக்க வேண்டியவாறு முயற்சியுங்கள். அவனே உங்களைத் தெரிந்தெடுத் (து மேன்மையாக்கி வைத்) திருக்கிறான். இந்த மார்க்கத்தில் அல்லாஹ் உங்களுக்கு யாதொரு கஷ்டத்தையும் ஏற்படுத்தவில்லை. (இது) உங்கள் பிதாவாகிய இப்ராஹீமுடைய மார்க்கமாகும். அவர்தான் இதற்கு முன்னர் உங்களுக்கு முஸ்லிம்கள் எனப் பெயரிட்டவர். இ(வ்வேதத்)திலும் (அவ்வாறே உங்களுக்குப் பெயர் கூறப்பெற்றுள்ளது. இதற்கு நம்முடைய) இத்தூதரே உங்களுக்குச் சாட்சியாக இருக்கின்றார். நீங்கள், மற்ற மனிதர்களுக்குச் சாட்சியாக இருங்கள். தொழுகையைக் கடைப்பிடித்தொழுகுங்கள்; ஸகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வைப் பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அவன்தான் உங்களுடைய இரட்சகன். இரட்சகர்களில் எல்லாம் அவனே மிக்க நல்லவன்; உதவி செய்கிறவர்களிலும் அவனே மிக்க நல்லவன்."*

*(அல்-குர்ஆன் 22 : 78)*

இன்றைய உலக சனத்தொகையில் ஏறக்குறைய **100** கோடி முஸ்லிம்களின் வேத கிரந்தமாகவும், பொதுவாக முழு மனித சமுதாயத்தின் வாழ்க்கை வழிகாட்டியாகவும் விளங்கும் அல்-குர்ஆனில், பொதிந்து கிடக்கும் விலை மதிப்பற்ற கருத்துக் கருவூலங்களை வெளியுலகுக்குக் கொணர வேண்டும் எனும் எனது நீண்டநாள் அவாவின்



18700C.C

அடிப்படையில், அல்-குர்ஆன் மனித சமுதாயத்துக்கு அள்ளி வழங்கும் யதார்த்த பூர்வமான, சிந்தனை ரீதியான அறிவுக் கருவூலங்களை உலகத்தார் முன் எடுத்துக் காட்டுவதன் அவசியம் நன்கு உணரப் படக்கூடிய இக்கால கட்டத்தில், இக்கருத்தை அடிநாதமாகக் கொண்டு எழுதப்படுகின்ற இன்னொரு ஆய்வாக இக்கட்டுரை அமைவதையிட்டுப் பெருமிதம் அடைகின்றேன்.

## மனித குலம் ஒன்றே

இஸ்லாத்தின் கட்டளைகள் அனைத்தும் எளிதானவை. எல்லாக் காலகட்டங்களிலும் எவ்விடத்திலும் எவராலும் குறைவின்றி நிறைவேற்றக்கூடியன. சந்தர்ப்ப, சூழ்நிலைகளுக்கு நெகிழ்ந்து கொடுக்கக் கூடியன. பலவந்தத்துக்கும் நிர்ப்பந்தத்துக்கும் இஸ்லாத்தில் அனுமதியில்லை. இச்கருத்தை அல்-குர்ஆன் மிகவும் தெளிவாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> ''(இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்ப்பந்தமேயில்லை. (ஏனென்றால்) வழிகேட்டில் இருந்து (விலகி) நேர்வழி (யடைவது எவ்வாறென்று) தெளிவாகி விட்டது. ஆகவே, எவன் ஷைத்தானை நிராகரித்து விட்டு, அல்லாஹ்வை விசுவாசிக்கின்றானோ, அவன் நிச்சயமாக அறுபடாத பலமானதொரு கயிற்றைப் பிடித்துக் கொண்டான். அல்லாஹ், செவியுறுவோனும் அறிவோனுமாக இருக்கிறான்.''
> (2 : 256)

நிறத்தால், மொழியால், குலத்தால், இனத்தால், தொழிலால் மனித சமுதாயத்தைக் கூறுபோட விரும்பாத இஸ்லாம் முழுமனித சமுதாயத்தையும் ஒன்றிணைப்பதற்கான திட்டத்தைத் தனது அடிப் படை இலட்சியமாகக் கொண்டு செயற்படுகின்றது. பின்வரும் அல்-குர்ஆன் வசனங்களை ஒருமுறை ஊன்றிக் கவனித்தால் இவ்வுண்மை புலப்படும்.

> ''எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! (அவன்) அகிலங்கள் அனைத்தையும் படைத்துப் போஷித்துப் பரிபக்குவப் படுத்துவோன்''
> (1 : 1)

> ''(நபியே!) நாம் உம்மை உலகத்தார் யாவருக்கும் ஓர் அருளாகவே அனுப்பியிருக்கிறோம்.'' (22:107)

> ''ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய) தென்றால், அதில்தான், மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும், நன்மை தீமையைப் பிரித்

தறிவிக்கக்கூடியதாகவும் உள்ள திருக்குர்ஆன் (என்னும் இவ் வேதம்) அருளப்பெற்றது.'' (2 : 185)

முதலாவது வசனத்தில் அல்லாஹ்வைப் பற்றிய அறிமுகமும், இரண்டாவதில் பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றிய அறிமுகமும், கடைசி வசனத்தில் குர்ஆனைப் பற்றிய கருத்தும் விளக்கப் பட்டிருக்கின்றன. இம்மூன்று வசனங்களிலும் காணப்படும் ஒரு பொதுவான பண்புதான் மனித சமுதாயம் கூறுபோடப்படாது, அல்லாஹ்வுடனும் ரசூலுடனும், வேதத்துடனும் பிணைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன் இப் புவியின்கண் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளும் அவர்கள்மூலம் வெளிப்படுத்தப்பட்ட வாழ்க்கைத் திட்டங்களும் முழுமனித சமுதாயத்தை ஒன்றிணைக்கக் கூடிய வகையில் பொதுமைப்படுத்தப்படாது, குறிப்பிட்ட கோத்திரங்கள், வர்க்கங்கள், கிளைகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு செயற்பட்டதால் அக்கட்டளைகள் கடினமானவைகளாகவும், நெகிழ்வுத் தன்மைக்கு இடம் இல்லாதனவாகவும் காணப்பட்டன. உதாரணமாக நூஹ் (அலை) அவர்கள், அவரது கூட்டத்தினருக்கு மாத்திரம் நபியாகவும், மூஸா (அலை) அவர்கள், பிர்அவ்னுக்கும் அவனது கூட்டத்தினருக்கும் மாத்திரம் நபியாகவும், ஈஸா (அலை) அவர்கள், மத்யன் வாசிகளுக்கு மாத்திரம் நபியாகவும் அனுப்பப்பட்டதைக் குறிப்பிடலாம். குர்ஆன் கட்டளைகள், காலம், இடம், எல்லை முதலியனவற்றைக் கடந்து செல்லவேண்டிய தேவையிருப்பதால் நெகிழும் தன்மையைத் தன்னகத்தே கொண்டு எளிதானவைகளாக விளங்குகின்றன.

## இஸ்லாத்தின் கட்டளைகள் எளிதானவை

மனிதனது சக்திக்கு மேல் சுமைகளைச் சுமத்தி அவனைக் கஷ்டத்துக்குள்ளாக்க அல்-குர்ஆன் விரும்பவில்லை. இக்கருத்தை அதே குர்ஆன் பின்வருமாறு ஊர்ஜிதப்படுத்துகின்றது.

அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் நிர்ப்பந்திப்பதில்லை. அது தேடிக்கொண்ட நன்மை அதற்கே (பயனளிக்கும்; அவ்வாறே,) அது தேடிக்கொண்ட தீமை அதற்கே (கேடு விளைக்கும்). (2 : 286)

எனவே, இறை கட்டளைகள், மனிதனின் பலவீனத்தைக் கருத்திற் கொண்டு எளிதாக்கப்படவேண்டியதன் அவசியம் உணரப் பட்டிருக்கின்றது. இக்கருத்தை அல்-குர்ஆன் இவ்வாறு இயம்புகின்றது.

அல்லாஹ் (தன் கட்டளைகளை) உங்களுக்கு இலேசாக்க விரும்புகின்றான். ஏனென்றால் மனிதன் பலஹீனமாகவே படைக்கப்பட்டுள்ளான். (4 : 28)

இந்நோக்கத்தை நிறைவு செய்துகொள்வதற்காக அல்-குர்ஆன் தன்னுள் பலதரப்பட்ட முக்கியமான முயற்சிகள் பலவற்றை எடுத்திருப்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இவ்வாறான முயற்சிகளில் ஒன்றுதான், கால, தேச, வர்த்தமான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மனித சுபாவத்துக்கு மதிப்பளித்து, படிப்படியான முறைகளில் சட்டங்களையும் கட்டளைகளையும் அமுல்படுத்தியது. இதற்கு இஸ்லாத்தில் மதுவிலக்குச் சட்டம் அமுல் செய்யப்பட்ட முறை சிறந்தவொரு உதாரணமாக அமைகின்றது.

## மதுவிலக்கும் அல்-குர்ஆனும்

அல்-குர்ஆனின் தோற்ற காலத்தில் மது அறபு மக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துவிட்ட ஒரு அம்சமாகக் காணப்பட்டது. மதுவின்றி அவர்களால் உயிர்வாழ முடியவில்லை. மனித மதியைக் கெடுத்து அவனை ஒழுங்கற்ற பண்பாடற்ற நடைப்பிணமாக ஆக்கிவிடும் மது அரக்கனை ஒழித்துக்கட்டவேண்டும் என்பது அல்லாஹ்வின் விருப்பமாக இருந்தும், ஒரேயடியாக இதை அவர்களிடம் திணிக்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லாதிருப்பதை உத்தேசித்து முதலாவதாக, மதுவைப்பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தை அவர்களுக்குக் கொடுத்தான். அடுத்தபடியாகத் தொழுகையின்போது மாத்திரம் மதுவருந்தக் கூடாதென்ற சட்டத்தையேற்படுத்திக் கடைசியாக மதுவிலக்குச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்தான்.

(நபியே!) சாராயத்தைப் பற்றியும் சூதாட்டத்தைப் பற்றியும் அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். (அதற்கு) நீர் கூறும்: ''இவ்விரண்டிலும் பெரும் பாவமிருக்கின்றது. மனிதர்களுக்கு (ச் சில) பயன்களுமிருக்கின்றன. ஆனால், அவ்விரண்டிலுமுள்ள பாவம், அவ்விரண்டிலுமுள்ள பயனை விட மிகப்பெரிது.'' (2 : 219)

விசுவாசிகளே! நீங்கள் கூறுவது இன்னதென்று நீங்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு, நீங்கள் போதையாயிருக்கும் சமயத்தில் தொழுகைக்குச் செல்லாதீர்கள். (4 : 43)

விசுவாசிகளே! நிச்சயமாக மதுபானமும், சூதாட்டமும் விக்கிரக ஆராதனையும், அம்பெறிந்து குறிகேட்பதும், ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளிலுள்ளவையாகும். ஆகவே, இவைக

ளிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். (அதனால்) நீங்கள் சித்தி பெறுவீர்கள். (5 : 90)

## நடைமுறைச் சாத்தியமான சட்டங்கள்

மனித சமுதாயத்தின்மீது விதிக்கப்படுகின்ற கட்டளைகள் எளிதானவைகளாக அமையவேண்டும் என்பதற்காக அல்-குர்ஆன் மேற்கொண்ட இன்னொரு வகையான முயற்சிதான், சில கட்டளைகள் ஆரம்ப காலத்தில் பரீட்சார்த்தமான முறையில் அருளப்பட்டுப் பின் மனித இயலுமைக் கேற்ப மாற்றியமைக்கப்பட்டு இன்று நடைமுறையில் இருப்பவை. இவற்றை அறபியில் 'தக்லீலுத் தகாலீப்' என அழைப்பர். இதற்கான சில உதாரணங்களை இனிக் கவனிப்போம்.

கணவன் இறந்துவிட்டால் மனைவி ஓராண்டு காலம் 'இத்தா' அனுஷ்டிக்க வேண்டும் எனும் சட்டம் ஆரம்பத்தில் அல்-குர்ஆன் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது. அவ்வசனம் இவ்வாறு அமைந்திருக்கின்றது:

> மனைவிகளை விட்டிறக்கும் உங்களிலுள்ளவர்கள், தங்கள் மனைவிகளை (வீட்டைவிட்டு) அப்புறப்படுத்திவிடாது, ஓர் ஆண்டு வரையில் போஷிக்கும்படி (வாரிசுகளுக்கு) மரண சாசனம் கூறவும். ஆனால், அவர்கள் (ஓர் ஆண்டிற்குள் தாமாகவே) வெளியில் சென்று, தங்களுக்கு முறைப்படி (திருமணம் முதலிய) ஏதும் செய்துகொண்டால் உங்கள் மீது குற்றமில்லை. அல்லாஹ் வல்லோனும் நுண்ணறிவுடையோனுமாக இருக்கின்றான். (2:240)

பரீட்சார்த்த முறையில் அமுல் செய்யப்பட்ட இவ் வசனத்தின் அடிப்படையில் செயற்படுவது பெண் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் மிகவும் கடினமானவொன்றாகக் காணப்பட்டதால், இதன் சட்ட அமுலில் மாற்றம் தேவைப்பட்டது. அம்மாற்றமானது பின்வரும் வசனத்தைக் கொண்டு செய்யப்பட்டு எளிதாக்கப்பட்டது.

> உங்களில் எவரேனும் மனைவிகளை விட்டு இறந்தால், அவர்கள் நான்கு மாதம் பத்து நாட்கள் எதிர்பார்த்திருக்கவும். (இதற்கு 'மரண இத்தா' என்று பெயர்) ஆதலால், அவர்கள் தங்களுடைய ('இத்தா'வின்) தவணையை முடித்துவிட்டால், (அவர்களில் மறுமணம் செய்ய விருப்பமுள்ளவர்கள்) தங்களை ஒழுங்கான முறையில் (அலங்காரம்) ஏதும் செய்துகொள்வதைப்பற்றி உங்கள்மீது குற்றமில்லை. நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான். (2 : 234)

## 'இத்தா'வுக்கான காரணங்கள்

இஸ்லாத்தில் 'இத்தா' வலியுறுத்தப்பட்டிருப்பதற்கான முக்கிய காரணங்கள் பின்வருமாறு:

(i) இறந்தவரின் மனைவி கர்ப்பமுற்றிருக்கின்ருளா என்பதைத் தீர்மானிப்பதற்கு. நான்கு மாதம் பத்து நாளைக்குள்ளான காலவளவில் இதை இலேசாகக் கண்டுபிடிக்கலாம். விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்ணும் மூன்று மாதவிடாய் காலம் (மூன்று மாதங்கள்) 'இத்தா' அனுஷ்டிப்பதும் இதன் காரணமாகவே விதியாக்கப் பட்டிருக்கின்றது. கர்ப்பிணியாக இருக்கின்ருள் என்பது கண்டுபிடிக்கப்பட்டால் பிள்ளை பிறந்து சுத்தமாகும்வரை இக்காலம் நீளும். விவாகரத்துச் செய்யப் பட்டவளுக்கும் இதுவே சட்டம். இன்றைய நவீன விஞ்ஞானம்கூட ஒரு தாயின் வயிற்றில் கர்ப்பமுற்றிருக்கும் சிசுவின் உயிர்த் துடிப்பை யறிய அறுதியிட்ட ஒரு காலக்கெடுவை இன்னும் கூறவில்லை. உத்தேச அடிப்படையில்தான் கூறுகின்றது. 'இத்தா'க் காலமாக ஆகக் குறைந்த, அவசியமான காலவளவை இஸ்லாம் 1407 வருடங்களுக்கு முன்பே விதித்திருப்பதைப் பார்க்கும்போது இஸ்லாத்தின் கட்டளைகள் எவ்வளவு எளிதானவைகளாக, அனைவராலும் பின்பற்றக் கூடியவாறு யதார்த்தமானவைகளாக இருக்கின்றன என்பதைச் சிந்திக்கும் எவரும் வியப்படையாமல் இருக்க முடியாது.

(ii) மிருக இனத்தில் இருந்து மனித இனத்தையுயர்த்திக் காட்டுவதற்காக. மிருகங்களிடம் விவாகத்தின் புனிதத்துவம் பேணப்படுவதில்லை. ஆண் மிருகம், தனது பெண் மிருகத்தை விட்டுவிட்டு இன்னொரு மிருகத்துடன் புணர்ந்து தனது இச்சையைத் தணித்துக் கொள்ளுகின்றது. பெண் மிருகங்களும் இவ்வாறே.

(iii) கணவனின் இறப்புக்காகத் துக்கம் அனுஷ்டிப்பதற்காக. தன்னைப் பொறுப்பேற்ற கணவன், தனக்குச் செய்த உதவிகள், கணவனோடு சந்தோஷமாகக் களித்த நாட்களை நினைவு கூருதல், கணவனின் மறுமை ஈடேற்றத்திற்காக இறைவனை வேண்டிக்கொள்ளல் முதலியன இக்காலகட்டத்தில் நடைபெறவேண்டும். இனி, கட்டளைகளை இலகுபடுத்துவதற்கு அல்-குர்ஆன் 'மேற்கொண்ட இன்னொரு வகையான முயற்சியைக் கவனிப்போம்.

## இஸ்லாத்தின் கட்டளைகள் சமயோசிதமானவை

அல்-குர்ஆன் கட்டளைகள் சமயோசிதமான முறையில் இறக்கப் பட்டு, அவற்றின் மூலம் மனித சமுதாயத்துக்கு நிவாரணம் அளிக்கப் பட்டிருக்கின்றது. ஆரம்பகட்டத்தில், இறப்பவர் தனது சொத்துக்

களைத் தானம் செய்து விடவோ அன்பளிப்பாகக் கொடுத்துவிடவோ அவருக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது. இதனால் ஏற்படும் பாதக மான விளைவு பரவலாக உணரப்பட இவ்வுரிமை பின்வரும் அல்-குர்ஆன் வசனத்தினால் மாற்றியமைக்கப்பட்டது.

(விசுவாசிகளே!) உங்களில் எவருக்கும் மரணம் சமீபித்து அவர் பொருளை விட்டுவிட்டு (இறப்பவராகவும்) இருந்தால், (அவர் தன்னுடைய) தாய்தகப்பனுக்கும் பந்துக்களுக்கும் நியாயமான முறைப்படி (பொருள் சேர்வதற்காக) மரணசாசனம் (கூற) விதிக்கப்பட்டிருக்கின்றது. (இது) பயபக்தியுடையோர்மீது கடமையாகும். (2 : 180)

இதே போன்று நோன்பு விதியாக்கப்பட்ட ஆரம்ப கட்டத்தில் இஷாத் தொழுகைக்கு முன்பே நோன்பு காலத்தில் உண்ணல், அருந்தல், மனைவியுடன் உடலுறவு கொள்ளுதல் முதலியற்றை வைத்துக் கொள்ள வேண்டும் எனும் சட்டம் இருந்தது. இக்கட்டளையின் காரணமாகப் பற்பல சந்தர்ப்பங்களில் நபித் தோழர்கள் கஷ்டங்களுக் காளானார்கள். உமர் (ரழி) அவர்கள்கூட ஒருமுறை இக்கட்டளையை மீறவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. எனவே, சமயோசிதமான முறையில் இச்சட்டம் பின்வரும் அல்-குர்ஆன் வசனத்தினால் மாற்றி யமைக்கப்பட்டு இலகுபடுத்தப்பட்டது.

(விசுவாசிகளே!) நோன்பு (நாட்களின்) இரவுகளில் நீங்கள் உங்கள் மனைவிகளுடன் கூடிச் சேருவது உங்களுக்கு அனுமதிக்கப் பட்டிருக்கின்றது. அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள். (நோன்புடைய காலத்தில், இஷாவுக்குப் பின்னர் உங்கள் மனைவிகளுடன் கூடாமலும், யாதொரு பொருளைப் புசிக்காமலும் இருந்து,) மெய்யாகவே நீங்கள் உங்களைத் துன்பத்திற்கு ஆளாக்கிக் கொண்டீர்கள் என்பதை அல்லாஹ் அறிந்து உங்கள்மீது இரக்கமுற்று, உங்கள் கஷ்டத்தை நீக்கிவிட்டான். ஆகவே, இனி, குமரி இருட்டு நீங்கி விடியற்காலை ஆகிவிட்டதென்று உங்களுக்குத் தெளிவாகும் வரையில் புசியுங்கள்; பருகுங்கள்; (நோன்பின் இரவு காலங்களில் உங்கள் மனைவிகளாகிய) அவர்களுடன் சேர்ந்து, அல்லாஹ் உங்களுக்கு (ச் சந்ததியாக) விதித்திருப்பதைத் தேடிக்கொள்ளுங்கள். எனினும், (கிழக்கு வெளுத்த) பின்பு, இரவு (ஆரம்பமாகும்) வரை (மேலே கூறியவைகளைத் தவிர்த்து) நோன்புகளை (நோற்றுப்) பூரணமாக்குங்கள். ஆயினும், நீங்கள் (தியானம்புரிய) பள்ளிகளில் தங்கி (இஃதிகாபு) இருக்கும்போது, (உங்கள் மனைவிகளாகிய) அவர்களுடன் கூடாதீர்கள். இவை அல்லாஹ்வின்



85177

திட்டமான சட்ட வரம்புகள். ஆதலால் அவற்றை (மீற) நீங்கள் அணுகாதீர்கள். மனிதர்கள் பரிசுத்தவான்களாகும் பொருட்டு, அல்லாஹ் தன்னுடைய வசனங்களை அவர்களுக்கு இவ்வாறு தெளிவாக்குகின்றான். (2 : 187)

## நாஸிக், மன்ஸூக்

மனித இயற்கைக்கும், அவனது சுபாவத்துக்கும் முக்கியத்துவம் அளித்துக் கௌரவித்துள்ள இஸ்லாம், கட்டளைகள், சட்டங்கள் பளுவற்றனவாக இருக்கவேண்டும் என்பதற்காக அல்-குர்ஆன் வசனங்கள் சில பின்னைய வசனங்களால் மாற்றியும் அமைக்கப்பட்டன. மாற்றப்பட்டவை அறபியில் மன்ஸூக் எனவும் மாற்றியவை நாஸிக் எனவும் அழைக்கப்படுகின்றன. அல்-குர்ஆனில் இவ்வாறான மாற்றங்கள் மூன்று வகையினவாக இருக்கின்றன.

(i) ஓதுவது அனுமதிக்கப்பட்டு சட்ட அமுலில் மாத்திரம் மாற்றம். முன்பு அருளப்பட்ட சில வசனங்களின் அடிப்படையில் செயல்படுவது தடைசெய்யப்பட்டு மாற்றிய — அதாவது பின்பு இறக்கப்பட்ட வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டவிதிகளே அமுல்படுத்தப்படவேண்டியன. இதற்கு உதாரணமாக நாம் முன்பு அவதானித்த விதவைக்கான 'இத்தா' க்காலத்தை நிர்ணயிக்கும் 2 : 234, 2 : 240 ஆகிய இரண்டு வசனங்களையும் எடுத்துக்கொள்ளலாம். இவற்றில் முன்னையது 'நாஸிக்' ஆகவும் பின்னையது 'மன்ஸூக்' ஆகவும் இருக்கின்றன.

(ii) ஓதுவது மாத்திரம் தடைசெய்யப்பட்ட வசனங்கள். இன்று நம்மிடம் இருக்கும் அல்-குர்ஆன் பிரதிகளில் இவ்வசனங்கள் இடம் பெறமுடியாதவாறு பெருமானார் காலத்திலேயே ஸஹாபாப் பெருமக்களின் மனங்களிலிருந்தே இவ்வாறான வசனங்கள் மறக்கடிக்கப்பட்டன. ஆனால், இவை குறித்து நின்ற சட்ட விளக்கங்களை இவற்றை மாற்றுவதற்காக அருளப்பட்ட வசனங்கள் உள்ளடக்கிக் காணப்பட்டமையால் சட்டஅமுலில் மாற்றமேற்படவில்லை. உதாரணமாக ஆரம்பத்தில் விபசாரத்துக்கான தண்டனையைப் பொறுத்தவளவில் கிழப்பருவத்தைய ஆணும் பெண்ணும் இதில் ஈடுபடும் போது மாத்திரமே தண்டனை விதிக்கப்படவேண்டும் என்றிருந்தது. பின்பு இத்தண்டனையானது பாகுபாடற்றமுறையில் விபசாரத்தில் ஈடுபடும் ஒவ்வொரு சுதந்திர ஆண் பெண்ணுக்கும் விதிக்கப்படவேண்டியதன் அவசியம் நியாயமானதாக இருந்ததால் இச்சட்டம் பொதுமைப்படுத்தப்பட்டது. அவ்வசனம் வருமாறு :

விபசாரம் செய்தபெண், விபசாரம் செய்தஆண் — இவர்களில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள். மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால் அல்லாஹ்விதித்த இக்கட்டளையை நிறைவேற்றுவதில் அவ்விருவர்களுடைய விஷயத்தில் உங்களுக்கு இரக்கம் ஏற்படக்கூடாது. அவ்விருவர்களுக்கு (தண்டனை) வேதனைகொடுக்கும் சமயத்தில் விசுவாசிகளில் ஒரு குழுவினர் (அதற்குச்) சாட்சியாக அங்கு இருக்கவும். (24 : 2)

(iii) சட்ட அமுலும் ஓதுவதும் மாற்றப்பட்டவை. இவ்வாறான வசனங்கள் மனப்பாடம்பண்ணி வைத்திருந்த ஸஹாபாத்தோழர்களின் மனங்களில் இருந்து கூட உயர்த்தப்பட்டுவிட்டன.

அல்-குர்ஆனின் விசு — விடைரீதியான வசனங்கள்கூட, கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதிலும் விளங்கிக் கொள்வதிலும் மனித சமுதாயம் அதன் இயலுமைக்கு மேலாகக் கஷ்டப்படுத்தப்படக் கூடாது எனும் நோக்கத்திலே இறங்கின என்றால் மிகைபடக் கூறியதாகாது. பின்வரும் அல்-குர்ஆன் வசனங்களைக் கவனித்தால் இவ்வுண்மை புலப்படும் என நினைக்கிறேன்.

## பளுவான கட்டளைகள்

தெரியாத ஒருவிடயத்தைத் தெரிந்து கொள்வதற்குக் கேட்கப்படுகின்ற கேள்விகள் பொறுப்புக்களின் பளுவைவிட்டும் மனிதனை விடுதலை செய்வதாக இருப்பது போன்று, குதர்க்கமான கேள்விகளும் தூதரின் பேச்சை இடைமறித்து விடுக்கப்படுகின்ற கேள்விகளும், அளவோடமையாத கேள்விகளும் பளுவான கட்டளைகளை வலிய வருத்திக் கொள்வதற்கு ஏதுவாகின்றன. இதற்கு குர்ஆனிலும் ஹதீஸிலும் நிறைய ஆதாரங்கள் உண்டு. அல் - குர்ஆனின் இரண்டாவது அத்தியாயமான ஸூரத்துல் பகறாவில் இவ்வாறான ஒரு சம்பவம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. மூஸா (அலை) அவர்களுடைய காலத்தில்நடந்த ஒரு கொலையைத் துப்புத் துலக்குவதற்கு அல்லாஹ் இவ்வாறு கட்டளையிட்டான்.

நீங்கள் ஒருவனைக் கொலை செய்து விட்டு (தப்பித்துக்கொள்ள) அதைப்பற்றி நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருந்த சமயத்தில் (அந்த ரிஷபத்தை அறுக்கும்படி கட்டளையிட்டு கொலை விஷயத்தில்) நீங்கள்மறைத்துக் கொள்ள விரும்பியதை வெளியாக்கினான். ஆகவே (அவர்களை நோக்கி) ''நீங்கள் (அதனை அறுத்து) அதில் ஒரு பாகத்தைக் கொண்டு (கொலையுண்ட) அவனை அடியுங்கள்'' என நாம் கூறினோம். (2; 72,73)

அல்லாஹ்வின் கட்டளை, அவனது தூதுவர் மூலமாக அம் மக்களுக்கு இலகுவான முறையில் அறிவிக்கப்பட்டும் அவர்களாகவே தங்கள் மீது சிரமங்களைச் சுமத்திக் கொண்டார்கள், ஒரு ரிஷபத்தை அறுத்து அதன் ஒரு பகுதியைக் கொலையுண்டவன் மேல் அடிக்க வேண்டியதிருக்க குதர்க்கமானமுறையில் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போனார்கள். இறைதூதருக்கும் அம்மக்களுக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணை மிகவும் சுவையானது. குர்ஆன் அவற்றைத் தொகுத்துத் தருவதைக் கவனியுங்கள்.

''அ (தன்வய) து என்னவென்று எங்களுக்கு அறிவிக்கும்படி எங்களுக்காக உமது இறைவனை நீர் கேளும்'' என்றார்கள். (அதற்கு மூஸா) ''நிச்சயமாக ஒரு ரிஷபம், கிழமுமன்று; இளங்கன்றுமன்று; இதற்கு மத்திய பருவத்திலுள்ள ரிஷபம் என அவன் கூறுகிறான்'' எனக் கூறி, ''உங்களுக்கிடப்பட்ட கட்டளையை நீங்கள் நிறைவேற்றுங்கள்'' என்றார்.

அதற்கவர்கள், ''அதன் நிறம் என்ன, என்று அறிவிக்கும்படி எங்களுக்காக நீர் உம்முடைய இறைவனைக் கேளும்'' என்றார்கள். (அதற்கு மூஸா) ''அது பார்ப்பவரைக் கவரக்கூடிய கலப்பற்ற மஞ்சள் நிறமான ரிஷபம்'' என அவன் கூறுகிறான் என்றார்.

அதற்கவர்கள், ''அந்த ரிஷபம் எங்களைச் சந்தேகத்துக்குள்ளாக்குகின்றது. அஃது எது - (வேலை செய்து பழகியதா அல்லவா?) என எங்களுக்கு விவரித்து அறிவிக்கும்படி, உம்முடைய இறைவனை நீர் எங்களுக்காகக் கேளும். அல்லாஹ் நாடினால், இனி நிச்சயமாக நாங்கள் (இவ்விஷயத்தில்) நேர் வழி பெற்றுவிடுவோம்'' எனக் கூறினார்கள்.

(அதற்குமூஸா) ''அது பூமியில் உழவடித்தோ பயிருக்கு தண்ணீர் இறைத்தோ கசங்காததும் நல்ல - யாதொரு வடுவுமில்லாததுமான ரிஷபம் என்று அவன் கூறுகின்றான்'' என்றார். (2:68-71)

அளவை மீறிய இக்கேள்விகளால் கடைசி வரை அம்மக்களால் கொலைசெய்தவனைக் கண்டு பிடிக்க முடியாமற் போனதோடு குழப்பத்திலும் ஆழ்த்தப்பட்டார்கள்.

இம்முறையைப் பெருமானார் (ஸல்) அவர்களும் கண்டித்திருக்கின்றார்கள். ஒருமுறை அவர்கள் ஹஜ்ஜின் செயல்ரீதியான விளக்கம் ஒன்றை ஸஹாபாத் தோழர்கள் மத்தியில் அளித்துக் கொண்டிருக்கும் போது, ஒருதோழர் குறுக்கிட்டு, ஹஜ்ஜு செய்வது ஒவ்வொரு வருடமும் கடமைதானா? எனக்கேட்டார். இக் கேள்வியினால் மன

வேதனைப்பட்ட பெருமானார் (ஸல்) அத்தோழரைக் கடுமையாக எச்சரித்தார்கள். நீங்கள் கேட்ட கேள்விக்கு நான் 'ஆம்' என்று மாத்திரம் பதில் இறுத்து விட்டேனென்றால் உங்கள்மீது பாரியவொருபளு சுமத்தப்பட்டதாகிவிடும். பிரதி வருடமும் ஹஜ்ஜு செய்யவேண்டி வரும். எனவே, நான் பேசிக்கொண்டிருக்கும் போது இடைமறித்துக் கேள்விகள் கேட்காதீர்கள். முன்னைய சமுதாயத்தினர்களின் படுமோசமான அழிவுக்குக் காரணம் அவர்கள் கேள்விகளை அதிகப்படுத்தி குதர்க்கம் செய்ததே எனவும் கூறினார். எனவே, தான் அல்-குர்ஆனும் நம்மை இவ்வாறு பிரார்த்திக்கும்படி பணிக்கின்றது.

*எங்கள் இறைவனே! நாங்கள் (எங்கள் கடமைகளைச் செய்ய) மறந்துவிட்டாலும், அல்லது (அதில்) தவறிழைத்து விட்டாலும், (அதைப்பற்றி) நீ எங்களை (க்குற்றம்) பிடிக்காதே! எங்கள் இறைவனே! நீ எங்கள்மீது (கடினமான கட்டளைகளை விதித்துப்) பளுவானசுமையைச் சுமத்திவிடாதே! எங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது (கடினமான கட்டளைகளை) நீ சுமத்தியவாறு (சுமத்தாதே!) எங்கள் இறைவனே! நாங்கள் தாங்கமுடியாத கஷ்டங்களை எங்கள் மீது சுமத்திவிடாதே! எங் (கள் குற்றங்) களை மன்னிப்பாயாக! எங்களைப் பொறுப்பாயாக! எங்கள்மீது கருணை புரிவாயாக! நீதான் எங்கள் இரட்சகன்! ஆகவே (உன்னை) நிராகரிக்கும் ஜனங்கள் மீது (வெற்றிபெற) நீ எங்களுக்கு உதவிபுரிவாயாக! (என்று பிரார்த்திப்பீர்களாக!) (2 : 286)*

## ஸுன்னாவின் பங்களிப்பு

இனி, இறைகட்டளைகளை மனித சமுதாயத்துக்கு இலேசுபடுத்திக் கொடுப்பதில் ஸுன்னாவின் பங்களிப்புப் பற்றிஆராய்வோம். இறைதூதர் — கடைசித்தூதர் — முழுமனித சமுதாயத்துக்குமாக அனுப்பப்பட்டவர் எனும் வகையில் பெருமானாரது பங்களிப்பு இத்துறையில் இன்றியமையாத ஒரு அம்சமே.

அல்-குர்ஆன் வசனங்களுக்கு சிறந்த விளக்கங்களைத் தரக்கூடியனவாகப் பெருமானார் (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பன அமைந்திருக்கின்றன. ஸுன்னாவின் தோற்றத்தினால் அல்-குர்ஆனின் தெய்வீகத் தன்மையும் புனிதத்துவமும் பேணப்பட்டுப் பிறரால் தவறான விளக்கங்கள் அல்-குர்ஆன் வசனங்களுக்குக் கொடுக்கப்படாமலும் பாதுகாக்கப்பட்டது. அல்-குர்ஆன் கட்டளைகள் இலகுவில் செயற்படுத்தப்படக்கூடியவாறு அமைத்துத் தருவதில் பெருமானார் மேற்கொண்ட முயற்சிகள் சிலவற்றைச் சுருக்கமாக இனி ஆராய்வோம்.

கஷ்டங்களை மனிதன், தானாகத்தேடிக்கொள்வதற்கு முற்படக் கூடாது என்ற கருத்தில் முழுமனித சமுதாயத்துக்கும் பின்வரும் உபதேசத்தைக் கூறி வைத்தார்கள்.

''நிச்சயமாக அல்லாஹ் சில கடமைகள் உங்கள்மீது விதித்திருக்கின்றான். அவற்றை வீணடிக்காதீர்; சில வரையறைகளையும் அவன் விதித்திருக்கிறான். அவற்றைத் தாண்ட நினைக்காதீர்; சிலவற்றை ஹறாமாக்கினான். அவைபால் நெருங்காதீர்; இன்னும் சிலவற்றின்பால், உங்கள் மீது இரக்கப்பட்டு மௌனம்சாதித்திருக்கின்றான். அவற்றின்பால் தேடுதல் முயற்சிகளில் ஈடுபடாதே.''

கடினமான இறைகட்டளைகளைக் கொண்டு தமது சமூகத்தினர் கஷ்டப்படக்கூடாதென்பதனாலேயே இவ்வாறு கூறியிருக்கின்றார். இதை ஊர்ஜிதம் செய்வது போல அல்-குர்ஆன் இவர்களை அறிமுகப் படுத்தும் பின்வரும் வசனம் அமைந்திருக்கின்றது.

*( விசுவாசிகளே! ) உங்களிலிருந்து நிச்சயமாக ( நம்முடைய ) ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். ( உங்களுக்குயாதொரு துன்பம் ஏற்பட்டு ) நீங்கள் கஷ்டத்துக்குள்ளாகிவிட்டால், (அது) அவருக்கு மிக்கவருத்தமாகவே இருக்கும். ( அவ்வளவு தூரம் உங்கள் மீது அன்புடையவர். ) அன்றி, உங் ( கள் நன்மை ) களைப் பெரிதும் விரும்புகின்றவராகவும், விசுவாசி ( களாகிய உங் ) கள் மீது மிக்க அன்பும், கிருபையும் உடையவராகவும் இருக்கின்றார். ( 10 : 128 )*

எனவே, இத்துறையிலான பெருமானார் ( ஸல் ) அவர்களது பங்களிப்பைப் பின்வரும் தலையங்கங்களில் ஆராய்வோம்.

## முன்னைய இறைதூதுவர்களில் இருந்து பெருமானார் வேறுபடும் விதம்:

பெருமானார் ( ஸல் ) அவர்களுக்கு முன் இப் பூவுலகின் கண் அனுப்பப்பட்ட எந்த இறைதூதுவருக்கும் தனது தூதுத்துவம் நிலை பெற்றுலகில் இருக்க கூடிய காலம், பெருமானாரது தூதுத்துவ காலத்தோடு ஒப்பிடும் போது மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது. அவர்களைத் தூதுவர்களாகப் பெற்ற சமூகத்தினரின் எண்ணிக்கையும் குறைவானதாகவே காணப்பட்டது. ஆனால் பெருமானாரோ யுகமுடிவு வரை இறைதூதராகவும் இவ்வுலகில் கடைசியாகத் தோன்றும் மனிதன் வரை தனது தூதுத்துவத்தைக் கொண்டு செல்ல வேண்டிய

பொறுப்புள்ளவராகவும் காணப்படுகின்றார். இதனால் ஏனைய நபிமார்களைவிட அந்தஸ்தில் இறைவனிடம் உயர்ந்தவராக இருக்கும் அதே சமயம் அனைவரும் பின்பற்றக்கூடிய முறையிலான இலகுவான வொரு வாழ்க்கைத் திட்டத்தை யுடையவராகவும் இருக்கவேண்டுவது அவசியம். பற்பல அம்சங்களில் இவர்களது சமுதாயத்துக்கான பங்களிப்பு உயர்ந்ததாகவே இருக்கின்றது.

நூஹ் நபியவர்கள் ஏறக்குறைய 950வருடங்கள் இஸ்லாமியப் பிரசாரத்தில் ஈடுபட்டாலும் அவரை அங்கீகரித்த மக்களின் தொகை மிகமிகக் குறைவாகவே இருந்தனர். தனது மகன் கன்ஆன் கூடத் தன்னையங்கீகரிக்காத நிலையைக் கண்டு வருந்தினர். கடைசியில் தூபான் எனும் வெள்ளப் பிரளயத்தினால் நபி வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலே நபியின்மகன் உட்பட அவர்களை நிராகரித்தோர் அழிக்கப்பட்டனர். நூஹ் நபி தனது தூதுத்துவம் பற்றி மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தியது, மக்கள் அவர்களைப் பரிகசித்தமை, பின் நிராகரித்தோர் அழிக்கப்பட்டமை வரையானவிடயங்கள் அல்-குர்ஆனின் 7வது அத்தியாயத்தின் 59-64 வரையான வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. இதேபோன்று லூத்(அலை)அவர்கள் தனது தூதுத்துவம் பற்றி அவர்களது கூட்டத்தினரிடம் பிரஸ்தாபித்து அவர்களை நோக்கி ''உங்களுக்குமுன்னர் எவருமே உலகில் செய்திராத மானக்

கேடானதொரு காரியத்தையா நீங்கள் செய்கின்றீர்கள்?, நிச்சயமாக நீங்கள் பெண்களை விட்டு (விட்டு) ஆண்களிடம் காம இச்சையைத் தணித்துக்கொள்ளச் செல்கின்றீர்கள். என்னே! நீங்கள் மிக்கவரம்பு மீறிய மக்களாக இருக்கின்றீர்கள்'' (7:80,81) என்று

சொன்னபோது நபியை நாடு கடத்துவதற்கான முயற்சியில் அவர்கள் இறங்கினர். லூத்நபியின் மனைவிகூட அவர்களோடு சேர்ந்து கொண்டாள். அநாதரவான தன்னுடைய நிலையை அல்லாஹ்விடம் முறையிட்டு அம்மக்களை அழிக்கும்படி வேண்டிக் கொண்டபோது அவரையும் அவரது குடும்பத்தையும் தவிர (மனைவிநீங்கலாக) ஏனையோர் கல்மாரி பொழியப்பட்டு அழிக்கப்பட்டனர்.

இதேபோன்று ஹூத் நபியைத் தூதராகப் பெற்ற ஹல்ரமௌத்தில் முஷ்ரா எனும் ஊரில் வாழ்ந்த ஆத்எனும் வர்க்கத்தினர் நபிக்கு எதிராகச் செயற்பட்டனர். அவர்கள் இறைவனது வேதனையைப் பற்றி எச்சரித்தார்கள். எனினும் மழை மேகத்தைக் கண்ட மக்கள் மழைதான் பொழியப் போகின்றது எனநினைத்தனரல்லாமல், அது தமக்கு வேதனையாக முடியும் எனக்கிஞ்சித்தும் சிந்திக்கவில்லை. 7 இரவுகளும் 8 பகல்களும் இவர்கள் வேதனைப்படுத்தப்பட்டுக் குட்டிச் சுவராக்கப்பட்டனர்.

யூனுஸ் நபியைப் பற்றிப் பெருமாஞர் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் இவ்வாறு எச்சரிக்கின்ருன்.

(நபியே) நீர் உமதிறைவனின் கட்டளைக்காகப் பொறுத்திரும். மீன்(விழுங்கிய) மனிதரை (யூனுஸ்நபியை)ப்போல் நீரும் ஆகி விடாதீர். (அவர்தம் மக்களுடன் கோபித்துக்கொண்டு கப்பலில் சென்று கடலில் மூழ்கி மீனிஞல் விழுங்கப்பட்டார். அதிலிருந்து கொண்டு) அவர் கோபத்தை விழுங்கிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்ததை நினைத்துப்பாரும். (68:48)

மக்கள் தன்னையங்கீகரிக்காததனுல், மக்களோடு கோபித்துக் கொண்டு வெளியேறியவரே யூனுஸ்(அலை)அவர்கள். தனது சமூகத்தினர் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, தான் உண்டு; தன்குடும்பம் உண்டு என்று வெளியேறிய இவர்களைப் பல விதக் கஷ்டத்துக்குள்ளாக்கிஞன் இறைவன். வேதனை வருவதற்கான அறிகுறிகளை மக்கள்கண்டபோது பாவமன்னிப்புக் கேட்பதற்காகத் தூதரைத் தேடிப்பார்த்தார்கள். அவர்களைக் காணுதபோது அல்லாஹ்விடம் பச்சாதாபப்பட்டு முறை யிட்டார்கள். வேதனையை அவர்களைவிட்டும் அல்லாஹ் நீக்கியதுடன், 'தங்களுடைய விசுவாசம் பலனளிக்கக்கூடிய விதத்தில் (வேதனை வருவதற்குமுன்னர் விசுவாசங்கொண்டு வேதனையில் இருந்து தப்பிக் கொண்ட) யூனுஸ் உடைய மக்களைப்போன்ற மற்ருேர் ஊரார் இருக்கக்கூடாதா?' (10:98)எனப்போற்றியும் இருக்கின்ருன்..

இவ்வரிசையில் பெருமாஞர் இவர்களில் இருந்து வேறுபடுகின் ருர். தாயிபுக்குச்சென்று இஸ்லாமிய பிரசாரத்தை மேற்கொண்ட போது இவருக்குக் கிடைத்தது அடியும் உதையும் தான். மயக்கம் தெளிந்தபோது, மீக்காயீல் (அலை) ஜிப்ரயீல் (அலை) போன்ற அம ரர்கள் பெருமாஞரிடம் சமூகம் கொடுத்து அம்மக்களை அழித்தொழிப் பதற்கு உத்தரவு கேட்டபோது, ''நான் அருட்கொடையாகவன்றி சாபம் இடுவதற்காக அனுப்பப்பட்டவனல்லன்; இவர்கள் தான் என்னை அங்கீகரிக்காவிட்டாலும் இவர்களது சந்ததியினராவது என்னை அங்கீகரிப்பர்'' என்ற கருத்துப்படக் கூறிஞர். அன்று அவர்கள் சாப மிட்டிருந்தால் அல்லது அப்பூமி அழிக்கப்படக் காரணமாக இருந் திருந்தால் செல்வம் கொழிக்கும் ஆரோக்கியப் பூங்காவனமாக இன்று மாறியிருக்காதல்லவா? மதீனு ஹிஜ்ரத்தை மேற்கொண்டு மக்காவின் எல்லையைத் தாண்டும்போது,

''உலகின் சர்வபாகங்களையும் விட இந்நகரம் எனக்கு மிக விருப்பமானது. குறைஷியர் பலவந்தமாக என்னை வெளியேற்றி யிருக்காவிடின் எப்போதும் இதை விட்டு வெளியேறமாட்டேன்'' (அறி: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) முஸ்னத் அபூயஃலா)

மேனுட்டுச் சரித்திராசிரியர்கள் வர்ணிப்பது போன்று 'ஹிஜ்ரத்' என்பது, இறைவனது வேதனையை மக்கத்துக் குறைஷிகள் அனுபவிக்கவிட்டுவிட்டுப் பெருமானுர் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள தப்பியோடிய சம்பவமன்று. அப்போது அருளப்பட்ட 47 வது அத்தியாயத்தின் 13 வது வசனம் மக்கத்து மக்கள்தான் பெருமானுரை வெளியேற்றினர் எனும் கருத்தைத் தரக் கூடியதாக இருப்பதுமே இதற்குத் தக்க சான்ருகும். இருபத்து மூன்று வருடத் தனது தூதுத்துவ காலத்தில் வேறெவரும் சாதிக்காத பெரியவொரு சாதனையை ஏற்படுத்திவிட்டார். முழு அரேபியாவும் இஸ்லாத்தில் ஒன்று சேர்ந்தது. மக்களுக்கு கஷ்டமேற்படக்கூடிய முறைகளை விடுத்து அவர்களுடன் இதமாக பழகியதே இதற்குக் காரணம் என்பதைக் குர்ஆன்

> *(நபியே) அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே, நீர் அவர்கள் மீது இரக்கமுள்ளவரானீர். கடுகடுப்பானவராகவும் கடின சித்தமுள்ளவராகவும் நீர் இருந்திருப்பீராஞல் உம்மிடம் இருந்து வெருண்டோடியிருப்பார்கள். ''(3:160)எனச் சிலாகித்துப் பேசுகின்றது.*

## முன்மாதிரியான வாழ்க்கை :

இஸ்லாத்தின் பல துறைகளையும் உள்ளடக்கிய அவரது வாழ்க்கை, இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ முனையும் அனைவருக்கும் இலகுவான செம்மையான வழியைக் காண்பிக்கின்றது. ஹல்ரத் ஈசா (அலை) அவர்களை, இன்றைய காலகட்ட மனிதன் ஒரு முன்மாதிரியாகக் கொண்டு எல்லா அம்சங்களிலும் செயற்பட முடியாது. மனித இயற்கையின் தூண்டுதலின் அடிப்படையில் ஏற்படக்கூடிய திருமணம் அதை அடுத்துவரும் குடும்ப வாழ்க்கை, சமூக உறவு போன்ற துறைகளில் அவர்களது வாழ்வு சம்பூரணமற்றதாக இருப்பதால் அவர்களை முன்மாதிரியாகக் கொள்வது சாத்தியமில்லை. இஸ்லாத்தில் துறவறமில்லை எனப்போதித்த பெருமானுர் (ஸல்) அவர்களின் முன்மாதிரியான வாழ்க்கை மனித இயற்கைக்கு முக்கியத்துவம் அளித்து எல்லாக் காலத்துக்கும் பொருந்துவதாகவும் இருக்கின்றது, முன்மாதிரியான இவர்களது வாழ்க்கையை மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரித்து, அவை எம்முறையில் இஸ்லாத்தை மனித சமுதாயத்துக்கு இலகுபடுத்திக் கொடுப்பதில் முயன்றுள்ளன எனச் சுருக்கமாக இனிக் கவனிப்போம்.

## வணக்க வழிபாடுகள்

சமய அனுஷ்டானங்களைப் பொறுத்தளவில், தோழர்களைக் கஷ்டப்படுத்தப் பெருமானுர் விரும்பவில்லை. அல்லாஹ்வின் முகர்ரபான

ஒரு ரசூல் எனும் வகையில் இறைவணக்கங்களில் தான் ஈடுபடுவது போன்று எல்லோராலும் ஈடுபடுவதென்பது முடியாத காரியம் என்பதால் தனிப்பட்ட தொழுகைகள், பிற மதக் கிரியைகளைத் தோழர்களின் கண்களில் படாதவாறு இரவு நேரத்தில் நிறைவேற்றி வந்ததற்கும் இதுவே காரணம். பொதுவானவோர் இடத்தில் பகல் நேரங்களில் இவை செய்யப்பட்டால் தன்மீதும் அல்லாஹ் மீதும் கொண்டுள்ள விசுவாசத்தின் காரணமாகத் தனது தோழர்களும் செய்ய முற்பட்டுப் பின் கஷ்டப்பட வேண்டி வரும் என நினைத்தார் போலும். மிஃருஜின் போது வழங்கப்பட்ட ஐம்பது நேரத் தொழுகையை ஐந்தாகக் குறைத்துக் கொள்வதற்கு எடுத்த முயற்சி, தஹஜ்ஜுத் தொழுகை தனது சமூகத்தினருக்கு பர்ளாக்கப்பட்டு விடுமோ என அஞ்சியமை, தராவீஹ் தொழுகையை ஜமாஅத்தாகத் தொழுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமை முதலியனகூட இவ்வடிப்படையில் செய்யப்பட்டனவே. நல்லுபதேசம் செய்யும்படி வேண்டிக் கொண்ட தோழர்கள் பலருக்கு அவரவர்களின் ஆற்றல், தகைமைகளுக்குத் தக்கபடி சில உபரி வணக்கங்களின்பால் வலியத்துச் செய்தமை போன்றனவும் இஸ்லாமிய சமய அனுஷ்டானங்கள் இலகுவானவை என்பதைக் காட்டுவதற்கே. ''உனது ஆத்மாவை வருத்திக் கோபமூட்டக்கூடிய வகையில் எப்போதும் வணக்கத்தில் இருக்காதே'' எனும் கருத்தையும் அவர்கள் கூறிப் போந்தார்கள்.

அடிப்படை அனுஷ்டானங்கள், வணக்கங்களுக்குமேல் தனது சமூகத்தினர் மேல் பளுவைச்சுமத்தப் பெருமானார் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை என்பதற்குப் பின்வரும் ஹதீஸ் சிறந்தவொரு உதாரணமாக இருக்கின்றது.

> ஒருமனிதர் பெருமானாரிடம் இவ்வாறு கேட்கின்றார்: ''நான் பர்ளான தொழுகைகளை மாத்திரம் தொழுது, ரமழான்மாதம் நோன்பும் நோற்று ஹலாலானவற்றை ஏற்றும், ஹறாமானவற்றைத் தவிர்த்தும் நடந்து, இவைகளை விடக்கூடுதலாக எவ்வித வணக்கத்தையும் செய்யாத நிலையில் நான் சுவர்க்கம் புகுவேனா?'' எனக்கேட்டார். 'ஆம்' எனப் பெருமானார் பதில் இறுத்தார். (அறி; அபூஅப்துல்லா ஜாபிரிப்னு அப்துல்லாஹ் அல்-அன்ஸாரி)

அனுஷ்டான ரீதியான வணக்கங்களைவிட, பாதையில் மனிதருக்கு இடைஞ்சல் தருவனவற்றை அகற்றுதல், மனைவியுடன் வீடுகூடுதல் போன்ற காரியங்களுக்கும் வணக்கத்தின் அந்தஸ்த்தைக் கொடுத்து மனித இயற்கைக்கு மதிப்பளித்திருக்கின்றது.

இனி சமூகவியலைப் பொறுத்தவளவில் தனிப்பட்ட மனிதனுக்கும் சமூகத்துக்குமிடையே இருக்கும் தொடர்புகள், கணவன் — மனைவி தொடர்புகள், தகப்பன் — பிள்ளைப் பிணைப்புக்கள், முதலாளி — தொழிலாளி உறவுகள் போன்ற அனைத்துத்துறைகளிலும் எழக் கூடிய, அதுவரை தீர்த்து வைக்கப்படாத பிரச்சினைகளுக்குத் தகுந்த விளக்கமளித்து இஸ்லாத்தின் பின்பற்றுதலை மிகமிக இலகுவாக்கினர். இவ்வகையில் ஒரு தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையில் ஏற்பட வேண்டிய உறவுப்பிணைப்பு பற்றி விளக்கி, இரு சாராரும் இலகுவான முறையில் இஸ்லாத்தைப் பின்பற்ற எவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்கள் வழிகாட்டுகின்றார்கள் என்பதுபற்றி இனிக்கவனிப் போம்.

## தொழிலாளி – முதலாளி உறவு

ஒரு தொழில் தருநருக்கும் தொழிலாளிக்குமிடையே காணப் படவேண்டிய அன்னியோன்ய பிணைப்பைக்குர்ஆன், மூஸா (அலை) அவர்களுடைய சரித்திரத்தின் வாயிலாக நமக்கு எடுத்துக்காட்டு கின்றது. 'மத்யன்' நகரத்தின் வெளியிலிருந்த தண்ணீர்த்துறையின் பக்கம் மூஸா (அலை) அவர்கள் செல்ல நேர்ந்தபோது, இருபெண்கள் தம்முடைய ஆடுகளுக்குத் தண்ணீர்ப்புகட்டுவதற்காகக் காத்திருந் தனர். இதைக்கண்ட இறைதூதர், அவர்களின் கால்நடைகளுக்குத் தண்ணீர்ப்புகட்டினர். இவ்விடயத்தை அவ்விருபெண்களும் தமது தந்தையிடம் போய்க்கூற, அவரையழைத்து வரும்படி தம்மக்கள் இருவருக்கும் வயதுமுதிர்ந்த தந்தை உத்தரவிட்டார்.

> (அத்தருணத்தில்) அவ்விரு பெண்களில் ஒருத்தி ''என் தந்தையே! நீங்கள் இவரைக் கூலிக்கு அமர்த்திக்கொள்ளுங்கள். நிச்சயமாக (இந்த) நம்பிக்கையான பலவானை நீங்கள் கூலிக்கு அமர்த்திக்கொள்வது மிக்க நல்லது'' என்று கூறினாள்.

> அதற்கு அவர் (மூஸாவிடம்) கூறினார். ''நீர்எனக்கு எட்டுவருடங்கள் வேலை செய்யவேண்டும் என்ற நிபந்தனையின் மீது என்னுடைய இவ்விருபெண்களில் ஒருத்தியை நான் உமக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்புகின்றேன்; நீர் (அதைப்) பத்துவருடங் களாகப் பூர்த்திசெய்தால் (அது) உம் விருப்பத்தைப் பொறுத்தது நான் உமக்கு (அதிகமான) சிரமத்தைக் கொடுக்க விரும் பவில்லை. அல்லாஹ் நாடினல் நீர் என்னை நேர்மையாளர்களில் ஒருவராகவே காண்பீர்'' என்றார்.

அதற்கு (மூஸா) "உங்களுக்கும் எனக்குமிடையில், இதுவே (உடன்படிக்கையாகும்.) இவ்விரு நிபந்தனைகளில் எதனையும் நான் நிறைவேற்றலாம். (இன்னதைத் தான் நிறைவேற்ற வேண்டுமென்று) என் மீது கட்டாயமில்லை. நாம் பேசிக்கொண்டதற்கு அல்லாஹ்வே சாட்சி" என்று கூறினர். (அல்-குர்ஆன் 28:26-38)

மூஸா (அலை) அவர்கள் தன்னுடைய உடன்படிக்கையைப் பூர்த்தி செய்து திருமணமும் புரிந்து கொண்டு குடும்பத்துடன் தனது ஊருக்குச் சென்றார். இஸ்லாமிய சமூகவியலைப் பொறுத்தவளவிலும், பொருளியலைப் பொறுத்தவளவிலும் இந்நிகழ்ச்சி முக்கியத்துவம் பெறுகின்றது. ஒருமுதலாளி, இன்னொருவரைத் தொழிலுக்கு அமர்த்தும்போது :

1. வேலையின் தன்மைபற்றியும் அதற்கான ஊதியம் பற்றியும் அறிவித்து விடவேண்டும்.

2. தொழிலாளி தனது இணக்கத்தை வற்புறுத்தலின் பேரிலன்றி சுதந்திரமாகச் சிந்தித்து வெளியிடும் உரிமையுடையவனாக இருக்கின்றான்.

3. வேலை முடிந்தவுடனே கூலி கொடுக்கப்படவேண்டும். தொழிலாளி தன்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டவேலையை நிறைவானமுறையில் நிறைவேற்றவும் வேண்டும் எனும் பிரதான அம்சங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. தொழில் கொள்வோருக்கும் தொழில் தருநருக்கும் இடையில் ஏற்பட வேண்டிய இறுக்கமான பிணைப்பை இரு சாராரும் பாதிப்படையாத வகையில் ஹதீஸ்கள் இலகுவாக ஆக்கித்தருகின்றன.

உங்களுடைய சகோதர தொழிலாளிகளை உங்கள் கரங்களின் கீழ் அல்லாஹ் ஆக்கியிருக்கின்றான். அவ்வாறான தொழிலாளிகளுக்கு நீங்கள் சாப்பிடக்கூடியவற்றையே உணவாகவும், நீங்கள் உடுத்தக் கூடியவற்றையே உடையாகவும் கொடுங்கள். அவர்களது இயலுமைக்குமேல் அவர்களைக் கஷ்டப்படுத்தாதீர்கள். அவ்வாறு இயலுமைக்கு மேல் பளுவான காரியங்களைச் செய்யப்பணித்தால் நீங்களும் சேர்ந்து அவர்களுக்கு உதவிசெய்யுங்கள்.

('கிதாபுல் இத்க்' - புகாரி, முதலாம் பாகம்)

தொழிலாளியின் வியர்வை உலருமுன் அவனது கூலியைக் கொடுத்து விடுங்கள். (அறிவிப்பாளர் : உமர் (ரழி) அவர்கள் நூல் : இப்னுமாஜா, தபரானி)

இறுதி நாளில் இறைவனது கோபத்துக்கும் சாபத்துக்கும் ஆளாகக் கூடிய மூன்று நபர்கள் பற்றி அறிவிக்கும்போது அவர்களில் ஒருவராக 'ஒரு கூலியாளரிடம் இருந்து நிறைவான முறையில் வேலையை வாங்கிக் கொண்டு அவனது கூலியைக் கொடுக்க மறுத்தவன்' என அறிமுகப்படுத்தினுர்கள் ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் என்ருல், சமுதாயத்தின் நலிவுற்ற பகுதியினரின் பளுவைக் குறைத்து அவர்களுக்கு சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு எந்த அளவு முயற்சியும் கரிசனையும் எடுத்துக் கொண்டிருக்கின்ருர் என்பது புலனுகின்றது.

இஸ்லாத்தில் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் தன்மையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுகின்ற இக்கோட்பாடுகள் உலகில் பின்பற்றப்பட்டுவந்திருந்தால் தொழிற்புரட்சியோ, பிரெஞ்சுப் புரட்சியோ ஏற்பட்டிருக்கவேண்டிய தேவை இருந்திருக்காது. இன்று கூட உலகில் செயற்பட்டு வரும் தொழில் நீதிமன்றங்கள், சர்வதேச தொழில் தாபனங்கள் முதலியன ஏற்படவேண்டிய அவசியமுமிருக்கா.

## பெருமானுரின் குடும்ப வாழ்க்கை

பெருமானுரின் குடும்ப வாழ்க்கை பலதுறைகளில் பல்வேறு இன, மொழி, கலாச்சார மக்கள், இஸ்லாத்தைப் புரிந்து ஒரு மதத்தைப் பின்பற்றுவதனுல் ஏற்படும் கஷ்டங்கள் என்று தாம் நினைப்பவற்றினின்றும் அவர்களை விடுதலை செய்கின்றது.

ஆண் — பெண் உடலுறவு, குடும்பவாழ்க்கை என்பன மனித இயற்கையோடு சம்பந்தப்பட்டவொன்று. இவ்வுணர்வு இல்லாத ஒரு ஆணே, பெண்ணே இருப்பார் என்ருல் உண்மையில் அவர்கள் உணர்ச்சியற்ற நடைப்பிணங்கள் தான். எனவே, சமுதாயத்தின் ஆக்கத்துக்கும் எழுச்சிக்கும் அவர்களால் எந்தப் பங்களிப்பையும் செய்யமுடியாது. இது மனித உரிமைகளில் ஒன்ருகவும் இருக்கின்றது. சமுதாயத்தின் ஒருபகுதியினர் இவ்வுரிமையை அனுபவிப்பதில் இருந்து தடை செய்யப்படுகின்ருர்கள் என்ருல் அந்நாட்டில் அல்லது அச்சமூகத்தில் மனிதவுரிமை பேணப்படவில்லை என்பது தான் அர்த்தம். சட்டரீதியான உறவாகவும் இது அமையவேண்டும். பெருமானுரின் பலதாரமணம் முழுக்கமுழுக்க சிற்றின்பவேட்கைக்கு அப்பாற்பட்டது. விதவைகளுக்கு வாழ்வளிப்பது, சமுதாயத்தில் நிலவிவந்த அர்த்தமற்ற நம்பிக்கைகளைக்களைவது போன்ற இன்னேரன்ன அம்சங்களை அடித்தளமாகக் கொண்டதாக இவர்களது பலதாரமணம் அமைந்திருந்தாலும், மனித சமுதாயத்தைப் பொறுத்தவளவில் மனிதனின் இயற்கை உணர்ச்சிகளை அவர்கள் எவ்வளவு தூரம் மதித்திருக்கின்ருர்கள் என்பது தெளிவாகின்றது. பலதார

மணம் சட்டரீதியாக்கப்படவேண்டும் எனும் அளவுக்கு அதன் பக்குவமான பங்களிப்பை இன்றுமேற்குலகம் விரும்புகின்றது.

பிரெஞ்சுப் பாலியல் நிபுணரான டாக்டர் லேபொன் இவ்வாறு கூறுகின்றார்.

“ஆண் பெண் பாலாருக்கிடையே இயற்கையான உறவையுண்டு பண்ணும் பலதாரமுறைக்குத் திரும்புவது, விபசாரம், மேக நோய்கள், கருச்சிதைவு, சட்டவிரோதமாகப்பிறக்கும் குழந்தைகளின் துயரங்கள், ஆண், பெண் பாலாரின் சனத்தொகை வேறுபாட்டின் காரணமாக ஏற்படும் விவாகமாகாத கோடானுகோடிப்பெண்களின் துர்அதிர்ஷ்டம், சோரத்தனம், பொறாமை ஆதியாம் கெடுதிசளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகும்”. (இது தான் இஸ்லாம் - பக்கம் 197)

டாக்டர் ரொம்லண்டோ என்பவர் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கின்றார் :

“நாம் வசிப்பது போன்ற பூரணமற்ற உலகத்தில் பலதாரமுறை இயற்கையானதும் சட்டரீதியானதுமாகக் கருதப்படவேண்டும். பலதாரமுறையைப் பூரணமாக ஒழிப்பதற்கு முன் நாம் முதலாவதாக நமது நாகரீகத்தின் தன்மை முழுவதையும் மாற்றி அதன்பின் மனித சுபாவத்தைமாற்ற வேண்டும். இறுதியாக இயற்கையை மாற்றியமைக்கவேண்டும்”, (“பாலியல் வாழ்க்கை விசுவாசம் — பாலியலின் நவீனதத்துவார்த்தம்” — பேயர் லிமிட்டட், 1946, பக்கம் 136)

மேலே நாம் அவதானித்த இரு கூற்றுக்களும் மனித இயற்கைக்கு அளித்திருக்கக் கூடிய முக்கியத்துவத்தை விளக்கப் போதுமானவை என நினைக்கின்றேன். இன்றைய காலகட்டத்தில் இஸ்லாம் ஒன்றே சட்டரீதியாகப் பலதாரமணத்துக்கு அனுமதியளித்து மனித சுபாவத்தை மதிக்கின்றது. எனவே, தான் அதிகமான வேற்று மதத்தினர் கூடத்தமது சுபாவங்களுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கும் மதமாக இஸ்லாத்தைக் காண்கின்றார்கள்.

இனிப்பெருமானாரின் பலதாரமணத்தின் விளைவாக சமூகத்தில் ஏற்பட்ட உன்னத மாற்றங்களில் ஒன்றைக்கவனிப்போம்.

## மூடநம்பிக்கைக்கு சாவுமணி:

ஸைத் இப்னு ஹாரிதா என்பவர் பெருமானாரின் வளர்ப்பு மகன். இவர் ஸைனப் எனும் பெண்ணை மணமுடித்தார். ஆனால்

இவர்களுக்கிடையில் குடும்ப வாழ்க்கை இணக்கமானதாக அமைய வில்லை. இதன் காரணமாக ஏற்பட்ட விளைவுகள் பற்றி அல்-குர்ஆன்,

அல்லாஹ் எவருக்கு அருள் புரிந்து, நீரும் அவர் மீது கருணை கூர்ந்தீரோ, அவரிடத்தில் நீர் அல்லாஹ்வுக்குப் பயந்து "(ஜைனபு ஆகிய) உம்முடைய மனைவியை (விவாக பந்தத்தில் இருந்து நீக்காது) உம்மிடமே நிறுத்திக் கொள்ளும்" என்று கூறியபோது அல்லாஹ் வெளியாக்க இருந்ததை, மனிதர்களுக்கு அஞ்சி, நீர் உம்மனத்தில் மறைத்தீர். நீர் பயப்பட மிகத் தகுதியுடை யோன் அல்லாஹ் தான். (மனிதர்களல்லர்) ஜைது (என்பவர் மனம்மாறித் தன்மனைவியாகிய) அவளைத் தலாக்குக் கூறி விட்ட பின்னர் நாம் அவளை உமக்குத் திருமணம் செய்து வைத்தோம். ஏனென்றால் விசுவாசிகளால் (சுவீகரித்து) வளர்க் கப்பட்டவர்கள் தங்கள். மனைவிகளைத் தலாக்குக் கூறிவிட்டால் (அவர்களை வளர்த்த) விசுவாசிகள், அப்பெண்களைத் திருமணம் செய்து கொள்வதில் யாதொரு தடையிருக்கக் கூடாதென்பதற் காக (இது) நடைபெற்றே தீர வேண்டிய அல்லாஹ்வுடைய கட் டளையாக இருந்தது. (33:37) எனக் குறிப்பிடுகின்றது. வில்லியம்

மூர் போன்ற சரித்திராசிரியர்கள் இந்நிகழ்ச்சியைப் பிழையான ஒரு கருத்தில் அணுகி இருக்கின்றார்கள். ஸைது (ரழி) அவர்களுடன் ஸைனப் அவர்களுக்கு வாழ்க்கை சரிப்பட்டு வராது, என்பதை அறிந் திருந்தும் மணமுடித்து வைத்தது ஒரே முறையில் அவர்களையடை வதைப்பற்றிப் பலரும் பலவாறு பேசுவர். ஸைத் அவர்களால் விவாக ரத்துச் செய்யப்பட்டதன் பின் அடைவது ஓரளவு நியாயமாக இருக் கும் எனும் சிற்றின்ப ஆசையினால் எனக் கூறுகின்றார். இது உண் மைக்கு முழுக்க முழுக்க மாற்றமான கருத்தாக இருப்பதோடு ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் ஒரு அளவுகோல் வைத்துக் கொள் வதன் அவசியத்தை உணராத அவர்களது அறியாமைக்கும் தக்க சான் றாக இருக்கின்றது. சுவீகாரம் செய்யப்பட்டுத் தன்னால் வளர்க்கப் பட்ட மகனால் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்ணை மறுமணம் செய்யலாகாது எனும் அன்றைய அரேபியர்களின் மூடநம்பிக்கைக்குச் சாவுமணி அடிப்பதற்காகவே பெருமானார் அவர்கள் இவ்வாறு செய் தார் எனும் உண்மை வெளிப்படுத்தப்படும்போது, அர்த்தமற்ற சமூகத்தடைகளை கிள்ளியெறிந்து இஸ்லாத்தை இலகுபடுத்துவதில் அவர்களின் பங்களிப்பை உணரக்கூடியதாக இருக்கும்.

## இஜ்மாஉம், கியாஸும்

இனி இஸ்லாமிய சட்டத்தின் கடைசி இரண்டு மூலாதாரங்களான இஜ்மாவும், கியாஸும் இஸ்லாமிய சட்டங்களை, கொள்கை விளக்

கங்களை இலகுபடுத்தித் தருவதில் எவ்வாறு தமது பங்களிப்பைச் செலுத்தியிருக்கின்றன என்பது பற்றிக் கவனிப்போம்.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் நேரடியாக முஸ்லிம்கள் தமது பிரச்சினைகளுக்கு குர்ஆன், ஹதீஸ் மூலமாக விளக்கங்களைக் கண்டெடுத்துத் தீர்வுகளைப் பெற்றுக் கொண்டனர். இரண்டு நூற்றாண்டுகள் கழிவதற்குள்ளாக குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் சட்டங்களைத் தொகுத்துக் கொடுக்கும் ஸஹாபாக்களின் மறைவும் இஸ்லாமியப் பரம்பலின் காரணமாகப் புதிய பிரச்சினைகள் தோன்றியதும் மக்களை இஜ்மாவின்பால் அதிகமாக நம்பிக்கை வைக்கத் தூண்டியது. எனவே இஸ்லாமிய சட்டக்கலையின் மூன்றாவது அடிப்படை எனும் வகையில் இஜ்மாஉ பெற்றுவந்த படிப்படியான முன்னேற்றத்தை இவ்வாறு வகைப்படுத்தலாம்,

1. பெருமானார் (ஸல்) அவர்களது காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஷரீஅத் சட்டங்கள். இவை அடிப்படையானதும் கருத்து முரண்பாடற்றதுமாகும்.

2. பெரிய ஸஹாபாக்கள் காலத்தில ஏற்படுத்தப்பட்டவை. இக்காலகட்டம் குலாபாஉர்ருசிதூன்களது காலத்துடன் முற்றுப் பெறுகின்றது. சட்டவல்லுனர்களாக, நான்கு கலீபாக்களும் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப், அபூதர்தா, அபூமூஸாஅல்அஷ்அரீ, உபை இப்னு கஅப், மஆத்இப்னுஜபல், அம்மார்இப்னு யாஸிர், ஹுதைபா (ரழி) போன்றோர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

3. சிறிய ஸஹாபாக்கள், அவர்களைத் தொடர்ந்து வந்த தாபிஈன்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை. இக்காலகட்டம் ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டுடன் முடிவடைகின்றது. இவர்களில் பிரபல்யமானோராக மதீனாவில் ஸயீத்-இப்னு-முஸையப், அபூபக்ர் இப்னு அப்துர் ரஹ்மான், காஸிம், அப்துல்லாஹ், உர்வத் ஸுலைமான், காரிஜா போன்றோர் விளங்கினர்,

4. "பிக்ஹ்" - இஸ்லாமிய சட்டவறிவு ஒருகலையாக வளர்ந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை. மார்க்கத்தின் தலைமைத்துவத்தை ஏற்ற சட்ட அறிஞர்கள் அதிகமாக இக்காலத்தில் இதில் முக்கிய கவனம் செலுத்தினர். இவர்களது மாணவர்களால் கூட இக்காலத்தில் இக்கலை வளர்க்கப்பட்டது. இக்காலகட்டம் ஹி - மூன்றாம் நூற்றாண்டோடு முடிவடைகின்றது.

5. இமாம்களினால் வகுக்கப்பட்ட தீர்ப்புக்களைப் பற்றித் தர்க்க ரீதியாக ஆராய்ந்து தீர்ப்புக்கள் வழங்கப்பட்டகாலம். இக்கால கட்டத்திலேயே 'பிக்ஹ்' தொகுப்புக்களும் அதிகமாகத் தோன்றின. அப்பாஸியாக்களின் ஆட்சி முடிவுடன் இக்காலகட்டம் முற்றுப்பெறுகின்றதெனினும், எகிப்தைப் பொறுத்தவளவில் இன்னும் சிறிது காலத்தை உள்ளடக்கியதாகக்காணப்பட்டது.

6. இதிலிருந்து இற்றை வரையான காலகட்டம்.

குர்ஆனிலோ, ஹதீஸிலோ மாற்றங்களை, கூடுதல், குறைவுகளை ஏற்படுத்தும் அதிகாரம் எவருக்கும் இல்லை. இஜ்மாஉம் கியாஸும் இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களாக இருப்பதால் மாறிவரும் உலகின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைத் தரக்கூடிய வாய்ப்புக்கள் இஸ்லாத்தில் உண்டு. இஸ்லாத்தின் விரிந்து கொடுக்கும் தன்மைக்கும், இஸ்லாத்தினுள் புதியன புகுதப் பார்க்கும்போது அவற்றை எந்தளவில் அனுமதிக்கவேண்டும் என்பதில் ஒருவரையறையேற்படுத்திக் கொள்வதற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இமாம் ஷபி அவர்களிடம் குர்ஆனில் இஜ்மாவுக்கு ஆதாரம் இருக்கின்றதா எனக் கேட்கப்பட்டபோது பின்வரும் அல்-குர்ஆன் வசனத்தை மேற்கோள் காட்டி ஆதாரம் இருப்பதாகக் கூறினார்.

''நேரானவழி தனக்குத்தெளிவானதன் பின்னரும் எவன், (அல்லாஹ்வுடைய) இத்தூதரை விட்டுப் பிரிந்து, விசுவாசிகளின் வழியல்லாததில் செல்லுகின்றானோ அவனை. நாம்அவன் செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு. (பின்னர்) அவனை நரகத்தில் சேர்த்து விடுவோம். அது செல்லுமிடங்களில் மிகக் கெட்டது''

(4:115) இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'விசுவாசிகளின் வழி' என்பது இஜ்மாவையே குறிக்கின்றது என அவர் அபிப்பிராயப் படுகின்றார். மேலும் 'எனதுதோழர்கள்' வானத்தில் மின்னக்கூடிய நட்சஸ்த்திரங்களைப் போன்றோர்; அவர்களில் எவரைப்பின்பற்றினும் நீங்கள் வழிதவறமாட்டீர்கள், 'எனது சமூகத்தினர் வழிகேட்டில் ஒன்றுபடமாட்டார்கள்'' போன்ற ஹதீஸ்களும் இஜ்மாவின் அவசியத்தையே வலியுறுத்துகின்றன என அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இஸ்லாமிய சமுதாய அமைப்பில் புதிய பிரச்சினைகள் தோன்றும் போது அவற்றினால் சமுதாயம் அல்லற்படாது சுமுகமாகத் தீர்த்து வைத்து இஸ்லாத்தை இலகுவில் பின்பற்றக்கூடிய ஒரு நடைமுறை மார்க்கமாக ஆக்குவதற்கு இமாம்கள் ஒன்று சேர்ந்து எடுக்கும்

தீர்மானங்களே இஜ்மாஉ எனப்படுகின்றது. அவர்களது தீர்மானம் குர்ஆன், ஹதீஸ் நல்லோர்களான முன்னோர்களின் முன்மாதிரிகளுக்கு முரண்படாது இருக்க வேண்டும் எனும் வரையறையையும் வைத்துக் கொள்வார்கள். ஒரு இமாமினது முடிவை ஏனையோர் வாய்மூடி அங்கீகரித்தலே இஜ்மாஉ எனும் கருத்து ஹனபிய்யாக்களிடம் காணப்படுகின்றது. இது 'இஜ்மாஉஸ்ஸுகூதி' எனப்படுகின்றது. மாலிக் இமாமிடத்தில் இது ஒரு கூட்டுத் தீர்ப்புஎனக் கொள்ளப் படுகின்றது. இமாம் ஷாபி அவர்களின் கருத்துப்படி இஜ்மாவின் உண்மைத் தன்மையானது முன்னோரின் தீர்ப்பையொட்டியதாக அமையும் போது தான் ஏற்படுகின்றது என்பதாகும்.

அல்-குர்ஆன் அறிவுகள் பாரசீகம், இராக் முதலிய பகுதிகளில் பரவியதையடுத்து பிக்ஹு கலையில் தேர்ச்சியுடைய பலர் தோன்றினர். புதிதாக இஸ்லாத்தில் இணைந்த இப்பகுதிகளில் ஹதீஸ்கள் அதிகமாகப்பரவுவதற்கு வாய்ப்பேற்படவில்லை. மார்க்க சட்டங்களை வெளியிடுவதில் "கியாஸ்" — ஒற்றுப்பிடித்தல் முறைக்கு இங்கே செல்வாக்குக்காணப்பட்டது. குர்ஆன், ஹதீஸில் ஒரு பிரச்சினைக்குக் கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்பை, அதையொத்த பிரச்சினைகளுக்கும் விரிவு படுத்துவதே கியாஸ். குர்ஆனிலும், ஹதீஸிலும் அபார நம்பிக்கை வைத்திருந்த மதீனா மக்களிடத்தில் ஆரம்பத்தில் கியாஸுக்கு ஆதரவு இருக்கவில்லை. பக்தாதின் கலீபாவாக இருந்த மன்ஸூர், மதீனா மக்களைத் தலைகுனிய வைக்கவேண்டும் எனும் நோக்கில் இராக்கில் தோன்றிய 'கியாஸ்' முறைக்கு ஆதரவு கொடுத்ததுடன் இதில் முன்னணியில் நின்ற கூபாவின் அபூஹனீபா நுஃமானியைத் தனது அரசவைக்கு அழைத்து கௌரவித்தார். அபூஹனீபாவும் அறபிகளை வெறுப்பவராக இருந்தார் எனும் கருத்தை இப்னு கல்லிகான் குறிப்பிடுகின்றார்.

இவ்விரு சட்டமூலாதாரங்களினதும் தோற்றம், வளர்ச்சியின் காரணமாக இஸ்லாத்தைப்பின்பற்றுவது இலகுவாக்கப்பட்டதுடன் 'மத்ஹபு' களும் தோன்றிப் பாமர மனிதனை நேரிய பாதையில் சீராக வழி நடாத்திச் செல்லக்கூடிய நிலையேற்பட்டது.

மத்ஹபுகளின் தோற்றத்தின் காரணமாகப் பெருமானாரின் ஸுன்னத்துக்கள் எனப்படும் வழி முறைகள் அனைத்தும் முழுமையாக உலகோர் முன் சமர்ப்பிக்கப்படமுடிந்ததோடு பாமர முஸ்லிம் ஒருவனுல் பெருமானாரின் வழிமுறைகளைப் பின்பற்றுவதில் ஏற்படக் கூடிய சிக்கல்கள் தவிர்க்கவும் பட்டன. இஸ்லாமிய சட்டங்களைத் தொகுத்துத் தருவதில் இமாம்கள் மேற்கொண்ட பாரிய முயற்சியின் காரணமாகவே மத்ஹப்புகள் தோன்றின, இனி இவர்கள் குர்ஆன்

ஹதீஸை அடிப்படையாக வைத்து எவ்வகையில் சுதந்திரமாக ஒவ் வொருவரும் சிந்தித்து முடிவுகளுக்கு வந்திருக்கின்றனர் என்பது பற் றிய சில உதாரணங்களைக் கவனிப்போம்.

பிரயாணிக்குரிய கஸ்ருத் தொழுகை - சுருக்கித் தொழல் சம் பந்தமாகப் பிரயாண தூரத்தை இமாம் அபூஹனீபா 48 மைல்கள் எனவும் இமாம் ஷாபி 56½ மைல் எனவும் கணக்கிட்டுள்ளனர். ஹனபிமத்ஹபின்படி பிரயாணம் முற்றுப்பெறாத நிலையில் ஒருரில் 15 நாட்களுக்கு குறையத் தங்க வேண்டியேற்பட்டால் தொடர்ந்து கஸ்ரு செய்யலாம். ஷாபி இமாமின் கருத்துப்படி இக் காலவளவு கூடியபட்சம் 4 நாட்களாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவனது குறித்த காரியம் நிறைவேறாத சந்தர்ப்பத்தில் தொடர்ந்து 18 நாட்களுக்கு இவ்வாறு செய்யலாம். ஹனபிமத்ஹபில் ஒழுவின் பர்ளுகள் நான்கு; அவை முறையே,

(1) அகலத்தில் நெற்றி நாடிக்குழி நீளத்தில் காதின் இரு சோணைகளுக்கிடையே முகத்தைக் கழுவுதல்.

(2) முழங்கை வரை இரு கைகளையும் கழுவுதல்.

(3) தலையில் காற்பகுதியை மஸ்ஹு செய்தல்.

(4) கரண்டையுட்பட இருகால்களையும் கழுவுதல், ஷாபி மத் ஹபில் இடம்பெற்றுள்ள நிய்யத்துச் செய்வது தர்தீபாக, — ஒழுங்கு முறை தவறாது செய்வது ஆகிய இரண்டு பர்ளுகளும் இதில் இடம் பெறவில்லை. ஜனாஸாத் தொழுகையில் ஹனபிமத்ஹபின்படி ஒரு முறைதான் கையையுயர்த்தித் தக்பீர் கட்டவேண்டும். ஆனால் ஷாபி மத்ஹபில் நான் குதக்பீர்களும் இவ்வாறு செய்யப்படவேண்டும். அடிப்படையில் ஒற்றுமையும் சில்லறை விடயங்களில் இமாம்களுக் கிடையே இதுபோன்ற இன்னும்பல கருத்து வித்தியாசங்கள் காணப் பட்டாலும் சமுதாயம் அவற்றின் மூலம் நன்மையேதான் அடைந் துள்ளன. தமக்கு இலகுவான ஒருமத்ஹபைப் பின்பற்றும் பூரண சுதந்திரம் முஸ்லிம்களுக்கு உண்டு.

முடிவாக இஸ்லாத்தின் சட்ட மூலாதாரங்கள் நான்கும் மனித சுதந்திரத்திற்கும் இயற்கை சுபாவங்களுக்கும் மதிப்பளித்து இஸ் லாமிய வாழ்க்கை முறையை இலகுபடுத்துவதில் கரிசனை காட்டி யுள்ளன என்பது உண்மையே.

# 5

# மனிதன்! அவன் யார்? அவனது பெறுமதி என்ன?

## அல்-குர்ஆன் நிழலில் ஒரு கண்ணோட்டம்

இறைவனை அறிவதற்கு முதற்படி மனிதன் தன்னை அறிவது, தனது பெறுமதியை அறிவது. மனிதன் தன்னைப்பற்றி அறிவது அவனிடம் மனவலிமையும் திடசங்கற்பத்தையும் ஏற்படுத்த வல்லது. அமரர்களைவிடவும் உயர்ந்த அந்தஸ்தில் படைக்கப் பட்டிருக்கும் மனிதன் மிருகத்தைவிடத் தாழ்ந்து போகும் ஒரு நிலையும் இருக்கின்றது. இவ்வாறான நிலைமை தனக்கு ஏற்படாமல் ஒவ்வொரு மனிதனும் தனக்குள் மனிதத்தன்மையைக் கண்டு வாழ முற்படுதல் மூலமே அல்லாஹ்வின் பிரதிநிதியாக இவ்வுலகில் செயற்பட்டு மனிதப்பிறப்பின் பெறுமதியைக் கண்ணாரக் கண்டு கொள்ளலாம்.

அல்-குர்ஆனின் முதல் வார்த்தையான இக்ரஃ — இதுவீராக எனும் பதம் பழைமையையும் புதுமையையும் தொடர்புபடுத்தும் பாலமாக அமைந்துவிட்டது. பின்னைய மனித இனத்தை முன்னைய மனித இனத்தோடு இணைப்பதாகவும் அமைந்துவிட்டது. முதல் மனிதரான ஆதம் (அலை) அவர்களின் தோற்றம் ஆரம்பத்தில் இருந்தே அறிவு, சிந்தனை, ஆராய்ச்சி என்பனவற்றோடு தொடர் புடையதாக இருந்தது. இதே போன்று அல்லாஹ்வின் கடைசி ரிஸாலத்தான அல்-குர்ஆனின் தோற்றப்பாடும் அறிவு, சிந்தனை, ஆராய்ச்சி என்பனவற்றோடு தொடர்புடையதாக இருந்தது. அல்-குர்ஆனின் கடைசி வசனங்கள் கூறும்.

"(நபியே!) இன்று நாம் உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்குப் பூர்த்தியானதாக ஆக்கிவிட்டோம்; என்னுடைய அருட் கொடையை உங்கள் மீது சம்பூரணமாக ஆக்கிவிட்டோம்; இஸ்லாத்தை உங்களுக்கான மார்க்கமாகப் பொருந்திக்கொண் டேன்."

எனும் கருத்து இப்பூமியில் அல்லாஹ்வின் கிலாபத் நிலைநாட்டப் படுவதற்காக ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல் பெருமானார் (ஸல்) அவர்கள் ஈறாக மேற்கொள்ளப்பட்ட அறிவுரீதியான முயற்சி களையும், பிரயாசைகளையும் புலப்படுத்தக்கூடியன.

மனிதன் மண்ணால் படைக்கப்பட்டவன். பலவீனம் அவனது உடன் பிறந்த தன்மை. எனவே, மனிதனது சிறப்பு சடரீதியான உரு வமைப்பில் தங்கியிருக்கவில்லை. மனிதனது பலவீனத்துக்கப்பால் அறிவுரீதியான சக்தி ஒளிந்திருப்பதை ஷைத்தான் உணர்ந்து கொள்ளத்தவறியதன் காரணமாகவே அல்லாஹ்வோடு முரண்பட்டுக் கொண்டான். ஆதம்(அலை) அவர்களைப்படைத்து அவர்களுக்கு சிரம் பணிந்து ஸுஜூது செய்யும்படி அவர்களைப் பணித்த வரலாறும் ஷைத்தான் அல்லாஹ்வின் இவ்வுத்தரவோடு முரண்பட்டுக் கொண்ட சம்பவமும் அல்-குர்ஆனில் பின்வருமாறு மிகவும் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

"நாம் மலக்குகளை நோக்கி, "ஆதமுக்கு நீங்கள் பணி (ந்து 'ஸுஜூது' செய்) யுங்கள்" எனக்கூறிய போது அவர்கள் (யாவரும்) 'ஸுஜூது' செய்தார்கள். இப்லீஸைத்தவிர. அவனோ பெருமை கொண்டு விலகி (நம்முடைய கட்டளையை) நிராகரிப் பவனாகிவிட்டான்" (2:34)

தான் ஆதமுக்கு ஸுஜூது செய்ய மறுத்ததற்கான காரணத்தை விளக்கும்போது, 'நான்நெருப்பால் படைக்கப்பட்டவன்; அவரோ களி மண்ணினால் படைக்கப்பட்டவர். நான் அவரைவிட சிறந்தவன். என இப்லீஸ் விடை கொடுத்தான். ஆதம் (அலை) அவர்களின் சடரீதியான உடலமைப்பின் ஆக்கப் பொருளை மாத்திரம் கவனத் திற்கொண்டதன் காரணமாக ஷைத்தான் இவ்விடத்தில் தவறி விட்டான். அறிவுரீதியான மனிதனது பலம் மகத்தானது எனும் உண்மையை அவன் உணர்ந்துகொள்ளத்தவறினான். இதே போன்று ஆதம் (அலை) அவர்களைப்படைப்பதற்கு முன் அவர்களைப் படைப்பது தொடர்பாக அல்லாஹ் மலக்குமார்களிடம் ஆலோசனை செய்த வரலாறு அல்-குர்ஆனில் தெளிவாக இடம் பெற்றுள்ளது. இங்கே மனிதனின் அறிவுரீதியான ஆற்றல் மலக்குமார்களுக்கு வெளிப்

படுத்திக்காட்டப்படும் பாங்கு மிக அருமையானது. மனிதனது அறிவுத்திறனுக்கு முன் மலக்குகள் தோற்றுப்போவது மிக அருமையாக எடுத்தாளப்பட்டிருக்கின்றது. இனி அவ்வசனங்களுக்கு வருவோம்.

''(நபியே!) உமதிறைவன் மலக்குகளைநோக்கி, ''நான் பூமியில் (என்னுடைய) பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக அமைக்கப் போகிறேன்'' எனக் கூறிய சமயத்தில் (அதற்கு) அவர்கள், ''(பூமியில்) விஷமம் செய்து இரத்தம் சிந்தக்கூடிய (சந்ததிகளைப் பெறும்) அவரை, அதில் (உன்னுடைய பிரதிநிதியாக) ஆக்குகிறாயா? நாங்களோ, உன்னுடைய பரிசுத்தத்தன்மையைக் கூறி, உன்னுடைய புகழைக்கொண்டு உன்னைத்துதி செய்து கொண்டிருக்கின்றோம்'' என்று கூறினார்கள். (அதற்கு இறைவன்) ''நீங்கள் அறியாதவற்றை யெல்லாம் நிச்சயமாக நான் நன்கறிவேன்'' எனக்கூறினான். (2:30)

பின்பு (ஆதமைப்படைத்து) ஆதமுக்கு (பூமியிலுள்ள) எல்லாப் (பொருள்களின்) பெயர்களையும் (அவற்றின் தன்மைகளையும்) கற்றுக்கொடுத்து, பின்னர் அவற்றை (அந்த) மலக்குகளின் முன் பாக்கி ''(மலக்குகளே! ஆதமுக்கு என்னுடைய பிரதிநிதியாவதற்குரிய தகுதியில்லையென்று கூறினீர்களே! இதில்) நீங்கள் உண்மையானவர்களாயிருந்தால், (இதோ உங்கள் முன்னிருக்கும்) இவற்றின் பெயர்களை நீங்கள் எனக்கறிவியுங்கள்'' எனக்கூறினான் (2:31)

(அவ்வாறு அறிவிக்கமுடியாமல்) அவர்கள் (இறைவனை நோக்கி) ''நீ மிகத்தூய்மையானவன். நீ எங்களுக்கு அறிவித்தவற்றைத் தவிர (வேறொன்றையும்) நாங்களறியோம். நிச்சயமாக நீயே, நன்கறிந்தோனும் ஞானமுடை யோனுமாயிருக்கின்றாய்'' எனக் கூறினார்கள். (2:32) (பின்னர் இறைவன்) ''ஆதமே நீர் அவற்றின் பெயர்களை அவர்களுக்கு அறிவியும்'' எனக்கூறினான். அவர் அவர்களுக்கு அவற்றின் பெயர்களை அறிவித்தபோது, அவன் (மலக்குகளைநோக்கி) பூமியிலும் வானங்களிலும் (உங்களுக்கு) மறைந்திருப்பவைகளை நிச்சயமாக நான் நன்கறிபவன் என்று நான் உங்களுக்குக் கூறவில்லையா? ஆகவே நீங்கள் (ஆதமைப்பற்றி) வெளியிட்டதையும் மறைத்துக் கொண்டதையும் நிச்சயமாக நான் நன்கறிவேன்'' என்றான். (2:33)

மனிதனுக்கென்றே சொந்தமாக்கக் கொடுக்கப்பட்ட அறிவு எனும் இவ்வற்புதசக்தியைக் கண்ணியப்படுத்தும் நோக்கத்துடனேயே மலக்குமார்களை ஆதம் (அலை) அவர்களுக்கு சிரம் பணியும்படி

வேண்டிக்கொண்டான் அல்லாஹ். இவ்வற்புதமான சக்தி மண்ணை ஆட்கொள்ளக்கூடியது. இதுவே எக்காலத்திலும் மனிதசமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் எழுச்சிக்கும் காரணமாக அமைந்தது. மேலும் ஆரம்பகாலந்தொட்டே தூதுத்துவங்களின் அடிப்படையாகவும் சோதனைகளையும் வேதனைகளையும் களைந்தெறியும் சாதனமாகவும். மனிதனுக்குள்ளே மனிதத்துவத்தை மட்டிடும் கருவியாகவும் அறிவு ஒன்றுதான் இருந்து வந்துள்ளது. இதை மனிதன் பயன்படுத்து மாற்றைக்கொண்டே வெகுமதிகளும் வேதனைகளும் மனிதனுக்கு மறுமையில் அளிக்கப்பட இருக்கின்றன. இதை ஒரு அமானிதமாக அல்லாஹ் குறிப்பிடுகிறான்:

*நிச்சயமாக (நம்முடைய) பொறுப்பைச் சுமந்து கொள்வீர்களா என்று நாம் வானங்கள், பூமி, மலைகள் முதலியவைகளிடத்தில் வினவினோம். அதற்கு அவை அதனைப்பற்றிப்பயந்து. அதனைச் சுமந்து கொள்ளாது விலகிவிட்டன. அத்தகையதைத்தான் மனிதன் சுமந்து கொண்டான்'' (34:72)*

மனிதன் வெறுமனே ஒரு மிருகமாக இருந்திருந்தால் இவ்வுயரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கமாட்டான். அவனால் ஏற்றுத் தாங்கிக் கொள்ளமுடியாது. எனினும் அவன் ஆத்ம சக்தியும் புத்தி நுட்பமும் கொடுக்கப்பட்டவனாக இருப்பதினாலேயே இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான். எனவே மனிதன் தனது அறிவைப் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்து ஆத்மார்த்த ரீதியாக அமரர்களின் அந்தஸ்த்தை அல்லது அதற்குமேல் செல்லக்கூடியவனாக இருக்கின்றான். இதே போன்று மிருகங்களைவிடத் தாழ்ந்த நிலைக்கும் போகக் கூடியவனாக இருக்கின்றான். நன்மையான வழியும் தீமையான வழியும் மனிதனுககு அல்லாஹ்வால் அறிவித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதேபோன்று தேர்வுச் சுதந்திரமும் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதையே பின்வரும் அல்குர்-ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

*'' (நன்மை தீமையின்) இரு வழிகளையும் நாம் அவனுக்குப் பிரித்தறிவித்தோம்'' (90:10)*

*(நபியே!) நீர் கூறும்: ''(முற்றிலும்) உண்மையான இ(வ்வேதமான)து உம் இறைவனால் அருளப்பெற்றது. விரும்பியவர் இதை விசுவாசிக்கலாம். விரும்பாதவர் நிராகரித்து விடலாம். (ஆனால் இதைநிராகரிக்கும்) அக்கிரமக்காரர்களுக்கு நிச்சயமாக நாம் நரகத்தைத் தான் சித்தப்படுத்தியுள்ளோம். அந்நரகத்தின் ஜுவாலைகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும் அவர்கள் (தண்ணீர்கேட்டு) அபயமிட்டால் காய்ந்து உருகிய செம்பைப் போன்ற நீரே அவர்களுக்குக் கொடுக்கப்படும். (அவர்கள் அதனைக் குடிப்பதற்கு*



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை 85177
யாழ்ப்பாணம்.

முன்னதாகவே) அது அவர்களுடைய முகத்தைச் சுட்டுக் கருக்கி விடும். (அன்றி) அது மிக்க அருவருப்பான குடிப்புமாகும். அவர்கள் இளைப்பாறும் இடம் மிகக் கெட்டது. (18 : 29)

(எனினும்), நிச்சயமாக எவர்கள் (இவ்வேதத்தை) விசுவாசங் கொண்டு நற்கருமங்கள் செய்கிறார்களோ அத்தகைய நன்மை செய்வோரின் கூலியை நிச்சயமாக நாம் வீணாக்கிவிடுவதில்லை. (18 : 30)

இவர்களுக்கு நிலையான சுவனபதிகள் உண்டு. அவற்றில் நீரருவிகள் சதா ஓடிக் கொண்டே இருக்கும். அங்கு அவர்களுக்குப் (பரிசாகப்) பொற்கடகம் அணிவிக்கப்படும். மெல்லியதாகவோ அழுத்தமானதாகவோ (அவர்கள் விரும்பிய) பசுமையானபட்டாடைகளை அணிவார்கள். அங்குள்ள ஆசனங்களிலுள்ள தலையணைகள் மீது சாய்ந்து (மிக்க உல்லாசமாக) இருப்பார்கள். இவர்களுடைய கூலி மிக்க நன்றே. (18 : 31)

ஆரம்பத்திலிருந்தே வெற்றியின் பாதை எது என்பதையும் ஹிதாயத்தின் வழி எது என்பதையும் அல்லாஹ் மனிதனுக்கு அறிவித்துக் கொடுத்துள்ளதோடு அவனது இயற்கைத் தன்மைகளோடு இரண்டற கலந்ததாக இறை விசுவாசத்தையும் ஆக்கி இருக்கின்றான். இதையே அல்-குர்ஆன்

"(நபியே) நீர் உம்முடைய முகத்தை (இஸ்லாமிய) மார்க்கத்தின்பாலே முற்றிலும் (திருப்பி) நிலை நிறுத்தி விடுவீராக. அல்லாஹ் மனிதர்களைச் சிருஷ்டித்த வழியே அவனுடைய இயற்கை வழியாகும். அல்லாஹ்வின் சிருஷ்டியில் எத்தகைய மாற்றமும் கிடையாது. இதுவே (சரியான) நிலையான வழியாகும். எனினும் மனிதரில் பெரும்பாலோர் (இதனை) அறிந்துகொள்ள மாட்டார்கள் எனக்குறிப்பிடுகிறது." (30 : 30) மேலும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை அங்கீகரிக்கும் சாட்சியாளர்களாகவும் ஆரம்பத்திலேயே மனிதர்களை அல்லாஹ் ஆக்கி வைத்தான். இதை அல்-குர்ஆன்" (நபியே) உமதிறைவன் ஆதமுடைய மக்களாகிய) அவர்களுடைய முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளை வெளியாக்கி அவர்கள் தம்மையே அவர்களுக்குச் சாட்சியமாகவும் வைத்து (அவர்களை நோக்கி) "நான் உங்கள் இறைவனல்லவா?" என்று கேட்டதற்கு "மெய்தான்! (அவ்வாறே) நாங்கள் சாட்சியம் கூறுகிறோம் என்று அவர்கள் கூறியதை (நீர் அவர்களுக்கு) ஞாபகமூட்டும். ஏனென்றால் (இதனை ஒருவரும் எங்களுக்கு ஞாபக மூட்டாததனால்) நிச்சயமாக நாங்கள் இதனை (மறந்து) விட்டுப் பாராமுகமாகியிருந்தோம்." என்று

மறுமை நாளில் அவர்கள் சொல்லாமல் இருப்பதற்காகவும்'' (7 : 173)

எனினும் மனிதன் அவனது உள்ளத்தின் ஆழத்தில் புதையுண்டு கிடக்கும் இவ்வுணர்வை — இவ்வியற்கைக் கொடையை மறந்திருக்கின்றான். மனிதன் பூரணத்துவம் பெறுவதற்குரிய ஒரேயொரு வழி இதுவாக இருந்தும் அதிகமானோர் இதை லட்சியம் செய்யாமல் இருக்கின்றனர். ஆதம் (அலை) அவர்களையே இதற்கு சிறந்த ஒரு உதாரணமாக அல்-குர் ஆன் வர்ணிக்கின்றது.

''(வெகுகாலத்துக்கு) முன்னே ஆதமிடம் நிச்சயமாக நாம் வாக்குறுதி வாங்கியிருந்தோம். எனினும் (அதனை) அவர் மறந்து விட்டார். ஆனால் அதற்கு மாறுசெய்யும் எண்ணத்தை நாம் அவரிடம் காணவில்லை''(20 : 115)

இம்மறதியின் விளையாக, ''ஆதம் (இப்லீஸின் வலையில் சிக்கி) தன் இறைவனுக்கு மாறு செய்துவிட்டார்.'' (20:121) எனினும் ஆதம் (அலை) அவர்கள் புரிந்த தவறு ஷைத்தான் புரிந்த தவறில் இருந்து கணிசமான அளவு வேறுபடுகின்றது. ஷைத்தான் தனது தவறில் உறுதியாக இருந்தான். ஆனால் ஆதம் (அலை) அவர்களும் மனைவியும் தங்களது தவறையுணர்ந்து மனவேதனையடைந்து எங்கள் இறைவனே எங்களுக்கு நாங்களேதீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரியாவிடில் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம். (7 : 24) என்று கூறினர்.

இப்பிரார்த்தனையின் பிரதிபலனாக, ஆதம் சில சொற்றொடர்களை தன் இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்டார். அவைகளைக் கொண்டு அவரை அல்லாஹ் மன்னித்துவிட்டான்'' (2:37) மனிதனுடைய இயற்கையோடு ஒட்டிப்பிறந்த இறைவழிபாட்டில் இதுவரை சுவர்க்கத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக்கொண்டிருந்த ஆதம் (அலை) அவர்களுக்குத்தான் செய்த தவறின் காரணமாகப் பூமிக்குவர ஒருசந்தர்ப்பம் கிடைத்ததுடன் உலக வாழ்க்கைப் போராட்டங்களுக்கு மத்தியில் இறைவழிபாட்டில் இன்பம் காணும் உயரிய பண்பை இப்பூவுலகில் எடுத்துக்காட்டவும் முடிந்தது. அந்நேரிய வழிபற்றி அல்லாஹ் குறிப்பிடும் போது.

'நாம் கூறினோம். ''நீங்கள் யாவரும் இதிலிருந்து இறங்கிவிடுங்கள். என்னிடமிருந்து உங்களுக்கு (என்னுடைய தூதர்கள் மூலம்) நேர்வழி நிச்சயமாக வரும். (உங்களில்) எவர்கள் என்னுடைய (அந்) நேர்வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு யாதொரு

பயமுமில்லை. அவர்கள் துக்கப் படவும் மாட்டார்கள். (2:38)

எனவே இஸ்லாத்தின் நேரான பாதையை ஒருவன் பின்பற்றும் போது உண்மையில் அவன் புதியவொன்றைப் பின்பற்றுகின்றான் என்பது கருத்தல்ல. அவனது அமைப்பின் அசல் வடிவத்தில் மறைந்து கிடக்கும் இயற்கையுணர்வை திரும்பவும் வரவழைத்துக் கொள்கின்றான் என்பது தான் அர்த்தம். அல்-குர்ஆன் உட்பட இவ்வுலகில் அல்லாஹ்வால் தோற்றுவிக்கப்பட்ட எல்லாத் தூதுத்துவங்களும் இவ்வுண்மையைத்தான் பறைசாற்றி நின்றன. இதன் காரணமாகவே அல்-குர்ஆனில் இருநூற்றி எழுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் நினைவூட்டல், ஞாபகப்படுத்தல் போன்ற கருத்துக்களைத் தரும் திக்ர், தத்கிரா, திக்ரா, தத்கீர் எனும் சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. ஏனெனில் இறைதூதுவர்கள் மனித மனங்களில் புதைந்துள்ள இறையுணர்வைத் தட்டி யெழுப்புவர்களாகவே வந்துள்ளனர். பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள்;

நிச்சயமாக இது ஒரு நினைவூட்டலாகும். விரும்பியவன் இதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும் (75:54,55)

உலகத்தார் யாவருக்கும் இஃதொரு ஞாபகமூட்டலாகும். (6:90) (நபியே!) நீர் ஞாபகப்படுத்தும். ஏனென்றால் நிச்சயமாக ஞாபகப்படுத்தல் விசுவாசிகளுக்குப் பயனளிக்கும் (52:55) அறிவாளிகளைத் தவிர மற்றெவரும் உணர்ச்சிபெறமாட்டார்கள் (2:269) அவர்கள் நினைவு படுத்திக் கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு அடிக்கடி எடுத்துரைத்தோம். எனினும் அவர்கள் அவற்றை மறந்து விட்டனர். மனிதர்களில் பலர் மிக்க நன்றி கெட்டவர்களாகவே இருக்கின்றனர். (25:50)

இவ்வுலகில் அல்லாஹ்வின் நியதிக்கேற்ப ஏனைய உயிரினங்கள் தத்தம் இயற்கைவரங்கள், உணர்ச்சிகள் என்பனவற்றைக்கொண்டு சாதித்துக்கொள்ளும் கருமங்களை மனிதன், தனது முயற்சி, விரயம் என்பனவற்றைக் கொண்டே சாதிக்கவேண்டியிருக்கின்றான். மனித படைப்பின் இரட்டைத் தன்மைகளே இதற்குக் காரணங்கள். மிருகமாகவும் மனிதனுகவும் ஒரே நேரத்தில் இருப்பதே கடுமையான போராட்டங்களுக்கு மத்தியில் அவன் முன்னேற வேண்டி இருப்பதற்குக்காரணம். மனிதன் வெறுமனே மிருகமாகமாத்திரம் இருந்திருந்தால் பலப்பரீட்சைகள் எதுவும் தேவைப்பட்டிருக்கா. ஆனுல் புத்தியுள்ள மனிதமிருகமாக இருப்பதால் அவன் பரீட்சிக்கப்படுகின்றான். நற்காரியங்களுக்கு வெகுமதிகளும் தீயசெயல்களுக்குத் தண்டனைகளும் அளிக்கப்படுகின்றான். தனக்குள்ளும் தன்னைச் சூழவுள்ள சுற்றாடலுக்குள்ளும் ஒரு சமநிலையை யேற்படுத்திக்கொள்ள மனிதன் முனை

கின்றான். இதற்கான பிரயாசை மனித உள்ளத்திலேயே ஆரம்பிக்கின்றது. பின்பு படிப்படியாகத் தன்னைச்சூழவுள்ளவற்றில் பரவுகின்றது. மனிதனுக்குள்ளும் வெளியேயும் நடைபெறும் ஒவ்வொரு முயற்சியும் இச்சமநிலையையேற்படுத்துவதற்கான பலப்பரீட்சைகளாகும்.

மனிதபடைப்பில் மிருகத்தன்மைகள் சேர்க்கப்பட்டிருப்பது உண்மை. எமது ஆத்மாவைப் பயிற்றுவதற்காக எவ்வளவு நாம் முயற்சி செய்கின்றோமோ அதைப்பொறுத்துத்தான் மனிதத்தன்மைகள் நம்முள் வெளிப்படும். எனவே, மிருகத்தனம் வாழையடிவாழையாக மனிதனிடம் இருப்பது. மனிதத்தனம் சம்பாதிக்கப்படுவது எனச் சுருக்கமாகக் கூறலாம். இதன் காரணமாகவே அல்-குர்ஆன் மனித இயற்கைபற்றி வர்ணிக்கும்போது,

"மெய்யாகவே மனிதன் பதட்டகாரனுகவே சிருஷ்டிக்கப்பட்டுள்ளான். ஏனென்றால், அவனை ஒரு தீங்கு அடைந்தால் நடுங்குகிறான். அவனை யாதொரு நன்மை அடைந்தாலோ அதனைப் (பிறருக்குப்பகிர்ந்தளிக்காது) தடுத்துக்கொள்கின்றான்." *(70:19,20,21)*

மனித உள்ளத்தின் ஆழத்தில் இருந்து எழும்பும் இவ்வுணர்வோடு மாத்திரம் அவனது ஆசைகள் நின்றுவிடா. மாறாக அவனைச்சூழவுள்ள பொருள்களிலும் அவனது பேராசை பரந்து விரியும். இவ்விடத்தில் தான் மனிதன் பலமாகப் பரீட்சிக்கப்படுகின்றான். இக்கருத்தைப் பின்வரும் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன :

"பூமியில் உள்ளவற்றை நாம் அதற்கு அலங்காரமாக்கி வைத்ததெல்லாம், அவர்களில் எவர்கள் நல்ல நடத்தையுடையவர்கள் என்பதை நிச்சயமாக நாம் சோதிப்பதற்காகவே." *(18:7)*

"உங்களில் எவர் செயல்களில் மிக்க அழகானவர் என்பதில் உங்களைச் சோதிக்கும் பொருட்டே, அவன் வாழ்வையும் மரணத்தையும் படைத்திருக்கின்றான்." *(67:2)*

உங்களில் சிலரை மற்றோரைவிடப்பதவிகளில் உயர்த்தி இருக்கின்றான். (இதன்மூலம்) உங்களுக்குக்கொடுத்தவற்றில் (நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் என்று) உங்களைச் சோதிக்கிறான். *(7:165)*

இவ்வாறான பரீட்சையொன்றே மனிதன் தனது ஆளுமையின் சக்தியை வெளிப்படுத்தவும் உள்ளிலும் புறத்திலும் ஏற்படும் மன

ஆசைகளின் தாக்கங்களைச் சமாளிக்கவும் அவனுக்கு உதவி செய்யும். பின்வரும் வசனங்கள் இக்கருத்தை இவ்வாறு வெளிப்படுத்துகின்றன:

'(விசுவாசிகளே!) உங்களில் ஜிஹாத் புரிவோர் எவர் என்பதையும் ஜிஹாதில் ஏற்படும் கஷ்டங்களை உறுதியாக சகித்திருப்போர் எவர் என்பதையும் நாம் அறிந்து விடும்வரையில், உங்களையும் உங்களைப் பற்றிய விஷயங்களையும் நிச்சயமாக நாம் சோதனைக்குள்ளாக்கியே வருவோம்.' (47:31

''(விசுவாசிகளே!) உங்களில் (மெய்யாகவே மனமொப்பி) ஜிஹாத் புரிந்தவர்கள் யாரென்பதையும், அல்லாஹ்வையும் ரசூலையும், விசுவாசிகளையும் தவிர (வேறெவரையும்) அந்தரங்க நண்பர்களாக (உங்களில்) எவரும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும் சோதித்து அறியாமல் நீங்கள் விடப்படுவீர்கள் என்று எண்ணிக் கொண்டீர்களா?'' (9:16)

இச்சோதனைகளில் மனிதன் வெற்றியடையும் போது அவனது மனிதத்தன்மைகள் வளர்ச்சியடைவதுடன் மனித முயற்சியின் இலக்காக அல்லாஹ் ஆக்கியிருக்கும் அல்லாஹ்வின் பிரதிநிதித்துவத்தை இவ்வுலகில் நிலைநாட்டும் விடயத்திலும் வெற்றியடைந்தவனாவான். இவ்வுயரிய இலக்கை அடைந்து கொள்ளும் துறையில் மனிதனைப் பயிற்றுவிப்பதற்காகவே இபாதத்துக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மனிதனுக்குத் தலை எவ்வாறு முக்கியமோ அதே போன்று எல்லா இபாதத்களுக்கும் நிய்யத் முக்கியமானது. குறிப்பிட்ட இபாதத்தை மனிதன் நிறைவேற்றுவதற்கு முன் நிய்யத் வைத்துக் கொள்வது கடமையாக்கப்பட்டிருக்கின்றது. எனவே மூச்சை உள்ளே இழுத்து விடுவதாலோ தனது தோற்றத்தை மாற்றிக்கொள்வதாலோ மாத்திரம் இபாதத் நிறைவேறாது. மாறாக உள்ளத்தை இர்மைப் படுத்துவதும் அவசியமாக இருக்கின்றது.

நாம் வணக்கங்களை நிறைவேற்றும் போது கடைப்பிடிக்கும் அங்க அசைவுகள் தீமைகளை விட்டும் மனிதனைத் தடுக்கா. மாறாக வெளிப்புற அங்க அசைவுகளுடன் சேர்ந்து ஆத்மாவும் தொழிற்படுமாயின் அதுவே உண்மையில் பயன்படும். எமது உள்ளங்களில் நல்லுணர்வுகளையும், இறைபக்தியையும் ஏற்படுத்தும். உதாரணமாக நோன்பிருக்கும் ஒருவன் பசியையும் தாகத்தையும் மாத்திரம் தாங்கிக் கொள்கின்றான். உளத்தூய்மை அவனிடம் இல்லையென்றால் ஆத்மார்த்த ரீதியான நோன்பின் பயன்களை இவனால் அடைந்து கொள்ள முடியாது.

இதுவரை நாம் அவதானித்தவற்றிலிருந்து பின்வரும் விடயங்கள் தெளிவாகியுள்ளன.

1. அல்லாஹ் மனிதனை இவ்வுலகத்தில் அவனது கிலாபத்தை நிலைநாட்டும் பிரதிநிதியாகப் படைத்திருக்கின்றான்.

2. இக்குறிக்கோளையடைந்து கொள்வதில் மிதமிஞ்சிய மனிதனது சக்தி பற்றி அல்லாஹ் மலக்குமார்களுக்கு அறிவித்துக் கொடுத்தான்.

3. இச்சக்தியைப் பூரணமாகப் பெறும் வழியில் பரிச்சயம் பெறுவதற்காகவே மனிதன் பூவுலகுக்கு அனுப்பப்பட்டான்.

4. மனித உடல் வளர்ச்சியை விட உளவளர்ச்சி தாமதமாகவே நடைபெறும். இத்துறையில் மனிதனது முயற்சி, பிரயாசை என்பன பெரிதும் வேண்டப்படுகின்றன.

தனிமனிதன் + சமுதாயம், குடிமகன் + நாடு எனும் அடிப்படையில் தொடர்பை ஏற்படுத்தும் இஸ்லாம் உலகளாவிய ஒற்றுமையை வலியுறுத்துகின்றது. விசுவாசிகள் அனைவரும் சகோதரர்களாவர் என அல்-குர்ஆன் இதனால் தான் குறிப்பிடுகின்றது. இவர்கள் அனைவரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தோர் எனும் கருத்தை அல்-குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

(விசுவாசிகளே!) நீங்கள் யாவரும் (ஒரே மார்க்கத்தைப் பின்பற்றக்கூடிய) ஒரே ('உம்மத்' — சகோதரத்துவ) சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாம். (இதில் எத்தகைய வேற்றுமையும் கிடையாது.) உங்கள் யாவருக்கும் இறைவன் நான் ஒருவனே! ஆகவே என்னையே நீங்கள் வணங்குங்கள். *(21:92)*

இவ்வுயரிய மனிதகோட்பாடின் அடிப்படையில் பார்க்கும் போது தனிமனிதன் சர்வ உலக பிரஜாவுரிமையுள்ளவனாக மாற்றப்படுவதை அவதானிக்கலாம். அவனுக்கும் ஏனைய தனது சகோதர முஸ்லிம்களுக்குமிடையே நிறம், மொழி, இனம், தரம் அல்லது குடியிருக்கும் நாடு என்பன பிரித்துக்காட்டும் பிரிவினைக்கோடுகளாக அமைய முடியா.

இன்றைய இஸ்லாமிய சமுதாயம் அதன் பொறுப்பை உணர வேண்டி இருக்கின்றது. மனித சமுதாயத்தின் ஈடேற்றத்துக்கான இறுதித்தூதுத்துவத்தைப் பெற்று நிற்கும் இச்சமுதாயத்தினரிடம் நேரிய பாதையில் மனித இனத்தை வழிநடாத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்

பட்டிருக்கின்றது. கிழக்கையும் மேற்கையும் ஆட்டிப்படைக்கும் சக்தி களின் பேரழிவில் இருந்தும் மனிதனுக்குள் மிருக உணர்ச்சிகளை இன் ஜெக்ஷன் செய்து பாய்ச்சக் கூடிய தீய சக்திகளில் இருந்தும் ஆத்ம ஈடேற்றத்தை ஒரு பொருட்டாகக் கருதாது உடலையும் புலன்களையும் வளர்ப்பதில் மாத்திரம் கரிசனைகாட்டும் மேற்கத்திய நாகரீகத்தில் இருந்தும் மனித சமூதாயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு இருக்கின்றது. இதையே அல்லாஹ்.

''(விசுவாசிகளே!) நன்மையான காரியங்களை(ச் செய்யும்படி மனி தர்களை) ஏவி, பாவமான காரியங்களிலிருந்து (அவர்களை) விலக்கி மெய்யாகவே அல்லாஹ்வை விசுவாசிக்கின்ற நீங்கள் தாம் மனிதர்களில் தோன்றிய சமூதாயத்தார்களிலெல்லாம் மிக மேன் மையானவர்கள். *(3:110)*

''(விசுவாசிகளே!) அவ்வாறே, (ஏற்றத்தாழ்வற்ற) நடுநிலையான சமூதாயத்தினராகவும் நாம் உங்களை ஆக்கினோம். ஆகவே, நீங்கள் (மற்ற) மனிதர்களுக்கு (வழிகாட்டக் கூடிய) சாட்சிகளாக இருங்கள்'' *(2:143)*

உடற்தேவைகளுடன் ஆத்மதேவைகளும், உடற்சக்திகளும் ஆத்ம சக்திகளும் எவ்வாறு ஒரு மனிதனுடைய ஆளுமையில் பின்னிப்பிணை யப்படிருக்கின்றதோ, அதேபோன்று சமூதாயமும் தனி மனிதனும் தொடர்புபட்டவர்கள். இஸ்லாம் சிறப்பானதற்கும் பொதுவானதற்கும் நற்குணங்களுக்கும் சட்டங்களுக்கும், மதத்துக்கும் உலகத்துக்கும், தனி மனிதனுக்கும் கூட்டத்துக்கும் இடையே நாம் வகுத்து வைத்துக் கொண்டிருக்கும் பிரிவுக் கோடுகளை மறுக்கின்றது. இதன் பிரதிபலனா கவே மனிதனில் மனிதத்துவம் தோன்றுகின்றது. தனி மனிதன் ஒரு அரசாங்கமாகவும் கூட்டாகவும் மதிக்கப்படும் தன்மை அப்போது தான் உருவாகும். இதுவே மனிதன் தனது பிரதிநிதித்துவத்தை அல்லாஹ்வுக்காக இவ்வுலகில் நிலை நாட்டுவதாகும்.

யாழ்ப்பாணம்

## நூலாசிரியர் பற்றி

காலி மாவட்டத்தைச் சேர்ந்த துந்துவையைப் பிறப்பிடமாகக் கொண்ட மௌலவி எம்.ஐ.அப்துர் ரஸ்ஸாக் அவர்கள் ஆரம்பக்கல்வியை துந்துவை மகாவித்தியாலயத்திலும், தர்கா நகர் ஸாஹிறாமகாவித்தியாலயத்திலும் பெற்றார். 1968 - ம் ஆண்டில் நடைபெற்ற க. பொ. த (சாதாரண) தரப்பரீட்சையில் முதற்தரத்தில் சித்தியடைந்த இவருக்கு ஜாதிக நவோதய புலமைப் பரிசில் கிடைத்தது. 1972-76 வரை இலங்கைப் பல்கலைக் கழக, வித்தியாலங்கார வளாகத்தில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்ட இவர், முஸ்லிம் மஜ்லிஸின் தலைவராகவும், சர்வவளாக முஸ்லிம் மஜ்லிஸ்செயற்குழு உறுப்பினராகவும் இருந்து சேவையாற்றியிருக்கின்றார். 1978-79-ம் கல்வியாண்டில் இவ்வளாகத்தில் பகுதி நேர விரிவுரையாளராகக் கடமையாற்றிய இவர், 1979-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிரந்தர விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். 1983-ம் ஆண்டில் அறபு லீக்கின் புலமைப்பரிசில் ஒன்றைப்பெற்று சூடான்சென்றஇவர், தலைநகரான கார்டூமில் அமைந்திருக்கும் சர்வதேச அறபு மொழி நிலையத்தில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்து அறபு மொழிப் போதனையில் முதுமாணிப் பட்டம் பெற்றார்.

சிறந்த பத்திரிகை எழுத்தாளரும் வானொலிப் பேச்சாளருமான இவர் இஸ்லாமிய தஃவாப்பணியிலும் சமூகசேவையிலும் ஈடுபாடுடையவர். க.பொ.த. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கான இஸ்லாமிய நாகரிகம் எனும் மகுடத்தில் இவர் ஆற்றிய வானொலி உரைகளும், தற்போது ஒலிபரப்பாகி வரும் இவரது 'அறபுப்பாடம்' எனும் நிகழ்ச்சித் தொடரும் நேயர் நெஞ்சங்களைக் கவர்ந்தன.

தமிழ், சிங்களம், ஆங்கிலம், அறபு முதலாம் மொழிகளில் தேர்ச்சியுடைய இவர், பல முக்கிய கருத்தரங்குகளில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

K. V. Printers, 386, Clock Tower Road, Jaffna.